

KALKI
26-5-85
ரூ-1-50
கல்கி


ஹார்லிக்ஸ் எங்களுடைய குடும்ப நண்பன். ஆபீஸிலிருந்து களைப்புடன் திரும்பிவரும் என் கணவருக்கு, காலேஜ் மற்றும் டான்ஸ் கிளாஸை முடித்துக் கொண்டு வரும் என் பெண்ணிற்கு, ஸ்கூல் முடிந்து திரும்பும் ஃபுட்பால் வீரனான என் பையனிற்கு—ஏன், தினமும் கடைகண்ணி போய் திரும்பும் எனக்கும்தான்—ஹார்லிக்ஸின் துணை ரொம்ப முக்கியம். எங்கள் குடும்பத்தின் நலனிற்காக நான் ஹார்லிக்ஸையே நம்பறேன்.
Horlicks
The Great Nourisher
சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்

(சுஜாதாவிடம் எத்தனை விஷயம் உண்டு? அவரிடம் உள்ள ஹாஸ்யம் 'வெர்படாலிடி' ஆழம், நறுக்கென்று ஒரு விஷயத்தைச் சொல்லும் சாதுர்யம் இப்படி என்னென்ன நயங்கள் அவரிடம்?

காவ்யா நூல் வெளியீட்டாளர்கள் வெளியிட்ட விவாதங்கள் விமர்சனங்கள் என்ற நூலிலிருந்து சில நறுக்குகள்...)



சுஜாதாவுடன் ஒரு உலா

* வாழ்வில் நீதி என்பது ஒவ்வொரு கணமும் மறுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மொத்த வாழ்க்கையே unfair தான். அப்படியிருந்தாலும் வாழ்க்கை ஒரு Precious ஆன விஷயம்.

* நான் இப்ப செய்யற புதுமையெல்லாம் 1947—லேயே புதுமைப்பித்தன் செஞ்சிருக்கார். அந்தப்புதுமையிலேர்ந்துநாமகத்துக்கலாம். வேறு என்ன புதுசா செய்யலாம்னு தெரிஞ்சுக்கலாம்.

* என்னைக் கேட்டால் எழுத்தில் மிகக் கஷ்டம் நகைச்சுவை என்று ஸ்டாம்புப் பத்திரத்தில் எழுதிக் கையெழுத்துப் போட்டுக் கொடுப்பேன். பத்திரிகை ஆசிரியர்கள் நகைச்சுவை எழுதச் சொன்னால் உடனே 'லொக் லொக்' என்று இருமிவிட்டு, "டாக்டர் இப்பவோ அப்பவோ என்று சொல்லியிருக்கிறார்" என்று ஸ்தலத்தை விட்டு விலகிவிடுவேன்.

* எனக்காக அல்லது வாசகனுக்காக என்று தீர்மானம் செய்து கொண்டா எழுதுகிறோம்? நோ, ஏதோ சொல்ல வேண்டுமென்ற உந்துதல்தான்.

* வெகுஜனப் பத்திரிகைகளில் இலக்கியம் படைக்க முடியாது என்று ஒரு கோஷ்டி அரசாங்க விடுமுறை நாட்களல்லாத எல்லா தினங்களிலும் திட்டிக் கொண்டிருக்கிறது.

* எனக்கு நாலாயிரம் ரூபாய் கட்டணம் என்று நெற்றியில் எழுதியிருக்கும் (எழுத்தாளர்) ஒருவர் (ஒரு கல்யாண ரிசப்ஷனில்) என்னை அணுகி "க்ளாட் டு மீட் யூ! நான் உங்க கதைகளைப் படிக்கிறதில்லே!"

"அப்ப எதுக்கு கிளாட் டு மீட் யூ!"

"என் ஒய்ஃப் தான் படிப்பா! அதோ அங்கே தெரியறா பாருங்கோ!"

அவர் காண்பித்த திசையில் 300 ஒய்ஃபுகள்.

* அமெரிக்காவில் வாழும் தமிழர்கள் எல்லோரும் அவசரத்தில் இருக்கிறார்கள். ஸப்வேயைத் துரத்தும் அவசரம். டிராபிக்கைத் தவிர்க்கும் அவசரம். வீடியோ பார்க்கும் அவசரம். பணம் சேர்க்கும் அவசரம்.

* பிரபலம் என்பதே எல்லோரும் விரும்புவது. இதில் ஏதும் தப்பில்லைதான். இது ஒருவிதமான உந்துசக்தி. ஆழமாக யோசித்தால் ஏதாவது ஒருவிதத்தில் நான் தனிப்பட்டவன். மற்றவர்களிடமிருந்து வேறுபட்டவன் என்று நிரூபிக்க மரணத்தை வெல்லும் ஆசை தான் பிரபலம்.

* நான் ஒரு மனித எறும்பல்ல, கொஞ்சம் வித்தியாசப்பட்டவன் என்று ஏதாவது ஒரு விதத்தில் காட்ட விரும்புகிறோம். அதற்காகத்தான் ஒருவன் பின் பக்கமாக முந்நூறு மைல் நடக்கிறான். கவிதை எழுதுகிறான்; கென்னடியைக் கொல்கிறான். ஒருத்தி இருபத்து நான்கு மணி நேரம் குச்சுப்புடி ஆடுகிறாள், அல்லது பாம்புடன் வாழ்கிறான்.

* தி. ஜானகிராமனை என் இளமைக்காலத்தில் ஒரு இலக்கியக் கூட்டத்தில் முதன் முறை சந்தித்தேன். அதாவது அவரைத் தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரு முறை என் பக்கம் திரும்பி அவர்புன்னகைத்தபோது அதைஎடுத்துப் பைக்குள் போட்டுக் கொண்டு திருப்தியுடன் திரும்பினேன்.

தொகுப்பு: கிரீஷ்

அமெரிக்க ஜனாதிபதி உறங்கும் போது பயங்கரக் கனவு ஒன்றைக் காண்கிறார். நியூக்ளியர் அக்னி, புயலாக வீசி ஒரு நவீன நகரம் சர்வ நாசமாகிறது. பதறியடித்து ஜனாதிபதி கண் விழிக்கிறார். சமீபத்தில் வெளி வந்திருக்கும் ட்ரீம் ஸ்கேப் **(Dream scape)** இப்படி ஆரம்பமாகிறது.

செயற்கை முறையில் ஒருவரைத் தூங்க வைத்துக் கனவு காணச் செய்வது. அதே முறையில் தூங்கும் இன்னொருவரை முதலாவது நபரின் கனவில் பிரவேசிக்க வைப்பது. கனவுகளை கம்ப்யூட்டர் கண்ட்ரோல் மூலம் தம்மிச்சைக்கு உருவாக்கி, கனவில் ஒருவரைக் கொல்லச் செய்வது, கொலையுண்ட இதய அதிர்ச்சியில் அவன் செத்து விடுவான்.

இப்படி ஒரு சயன்ஸ் ப்ராஜெக்ட்.

அடடா, இப்படி கனவு சீன்களாக ஒரு சான்ஸ் கிடைத்தால் ஹீரோ ஹீரோயின்களை என்னமாய் போட்டுப் புரட்டி எடுக்கலாம் என்று தமிழ் சினிமா டைரக்டர்கள் ஆதங்கப்படலாம்.

ட்ரீம் ஸ்கேப் கனவுகளில் தேவதை உடை, டான்ஸ், கட்டிப்புரளல், ம்ஹூம் ஒன்றுமில்லை.

ஜனாதிபதியைக் கனவிலேயே கொலை செய்யத்திட்டமிடுகிறது ஒருகும்பல். கனவில் கொலை செய்ய வந்தவனை ஜனாதிபதியே கொன்று விடுகிறார். அதை ஜனாதிபதியே செய்யலாமா என்று சற்று மனசு நெருடுகிறது. சுறுசுறுப்பான திரைக்கதை.

புத்தம் புதிய வாலிபால் மாதிரி துள்ளித் துள்ளி குதிக்கும் ஹீரோ. அந்த சயன்ஸ் ப்ராஜெக்டில் ஈடுபட்ட ஒரு பெண் உதவியாளர்.

கனவு ஸீனில் ஒரே ஒரு முத்தம்தான். மின் வீச்சில் வந்து போகிறது. நோ மோர் செக்ஸ்.

ஒலிப்பதிவும் பின்னணி இசையும் இன்னும் நன்றாயிருந்திருக்கலாம்.

கனவுலக காட்சிகள் 'ஏ' க்ளாஸ்.

ஓடும் ரயிலில் ஒரு கான்ஸ்டபிளின் இதயத்தை டாமிரே தன் இரும்பு நகங்களால் பிடுங்கி எடுத்து காதருகே வைத்து அதன் துடிப்பைக் கேட்பது—

அந்தரத்திலிருந்து ஓர் இரும்பு கர்டரில் பிடி நழுவி கட்டிட பாதாளத்தில் விழும் கட்டம்—

அக்கினிக் காடான ஒருநகரத்தில் அலெக்ஸையும் ஜனாதிபதியையும் நாய்கள் துரத்துவது—

ஓடும் ரயிலில் கனவுலகில் முத்தமிட்டுக் கொள்ளும்போதுதோன்றியடிக்கெட்இன்ஸ்பெக்டர் படம் முடியும் போது நிஜ ரயில் பயணத்திலும் தோன்றக் காதலர்கள் ஒருவரை ஒருவர் அதிசயமாகப் பார்த்துக் கொள்ளும் முத்தாய்ப்புக் காட்சி— இப்படி அடுக்கிச் சொல்ல பல காட்சிகள்.

ஆபாசமில்லாமல் கற்பனையைக் கிளறும் நல்ல படம். தாராளமாய்ப் பார்க்கலாம்.

— ஜெகன் மோஹன்

கனவை ஊடுருவும் நனவுகள்





அமைச்சரோடு

அ.தி.மு.க. எம்.எல்.ஏ

மோதல்



• அமைச்சர் கோவேந்தன்

கடந்த 10-ம் தேதியன்று மேட்டூருக்கு வருகை தந்திருந்தார் பிற்பட்டோர் மற்றும் மீன் வளத்துறை அமைச்சர் கோவேந்தன். மேட்டூரைச் சுற்றி பதின்மூன்று மீன் கொள்முதல் நிலையங்கள் இருக்கின்றன. ஏதாவது ஒரு நிலையத்தைப் பார்வையிட வேண்டும் என்று கோவேந்தன் விரும்பினார்.

மேட்டூர் தொகுதி எம். எல். ஏ. நாச்சிமுத்துவுடன் மேட்டூரிலிருந்து 25 கி.மீ. தொலைவிலுள்ள ஒட்டர்காடு என்ற இடத்திலுள்ள மீன் பிடிக்கும் மற்றும் விற்பனை நிலையத்துக்குச் சென்றார். கூட வந்த எம். எல். ஏ. பேசாமல் இருக்காமல் கொள்முதல் அதிகாரி எடை போட்டு வைத்திருந்த மீனை மீண்டும் எடை போட்டுப் பார்க்கச் சொன்னார்.

எடை போட்டால் அரைக் கிலோ குறைந்தது. ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கில் விற்பனையாகும் இந்த நிலையத்தில் எடை குறைப்பு ஊழலால் மாதத்துக்கு லட்சத்துக்கு மேல் ஊழல் பேர்வழிகளுக்கு வருமானம் வர வாய்ப்பு உண்டாம். மந்திரிக்கு விஷயம் புரியவே உடனே கொள்முதல் அதிகாரி சஸ்பெண்ட்.

இந்தச் சம்பவம் நடந்த போது எம். எல். ஏ. உடன் இருந்தவர்தான். ஆனால் அதே எம்.எல்.ஏ. மாலையில் சஸ்பெண்ட் உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று கூறியது அமைச்சரைத் திகைப்பில் ஆழ்த்தியது. அந்தக் குறிப்பிட்ட அதிகாரி, தமக்குப் பிடிக்காத ஒரு குலத்தைச் சேர்ந்தவர் என்று நினைத்துக் காலையில் ஒன்றும் பேசாத எம். எல். ஏ., மாலைக்குள் அந்த அதிகாரி தமக்கு வேண்டப்பட்டவர் என்று தெரிந்தவுடன் சஸ்பெண்ட் உத்தரவை ரத்து செய்யச் சொன்னார் என்று மீன் இலாகா ஊழியர்கள் கூறுகிறார்கள்.

இந்தக் கோரிக்கையை மட்டும் வைத்தால் தனிப்பட்ட நபருக்காகப் பரிந்து சொல்வது போல் ஆகிவிடும் என்று கூடவே மேட்டூரில் உள்ள மீன்பிடிப்போர் கூட்டுறவுச் சங்கத்தை வாரியமாக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டாராம் எம். எல். ஏ. ஆனால் கோவேந்தன் இந்த இரண்டு கோரிக்கைகளையும் ஒப்புக் கொள்ளவில்லை. "நீதானேய்யா தப்பு கண்டுபிடித்தது? இதுபோல ஊழல் நடந்தால், ஆட்சிக்கு ஏன் கெட்ட பெயர் வராது? தலைவரிடம் சொல்லலாம். அவர் என்ன சொல்கிறாரோ அதன்படி நடக்கலாம்" என்றாராம் அமைச்சர். உடனே கோபம், பொத்துக் கொண்டு வந்து விட்டது எம். எல். ஏ.க்கு. அந்த வட்டாரத்திலேயே சர்வாதிகாரி போல (இதுபோன்ற ஆட்களுக்குத்தான் அ. தி. மு. க. வில் டிக்கட் கொடுப்பார்களோ?) விளங்கிக் கொண்டு வரும் அவர் அமைச்சரைப் பார்த்து, "எதுக்கெடுத்தாலும் தலைவர், பெரிய்ய தலைவர், நீயெல்லாம் ஏன்யா அமைச்சரா வந்து கழுத்தறுக்கறே" என்று ஏசினாராம்.

அமைச்சர் பொறுத்துப் பார்த்தாராம். எம். எல். ஏயின் கூச்சல் அதிகமாகிக் கொண்டே வந்தது. எம். எல். ஏ. வின் ஆதரவாளர்கள் வேறு திரண்டுவிட்டார்கள். "என் ஏரியாவில் வந்து எனக்கெதிராகவே பேசுகிற இவனை என்ன பண்ணுகிறேன் பார்" என்று கூறியதோடு மட்டுமில்லாமல் கையை ஓங்கவும் ஆரம்பித்து விட்டாராம் எம். எல். ஏ. நல்ல வேளையாக அமைச்சரின் பாதுகாப்பு அதிகாரியும் உதவியாளரும் நிலைமைச் சமாளித்தார்கள்.

எம். எல். ஏ. நாச்சிமுத்து செல்வாக்கும் செல்வமும் உள்ளவர் என்றாலும் இப்படி நடந்து கொண்டிருக்க வேண்டாம் என்று சம்பவத்தின்போது அருகிலிருந்தவர்கள் கூறுகிறார்கள்.

அமைச்சரும், எம். எல். ஏ. யும் சென்னை வந்து எம். ஜி. ஆரைச் சந்தித்து விஷயத்தைச் சொல்லியிருப்பதாக மக்கள் பேசிக் கொண்டாலும் எம். எல். ஏ. சம்பவத்துக்குப் பின்னர் சென்னைக்கு இதுவரை (16.5.85) வரவில்லை என்று தெரிகிறது. அமைச்சரோ முழு விவரத்தையும் முதல்வரிடம் கூறிவிட்டாராம்.

எம். ஜி. ஆர். கட்சியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறாரா இல்லையா என்பதற்கு இந்த விஷயத்தில் அவர் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார் என்பது ஒரு எடுத்துக் காட்டாக அமையும்.

படம்: சுபா

— தில்லப்பா

* ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு.



இந்த வருஷம் விலைவாசியை நாலுபுள்ளி கட்டுப்படுத்தலாம்னு நினைக்கிறேன்.

* பிரான்ஸ்.



முதலீடு மைனஸ்லே போயின் பூருக்கு அதை பிளஸ் ஆக்கப் போறேன். அப்ப விலைவாசி 5 புள்ளி ஏறத்தானே சார் செய்யும் வி காண்ட் ஹெல்ப்!

* பிரிட்டன்.



நான் என்ன பண்ணினாலும் தானு 5 புள்ளி விலைவாசி ஏறத் தான் போகுது!

இந்த ஆண்டு விலைவாசி

* இத்தாலி.



ஹா, நம்ம கதை வேற! விலைவாசியை 2 புள்ளி கட்டுப் படுத்தப் போறேன்.

* கனடா.



ஹாய், அஞ்சுப் புள்ளிக்கு விலைவாசியை இறக்கிக் காட்டறேன் இந்த வருஷம்.

* ஜப்பான்.



பலதொழில்களிலே பணத்தை முதலீடு பண்ண வேண்டியிருக்கு! 200 புள்ளி முதலீடு அதிகம் பண்றேன், என்ன சார் செய்யறது விலைவாசி மூணு புள்ளியாவது ஏறத்தான் வேண்டியிருக்கு.

* யு. எஸ். ஏ.



யுத்தத் தளவாடச் செலவு அதிகம், ஸ்டார் வார்ஸ் செலவு இருக்கே! அப்படியொண்ணும் பிரமாதமா விலைவாசி ஏறிடாது கம்மா இரண்டு புள்ளிதான்.

* இந்தியா.



இ ஆம் சாரி, நான் இப்பத்தான் ஆட்சிக்கு வந்திருக்கேன்.

எப்படி?

நன்றி: தி ஜெர்மன் ட்ரிப்யூன்

அத்வைத வித்யாசார்ய மஹாராஜ ஸாஹேப் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி, கும்பகோணம்

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களால் 1542ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து நடந்து வரும் **கும்பகோணம் "ராஜா வேத காவ்ய பாடசாலை"**யை மேற்படி ஸமிதியானது தாம்போல் இயங்கி காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 75 மாணுக்கர்கள் வேதாத்யாயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒருநாள் உணவளிக்க சுமார் ரூ. 200/– ஆகிறது. இந்த தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 2000/– மூலதனம் ஏற்படுத்தியோ (Or) அவ்வப்போது ரூ. 200/– அனுப்பியோ, ஒரு குறிப்பிட்ட தினத்தில் ஸமாராதனை நடத்தும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம். நன்கொடைக்கு 80G விதியின் படி வருமானவரி விலக்கு உண்டு.

எமது பிரசுரங்களின் வருவாய் பூராவும் மேற்படி பாடசாலையின் அபிவிருத்திக்கு மாத்திரமே உபயோகப்படுத்தப்படுகிறது.

எமது பிரசுரங்கள்

1. ரிக்வேத ஸம்ஹிதா – (10 மண்டலங்கள்) நாகர அக்ஷரம்
   விலை ரூ. 150/– + ரூ. 10/– தபால் செலவு — ஆக ரூ. 160/–

2. ஸாம வேத அஷ்டப்ராம்மணம் – (3 பாகங்கள்) நாகர அக்ஷரம் ஸாம வேத சிக்ஷைகள் திருவிசநல்லூர் மஹா மஹோ உபாத்யாய ஸ்ரீ ராமசுப்பா சாஸ்திரிகள், மன்னார்குடி மஹா மஹோ உபாத்யாய ஸ்ரீ ராஜு சாஸ்திரிகள் இவர்களால் இயற்றப்பட்ட ஸாமவேத ஸ்வர விமர்சனம், ஸாமவேத உத்கர்ஷ மஞ்சரி இவைகளுடன் கூடியது. சுமார் 1500 பக்கங்கள் கொண்டது
   விலை ரூ. 200/– + 10/– தபால் செலவு — ஆக ரூ. 210/–

3. ஆபஸ்தம்ப பூர்வ அபர ப்ரயோகம் – (க்ரந்த அக்ஷரம்)
   விலை ரூ. 60/– + தபால் செலவு ரூ. 5/– ஆக ரூ. 65/–

இதர பிரசுரங்கள்

4. ஸ்ரீமத் ராமாயணம் – (8 பாகங்கள்) நாகர அக்ஷரம்
   தமிழ் பத பதார்த்தத்தோடு – அயோத்யா காண்டம் முதல் பாகம் நீங்கலாக
   விலை ரூ. 150 + ரூ. 25 தபால் செலவு — ஆக ரூ. 175/–

N.B.:– இதை லாரி மூலம் அனுப்பினால் செலவு குறையும்.

5. மேற்படி ஸுந்தர காண்டம் மட்டும் – 1 பாகம்
   விலை ரூ. 50 + ரூ. 5 தபால் செலவு — ஆக ரூ. 55/–

6. ஸ்ரீமத் ராமாயணம் – தமிழ் மொழி பெயர்ப்பு (5 Volume கொண்டது)
   விலை ரூ. 100 + தபால் செலவு ரூ. 15 — ஆக ரூ. 115/–

விபரங்களுக்கு:— மஹாராஜ ஸாஹேப் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி, கும்பகோணம்.

N.B.: உபநயனமான 9 வயதுக்குட்பட்ட ரிக், ஸாம வேத மாணவர்களைச் சேர்த்துக்கொண்டு அவர்களுக்கு ஆகாரம், இருப்பிடம் முதலிய சகல சௌகர்யங்களும் செய்து கொடுத்து வித்யாப்யாஸம் செய்து வைக்கப்படும். இதற்கான விபரங்களுக்கு 1ரூ. தபால் தலையுடன் கீழ்க்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். விண்ணப்பங்களை மே 31ம் தேதிக்குள் அனுப்பி வைக்கக் கோருகிறோம்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய விலாசம்:—

சேர்மன்,

ராஜா வேத காவ்ய பாடசாலை, கும்பகோணம்.

குஜராத்தில் என்ன குழப்பம்?



• குஜராத் சமாச்சாரின் நாசமடைந்த அச்சு இயந்திரம்.

குஜராத்தில் என்ன குழப்பம்? நிலைமையை நேரில் அறிந்து வர அகமதாபாத் சென்று, பலரைச் சந்தித்து, கலவரப் பகுதிகளைப் பார்வையிட்டுத் திரும்பினார்

எஸ். சந்திரமௌலி.

அமைதியான அகமதாபாத் இன்று பதட்டமாகி இருக்கிறது. சில பகுதிகளில் இரவில் ஊரடங்குச் சட்டம்; இன்னும் சில பகுதிகளில் பகலிலும் கூட. நகர் முழுவதும் போலீஸ் மயம். கையில் துப்பாக்கியுடன் நகரை இருபத்தி நாலு மணி நேரமும் லாரிகளில் சுற்றி வருகிறது ராணுவம்.

இட ஒதுக்கீட்டுப் பிரச்னை

குஜராத்தில்ஷெட்யூல்ட்பிரிவினர்மற்றும் பழங்குடியினருக்கு முறையே 7 சதவீதமும், 14 சதவீதமும் வேலை வாய்ப்பிலும், உயர் கல்வியிலும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தவிர பிற்படுத்தப்பட்டவர்களுக்கான ஒதுக்கீடு 10 சதவீதமாய் இருந்தது. இதை முதலமைச்சர் மாதவ்சிங் சோலங்கி 28 சதவீதமாய் உயர்த்தினதால்தான் பிரச்னையே வந்தது. இந்த ரிசர்வேஷன் அதிகரிப்பை எதிர்த்து குஜராத் நவரசனு சமிதி-(மாணவர்கள் சங்கம்) குஜராத் வாலி மகாமண்டல் (பெற்றோர்கள் சங்கம்) இரண்டும் குரல் கொடுத்தன; குஜராத்தில் நடக்கவிருந்த பொதுத்தேர்வுகளை நடக்கவிடாமல் பண்ணிவிட்டால், அதுவே தமக்கு மிகப்பெரிய வெற்றி என இவர்கள் கருதி, பள்ளிக் கூடங்களுக்குச் சென்று கலாட்டா செய்தது நவரசனு சமிதி.

வளையல் பொட்டலங்கள்

கிளர்ச்சியில் கலந்து கொள்ளாதவர்களுக்கு வளையல் பொட்டலங்களை அனுப்பி அவர்களைச் சீண்டினர். அதே சமயத்தில் அரசாங்கமும் பரீட்சைகளைத் தள்ளிப் போடுகிற அறிவிப்பை வெளியிட்டது. பள்ளிக் கூடங்கள் மூடப்பட்டன.



* கலவரத்தின் கொடிய விளைவு.



* ஒரு மூன்று மாடிக் கட்டிடத்தின் கதி.

ஏன் இந்த ரிசர்வேஷன் உயர்வு?

குஜராத்தில் 1980—81 வாக்கிலும் இட ஒதுக்கீடு விஷயமாய் பெருங்கிளர்ச்சி நடந்தது. அதை ஒட்டி அமைந்த ஜஸ்டிஸ் ரானே கமிஷன் அக்டோபர் 83ல் அரசுக்குத் தந்த அறிக்கை சமீபத்திய குஜராத் சட்டசபைத் தேர்தல் வரை தூங்கிக் கொண்டிருந்தது. தேர்தல் சமயத்தில் தேர்தல் ஸ்டண்டாக சோலங்கி ரானே கமிஷன் அறிக்கைப்படி 10 சதவீதத்திலிருந்து 28 சதவீதமாய் அதிகரிக்கவிருப்பதாய் தெரிவித்தார். மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தேர்தல் வாக்குறுதியை செயல்படுத்தவிருப்பதாய் அறிவித்தார். ரானே கமிஷன் அறிக்கை ஜாதியை விட, பொருளாதார நிலைக்கே சலுகையில் முதலிடம் என்று குறிப்பிட்டிருந்தது. இதைத் துளியும் கண்டு கொள்ளாமல், பிற்படுத்தப்பட்ட மக்களின் தொகை மாநிலத்தின் மக்கள் தொகையில் பிற்படுத்தப்பட்டோர் 36 சதவீதம் என்று குறிப்பிட்டிருந்த அறிக்கையின் ஒரு பகுதியை மட்டும் செயல்படுத்த முடிவெடுத்தது காங்கிரஸ் அரசு. இதில் தான் வந்தது விபரீதம்.

எதிர்ப்பாளர்கள் என்ன சொல்கிறார்கள்?

வாலி மகாமண்டல் தலைவரான சங்கர் பாய் பட்டேல், நவரசனு சமிதியின் டாக்டர் கோரங்ஷா ஆகியோரைச் சந்தித்தபோது, இரண்டு ஆண்டுகளில் தொழிற் கல்லூரிகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 31 சதவீதத்தில் பாதிக்கு மேலே (புள்ளி விவரம் தருகின்றனர்) சேர ஆள் இல்லாமல் காலியாக இருந்தது. அதே சமயம் எஃப். ஸி. கோட்டாவில் பல புத்திசாலி மாணவர்களுக்கும் இடம் கிடைக்கவில்லை. இது எப்படி நியாயம்?

ஒரு குடும்பம் சலுகையை ஒரு முறைதான் பயன்படுத்த வேண்டும். அப்புறம் தகுதியே முக்கியம். முதல் இரண்டு குழந்தைகளுக்கு மட்டுமே இந்தச் சலுகைகள், இப்படி சட்டத் திருத்தங்கள் கொண்டு வரலாம். பிற்படுத்தப்பட்டோருக்கு படிக்க வசதிகள், இலவச புத்தகங்கள், என சௌகர்யம் செய்து கொடுத்து விட்டு, பள்ளியிறுதி வகுப்பில் திறமையைக் கொண்டுதான் மேலே போக வேண்டுமென்று திருத்தம் கொண்டு வரலாம்.

நிருபர்: "மற்ற மாநிலங்களை விட குஜராத்தில் ஒதுக்கீடு சதவீதம் குறைவுதானே! மற்றவர்கள் சும்மா இருக்க நீங்கள் மட்டும் ஏன் கிளர்ச்சி செய்கிறீர்கள்?

பதில்: மற்றவர்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்ற காரணத்துக்காக, நாங்களும் சும்மா இருக்க வேண்டுமென்று எப்படிச் சொல்லலாம்? அவர்கள் சும்மா இருப்பதே தப்புதான். இந்த பிரச்னை தேசிய அளவில் அலசப்பட்டு, சட்டங்களைத் திருத்த வேண்டும்.

ஸ்பெஷல் ரிப்போர்ட்



சௌத்ரி



* முதல்வர் சோலங்கி.



* ஷ்ரேயன்ஸ்ஷா
— குஜராத் சமாச்சாரின் ஆசிரியர்.

திசை திரும்பிய கிளர்ச்சி!

இட ஒதுக்கீடு சம்பந்தமாய் ஆரம்பித்த கிளர்ச்சிகள், சில நாட்களில் போலீஸு்க்கும், பொது மக்களுக்கும் இடையே மோதலாய் உருவெடுத்தது. மாணவர்கள் அட்டகாசங்களைத் தாங்க முடியாமல் போலீஸ் கண் மூடித்தனமாய் தாக்கியதன் விளைவே இது. போலீஸ் அத்து மீறல்கள் பற்றி — போலீஸாரே பொதுச் சொத்துக்களை அழிப்பதாயும், பெண்களிடம் தகாத முறையில் நடந்து கொள்வதாயும் செய்திகள் வந்தன.

கொளுத்தப்பட்ட குஜராத் சமாச்சார்

போலீஸ் அத்து மீறலகள் போட்டோக்களுடன் வெளியிட்ட முதலாவது பத்திரிகை 'குஜராத் சமாச்சார்'. இதன் நிர்வாகத்துக்கும் சோலங்கிக்கும் ரொம்ப காலமாகவே லடாய். தவிர சோலங்கியின் நெருங்கிய நண்பரான முருகேஷ் என்பவர் 46 லட்சம் அமெரிக்க கரன்ஸியுடன் கஸ்டம்ஸில் மாட்டிக் கொண்டபோது பிடிபட்ட பணம் சோலங்கியுடையது என்று குஜராத் சமாச்சார் எழுதியதாம்.

இந்தக் காரணங்களால் கடந்த ஏப். 22ம் தேதி போலீஸார் பத்திரிகையின் அச்சகத்தை நாசப்படுத்தினர். அங்கிருந்த 2 கோடி ரூபாய் மதிப்புள்ள கம்ப்யூட்டரைஸ்டு ஆப்செட் அச்சு மிஷினை தவிடு பொடியாக்கி விட்டனர். 50 லட்சம் பெறுமானமுள்ள இன்னொரு அச்சு மிஷினின் கதியும் அதுவே.

கிடங்கில் ஸ்டாக் பண்ணியிருந்த சுமார் 40 லட்சம் மதிப்புள்ள நியூஸ் பிரிண்ட் காகிதம் சாம்பல். நஷ்டம் சில கோடிகள். இது குஜராத்தையே ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது.

நிருபர்கள் மீது தாக்குதல்!

இது ஒருபுறமிருக்க, போலீஸ்காரர்களுக்கு பத்திரிகை நிருபர்களைக் கண்டாலே வெறுப்பு என்கிற நிலை. நிருபர்களைக் கண்டாலே தாக்க ஆரம்பித்தனர். தாக்கப்பட்ட பத்திரிகைகள் லிஸ்ட்டில் எக்ஸ்பிரஸும், வெஸ்டர்ன் டைம்ஸும் உண்டு.

புதிய திருப்பம்!

இட ஒதுக்கீடு கிளர்ச்சிக்காரர்கள், கிளர்ச்சி திசை மாறியதும் தமக்கும், நடக்கிற வன்முறைகளுக்கும் சம்பந்தமில்லை என அறிக்கை விட்டார்கள். இந்த நேரத்தில் இது இந்து — முஸ்லீம் மோதலாய் மாறியது.

இந்து. முஸ்லீம்கள் நிறைந்து வாழும் ஆமதாபாத் நகரில், காடியா, தரியாபூர், பாபுநகர், ராக்யில், கோமதிபூர் போன்ற பகுதிகளில் கட்டுப்பாடில்லாத கலவரம் நடந்தது.

ஆயுதங்கள் எந்த விதக் கட்டுப்பாடுமின்றி பயன்படுத்தப்படுகின்றன. போலீஸ் ஆயுதங்கள் உண்டா என்று வீடு வீடாகச் சென்று சோதனை செய்கிறது. வீட்டில் ஆண்கள் இல்லாததால் பெண்கள், போலீஸாரை வீட்டினுள் நுழைய விடாமல் தடுக்கின்றனர்.

இதை ஒரு சந்தர்ப்பமாய் பயன்படுத்திக் கொண்டு, போலீஸ்காரர்கள் கண்டபடி டீ.வி. முதலியவற்றை உடைப்பது, மற்றவற்றை நிர்மூலமாக்குவது, பெண்களுடன் வம்பு செய்து, தவறான காரியங்களில் ஈடுபடுகிறார்கள் என்றார் ஒரு அகமதாபாத் பத்திரிகை நிருபர்.

நினைவூட்டுகிறோம் : அமரர் கல்கி நினைவுச்



பிச்சைக்காரன் (1): ''அமெரிக்காவிலே பிச்சை எடுக்கிற உன் மகன் உனக்கு என்ன வாங்கி அனுப்பறான்?''

பிச்சைக்காரன் (2): ''இந்தத் திருவோட்டைத் தான் அனுப்பினான். இதிலுள்ள பட்டனை அமுக்கினால், 'அம்மா தாயே, பிச்சை போடம்மா, ஐயா சாமி' என்று குரல் கேட்கும். நான் தொண்டைத் தண்ணி வத்த கத்த வேண்டாம்.

— எஸ். விஜயா சீனிவாசன்

எதிர்க்கட்சித் தலைவர் என்ன சொல்கிறார்?

குஜராத் சட்டசபையின் எதிர்க்கட்சி (ஜனதா) தலைவரும், முன்னாள் முதல்வருமான சிம்மன் பட்டேலைச் சந்தித்தபோது. அவர் சொன்னார்: ''காங்கிரஸின் இந்த முடிவை நாங்கள் ஆரம்பம் முதலே எதிர்த்து வந்திருக்கிறோம். இன்றைக்கு நிலைமையைச் சமாளிக்க ராணுவத்தை உதவிக்கு அழைத்திருக்கிறது.

காங்கிரஸின் உட்கட்சிப் பூசலின் விளைவுதான் இது. சோலங்கியை அவரது கட்சியினர் பகிரங்கமாய் எதிர்க்கத் துணியவில்லை. ஆனால் அவருக்கு எதிராக ஏதாவது செய்ய விரும்புகிறார்கள். அதுவே இந்த வன்முறைக்குக் காரணம்.

அரசாங்கம் வேடிக்கை பார்க்கிறது

குஜராத்தில் அமைதி நிலவ நாங்கள் ஒத்துழைக்கத் தயார். ஆனால் இந்த அரசாங்கமோ, எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காமல் வன்முறையை வேடிக்கை பார்க்கிறது.

பின்னணி என்ன?

ஒரு பிரபல ஆங்கில நாளிதழின் செய்தி ஆசிரியரைச் சந்தித்து, இதற்கெல்லாம் பின்னணியாக இருந்து இயக்குவது யார்? என்று விவாதித்த போது, பல தகவல்கள் தெரிய வந்தன.

முஸ்லீம்கள் இந்த இட ஒதுக்கீட்டுப் பிரச்னையில் கிளர்ச்சிக்காரர்களுடன் ஒத்துழைக்கவில்லை. அதனால் மார்ச் 18ம் தேதி 'குஜராத் பந்த்' பரிபூரண வெற்றியடையவில்லை. மேல் மட்டத்தினரின் கோபத்தைத் தூண்டிய இதுவே இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் இடையிலான மோதலாக உருவெடுத்தது.

இவற்றுக்கிடையில்போலீஸுக்கும்,சமூக விரோதிகளுக்கும் 'மாமூல்' விஷயத்தில் ஏற்பட்ட மோதல்களும் சேர்ந்து கொண்டன. இத்தகைய மோதல்கள் இந்து—முஸ்லீம்கள் நிறைந்த பகுதிகளில் நடந்ததால், பிரச்னை பூதாகாரமாய் உருவெடுத்தது.

இன்னொரு விஷயமும் தெரிய வந்தது. 72ல்தான் முதல் தடவையாக ஒரு தாழ்த்தப்பட்டவர் துணை அமைச்சராய் நியமிக்கப்பட்டார். 80ல் முதலமைச்சராய்ப் பொறுப்பேற்ற மாதவ்சிங் சோலங்கி, ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். இன்றைய குஜராத் உள்துறை மந்திரியான அர்ஜுன்சிங் சௌத்திரியும் தாழ்த்தப்பட்ட இனத்தவரே..

இன்றுள்ள குஜராத் அமைச்சரவையில் உயர் ஜாதிக்காரர் ஒரே ஒருவர்தான். இப்படியாக உயர் ஜாதியினர் கையிலிருந்த ஆட்சியும், அதிகாரமும் படிப்படியாக அவர்கள் கையிலிருந்து நழுவி விட ஆட்சியும், அதிகாரமும் இவர்களுடைய கட்டுப்பாட்டில் இல்லாததை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஏதாவது செய்து அரசாங்கத்தைக் கவிழ்க்க முயல்கிறார்கள்.

தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்டோரின் அமோகமான ஆதரவு சோலங்கிக்குத்தான். எனவே ஆட்சி கவிழ்ந்து தேர்தல் வந்தால் சோலங்கிக்கு வெற்றி உறுதி. இந்தப் பொதுத் தேர்தலில், காங்கிரஸ் அதிக இடங்களை பெற்றது நினைவிருக்கலாம்.

சோலங்கி என்ன சொல்கிறார்?

முதலமைச்சர் சோலங்கி நிருபர்களைச் சந்தித்த போது, உடனிருந்த நமது நிருபர் முதல்வரிடம் கேள்வி கேட்டார்.

நிருபர்: இந்தப் பிரச்னையால் குஜராத்தில் ஆட்சி மாற்றம் நிகழ வாய்ப்பு உண்டா?

முதலமைச்சர்: நிச்சயம் இல்லை. பிரதமர் ராஜீவ்தான் ரொம்பத் தெளிவாகச் சொல்லி விட்டாரே! எதிர்க் கட்சிகள் ஏதாவது செய்து காங்கிரஸ் ஆட்சிக்குத் தொல்லை தந்து கொண்

சிறுகதைப் போட்டி ; முடிவு தேதி ; ஜூன் 15

டிருப்பார்கள். அத்து மீறி நடந்து கொண்ட போலீஸார் மீது விசாரணைக்குப் பின் உரிய தண்டனை வழங்கப்படும். அமைதியை நிலை நாட்ட எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப் பட்டு வருகின்றன. விரைவில் பழையபடி குஜராத்தில் அமைதி நிலவும்.

ரோஸ்டர் விஷ்டம்

குஜராத் அரசாங்கத்தில் பிரச்னைக்குரிய இரண்டாவது விஷயம் ரோஸ்டர் முறை. இந்த முறைப்படி ஒரு தாழ்த்தப்பட்ட வகுப் பினர் மேல் பொறுப்பில் பல வருட சர்வீஸ் உள்ள தாழ்த்தப்பட்டவரல்லாத ஊழியரை விட படு சீக்கிரமாய், பிரமோஷன் பெற்று அவருக்கே உயர் அதிகாரியாய் வந்து விடுகிற வாய்ப்பு உண்டு. இதற்கு அரசாங்கத்தின் பல்வேறு மட்டத்திலும் கடுமையான எதிர்ப்பு எழுந்தது. ஸ்டிரைக் அறிவிப்பு வரவே அரசு இதை வாபஸ் பெற ஒப்புக் கொண்டது.

எப்போதுதான் இவை ஓயும்?

மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் இட ஒதுக்கீட்டு எதிர்ப்பு கிளர்ச்சியாக ஆரம் பித்து. பிறகு போலீஸ் பொது மக்கள், பத் திரிகைகள், இந்து. முஸ்லீம் என்று பல்வேறு மோதல்களாய் நடக்கிற வன்முறைச் சம் பவங்கள் இப்போது ஓயும் என்று தோன்ற வில்லை.

ராணுவத்தின் கையில் ஒப்படைத்தால், நிலைமை சீராகி விடும் என்று சொல்லப் படுகிறது. ஆனால் முதலமைச்சர் அது தன் இயலாமையைக் குறிக்கும் என்று கருதுகிறார்.

சோலங்கி, இட ஒதுக்கீடு 86 வரை இல்லை என்று சொல்லிவிட்டார். ரோஸ்டர் முறை வாபஸுக்கும் ஒப்புக் கொண்டு விட்டார். தவிர மத்திய உள்துறை அமைச்சர் சவான், "இட ஒதுக்கீடு விஷயத்தில், மத்திய அரசு, தேசிய அளவில் ஒரு தீர்மானமான முடிவை எடுக்கும் வரை அவசரப்பட்டுதாமாக மாநில அரசுகள் ஒன்றும் செய்ய வேண்டாம் என்று கூறியுள்ளார்.

ஆனால்—
கலவரங்கள் தொடர்கின்றன.
சாவு எண்ணிக்கை உயர்கிறது
பொதுச் சொத்து அழிகிறது
பதட்டநிலை நிலவுகிறது
இவை எப்போது ஓயும்?

(குஜராத்நிலவரம் குறித்து, மாநில உள்துறை அமைச்சர் பேட்டி அடுத்த வாரம்)

ராஜ்மோகன் காந்தி



7

அறிமுகம்: விற்பனை வரி

நிதித்துறையில் ஸி. ஆர். நிகழ்த்திய புதுமைகளுள் மிக முக்கியமானது விற்பனை வரி. இதுவே பிற்காலத்தில் எல்லா மாநில அரசுகளுக்கும் முக்கிய வருமானமாக அமைய இருந்தது. 1939—ல் ஸி. ஆர். இவ்வரியை விதிக்கும் வரை ஆசியாவில் வேறெங்குமே அது விதிக்கப்பட்டதேயில்லை.

ஆரம்பத்தில் பெட்ரோலுக்கும், புகையிலைக்கும் விற்பனை வரி விதித்தார். பிறகு மின் சக்தி விற்பனைக்கு; கடைசியாக ரூபாய்க்கு அரை அணா விற்பனை வரியை, ஆண்டுக்குப் பத்தாயிரம் ரூபாய்க்குமேல் பெறுமானமுள்ள பொருள்களை விற்கும் எல்லா வியாபாரிகளுக்கும் விதித்தார். சட்டசபையில் திரு. கே. வி. ரெட்டி ஸி. ஆரின் அறிவைப் பாராட்டினார்: "மனப்பூர்வமாகச் சொல்கிறேன். புத்தி கூர்மையில் வேறு யாரும் உங்களுக்கு ஈடாக முடியாது!' ஆயினும் புதிய வரிக்குத் தீவிர எதிர்ப்பும் இருந்தது. எதிர்த்தவர்களுள் ஐரோப்பிய இந்திய வர்த்தகர்கள், ஜஸ்டிஸ் கட்சியினர், மற்றும் கிருஷ்ணமாச்சாரி ஆகியோர் சிலர். புதிய வரி சிறு வியாபாரிகளையும் அவர்களிடம் பண்டம் வாங்கும் ஏழைகளையும் பாதிக்காது' என்று வாதாடினார் ஸி. ஆர். 'ஓரளவு வசதி படைத்தவர்கள்தான் — பெரும்பாலும் நகரவாசிகள்தாம் — தரப் போகிறார்கள். அதுவும் ஏழைகள் நலனுக்காக.' 'வர்த்தகமும் தொழிலும் முன்னேற முன்னேற விற்பனை வரியினால் கிடைக்கும் வருவாயும் அதிகரித்துக் கொண்டே போகும்' என்று மிகச் சரியாகக் கணித்தார் ஸி. ஆர்.

* * * * *

1938—ஆம் ஆண்டு கோடையில் ராயலசீமாவில் சுற்றுப்பயணம் செய்த போது "புதிதாய்த் தேங்கிய மழை நீரைக் கண் குளிரக் காண்கிறேன்" என்றார் ஸி. ஆர். "இந்த மாவட்டங்களில் பஞ்சப் பேயை நிரந்தரமாய் விரட்டும் ஒரு திட்டத்திற்காக மக்கள் ஏங்கிக் கொண்டிருப்பதில் ஒன்றும் அதிசயமில்லை." அவருடைய இந்தச் சுற்றுப் பயணத்தின் போது மழை பெய்திருந்தாலும் அதற்கு முற்பட்ட வறட்சியின் விளைவுகளை துல்லியமாகக் கண்டார். அதுவே துங்கபத்திரா திட்டத்துக்கு அடிகோலியது.


சில ஆந்திர நகரங்களில் ஸி. ஆர். மக்களின் அதிருப்தியையும் சந்தித்தார். ஆந்திரப் பகுதியைச் சேர்ந்த சிராலாவில் நிகழ்ந்த ஒரு கலவரத்தையொட்டி நடந்த நீதி விசாரணையில் ஹார்வில் என்ற ஆங்கிலேய நீதிபதி, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பேரில் குற்றமில்லை என்று தீர்ப்பளித்துச் சமர்ப்பித்த அறிக்கையை ஸி. ஆர். ஏற்றுக் கொண்டிருந்தார். இதனால் அவர் ஓரளவு மக்களின் அதிருப்தியைச் சம்பாதித்துக் கொண்டிருந்தார். ஸி. ஆருக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்தவர்களுக்கு வேறு ஒரு முக்கிய மனக்குறையும் உண்டு. 'தெலுங்கு மாகாணத்துக்கான கோரிக்கையை ஸி. ஆர். வெளிப்படையாக எதிர்க்காவிட்டாலும், அதை அடியோடு அலட்சியம் செய்தார் என்பதே அது. ஆந்திர மாகாணம் அமைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து லண்டனுக்கு ரகசியமாய் அவர் கடிதம் எழுதினார் என்ற புரளியை நம்பிய பலர், குறிப்பாக இளைஞர்கள் அவருக்கு விரோதமாகக் கிளம்பினார்கள். ரகசியக் கடிதம் ஓர் ஆதாரமற்ற புரளி என்பதால் இளைஞர்களின் மனத்தாங்கலும் அர்த்தமற்றதே. சட்டசபையில் மட்டுமின்றி, பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்துடன் கடிதம் மூலமாகவும், வாய் மொழியாகவும் கொண்ட தொடர்பிலும் கூட ஸி. ஆர். தனி ஆந்திர மாகாணத்துக்குத் தம் ஆதரவைத் தெளிவாக உணர்த்தியிருந்தார். ஆந்திரப் பிரதேசம் ஒரு தனி மாகாணமாக அமைய எல்லாவிதத்திலும் தகுதி பெற்றிருப்பதாக அவரும் அவ

ரது அமைச்சரவை சகாக்களும் நம்பினர். எனவே அயல் விவகார அமைச்சருக்கு இப் புதிய அமைப்பை உருவாக்க உடனடியாக ஆவன செய்யக் கோரி ஒரு விண்ணப்பம் அனுப்பினர். ஜெட்லாண்டு பிரபு அவ்வாறு செய்ய இயலாது என்று தெரிவித்ததும் ஸி. ஆர். மீண்டும் அவருக்கு எழுதினார்:

'ஆந்திர மக்கள் விரும்புவதுபோல் பிரிவினை செய்யாவிட்டால் இந்த மாகாணத்தை ஸ்திரமாக நிர்வகிக்க முடியாது.. சிறந்த நிர்வாகம் கருதி மக்களின் கோரிக்கையை நிறைவேற்றத்தான் வேண்டும்...'

கிளர்ச்சியாளர்களை ஸி. ஆர். நேருக்கு நேர் சந்தித்த போது அவர்களுக்குத் தெளிவு பிறந்தது. குண்டூரில் ஸி. ஆர். பேசுகையில் 'ஹாரில் அறிக்கை ஒழிக' என்று இளைஞர்கள் கோஷமிட்டனர். அந்த அறிக்கை சரியாக இருப்பதால் அதை அங்கீகரித்திருக்கிறேன்'' என்று பதில் சொன்னார் ஸி. ஆர். 'நீங்கள் என்னை பயமுறுத்த முடியாது. ஒரு கூட்டம் கூச்சலிடுவதால் நிர்வாகத்தின் ஒரு முடிவைத் தூக்கி எறிந்துவிட முடியாது.' இதே நேரத்தில் தனி ஆந்திர மாகாணம் குறித்துத் திட்டவட்டமாக உறுதி அளித்தார் ஸி. ஆர். 'சிறிது காலத்துக்குள் உங்களுக்குத் தனி மாகாணம் கிடைத்துவிடும். எப்படி சுதந்திரம் இந்தியனின் பிறப்புரிமையோ அப்படியே ஆந்திரப் பிரதேசம் ஆந்திர மக்களின் பிறப்புரிமை.' கோபத்துடன் வந்த கூட்டம் 'ப்ரீமியருக்கு ஜே' என்று கோஷமிட்டவாறே கலைந்ததாக ஹிந்து நாளிதழ் செய்தி வெளியிட்டது.

மசூலிப்பட்டினம் பொதுக் கூட்டத்தில் ஒருவர் கூச்சலிட்டார்: 'நீங்கள் லண்டனுக்கு எழுதிய கடிதத்தைப் பொது மக்கள் அறிய வெளியிடுங்கள்.' 'இல்லையே!'. என்றார் ஸி. ஆர். மேடையிலிருந்து. ''நான் உங்களுக்கு ஒரு கடிதம் எழுதினால் அதை உங்கள் சம்மதமின்றி பிறர் அறியச் செய்வது நியாயமில்லை.'' கேள்வி கேட்டவனை இவ்வாறு அமைதிப்படுத்திவிட்டு ஸி. ஆர். தொடர்ந்தார்: ''பிரிவினை எனக்கு மகிழ்ச்சியை மட்டுமே அளிக்கும் என்று நீங்கள் எதிர்பார்க்கக் கூடாது. புதிய மாகாணம் அமைவது மகிழ்ச்சி தந்தாலும் தொடர்பையும், நட்பையும் துண்டித்தல் என்பது என் போன்ற ஒரு கிழவனிடம் துயரத்தையும் ஏற்படுத்திக் கலப்படமான உணர்ச்சிகளுக்கே வழிவகுக்கும். அது எப்படியானாலும் உங்கள் கோரிக்கையை லண்டனுக்கு எடுத்துச் சொல்லும் தலை சிறந்த தூதுவனாய்த்தான் நான் இருப்பேன்.'' பலத்த கரகோஷம் எழுந்தது. ஆந்திரா உருவாக வேண்டும் என்று சட்டசபையில் வற்புறுத்திப் பேசிவிட்டு பிரிட்டிஷ் அரசுடன் கொண்ட தொடர்புகளில் மட்டும் தனி ஆந்திராவுக்கு எதிராகத் தாம் செயல்படுவது என்பது நடக்காத காரியம் என்பதை இந்த மசூலிப்பட்டினம்கூட்டத்தில் தெளிவுபடுத்தினார் ஸி. ஆர். அப்படிச் செய்தால் பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்துக்குத் தம்மிடம் உள்ள மதிப்பும், மரியாதையும் பறிபோய்விடும் என்பதைச் சுட்டிக்காட்டினார்.



பிரதம மந்திரியை அதிகமாக வருத்தியது ஹிந்துஸ்தானி விவகாரம்தான். அவர் மந்திரிசபை 125 பள்ளிகளில் அம்மொழியைக் கற்பிக்க ஏற்பாடு செய்திருந்தது. மாணவர்கள் அதைத் தம் விருப்பப்படி நாகரி (ஸம்ஸ்க்ருதம்) அல்லது உருது எழுத்துக்களில் கற்றுக் கொள்ள அனுமதித்திருந்தது. 125 பள்ளிகளிலும் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரையிலுள்ள எல்லா மாணவர்களும் ஹிந்துஸ்தானி பயில வேண்டும். ஆனால் ஹிந்தித் தேர்வில் தோல்வி அடைவது மேல் வகுப்புக்குச் செல்லத் தடையாக இருக்கவில்லை. ''இந்த ஹிந்துஸ்தானி பாடம் இலையில் பரிமாறப்படும் சட்னி போல...'' என்று உதாரணம் கூறினார் ஸி. ஆர். ''அதைத் தொட்டுக் கொள்வதும் விட்டு விடுவதும் உங்கள் விருப்பம்.'' பாடத்திட்டத்தில் ஹிந்துஸ்தானியை ஸி. ஆர். சேர்ப்பதற்கு முக்கிய காரணம் தென்னிந்தியர்கள் ஹிந்துஸ்தானி அறிந்திருந்தால் அவர்கள் இந்தியாவின் எந்தப் பகுதியிலும் வேலை செய்யத் தகுதி பெற்றவர்களாவார்கள் என்பதே. (இம்மொழியில் பல உருது சொற்கள் கலந்திருப்பதை உணர்த்தவே ஹிந்தி என்பதற்குப் பதில் ஹிந்துஸ்தானி என்ற வார்த்தையை உபயோகித்தார் ஸி. ஆர்.)

தமது மாகாணத்துக்குச் சிறந்த சேவை செய்வதாகவே எண்ணினார் ஸி. ஆர். மக்களின் சில பகுதியினரிடம் நிலவிய எதிர்ப்பின் தீவிரத்தைச் சரியாகக் கணிக்கத் தவறிவிட்டார். எதிர்க்கட்சியினர் மொழிப் பிரச்னையைப் பெரிதுபடுத்தித் தங்களுக்குச் சாதகமாய் எப்படியெல்லாம் பயன்படுத்திக் கொள்ளக் கூடும் என்பதையும் அனுமானிக்கத் தவறிவிட்டார். வட மொழியான ஹிந்துஸ்தானி பலர் கண்களுக்கு அன்னிய மொழியாகவும் ஆரிய மொழியாகவும் தென்பட்டது. தெற்கே ஆரியத் தொடர்புடைய சிறுபான்மைப் பிராமணச் சமூகம் ஒருவேளை அதை ஏற்கலாம். ஆனால் மண்ணின் மைந்தர்களான திராவிடர்கள் அதனை எதிர்த்தே ஆக வேண்டும். திராவிடர்களின் மிகப் பழைய எதிரியான வட ஆரியர்களுக்கு எதிராக உணர்ச்சிகளைக் கிளறிவிட இதோ வாய்ப்பு கிடைத்துவிட்டது. இச்சந்தர்ப்பத்தை மிகத் தெளிவாகப் பார்த்து, முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டவர் திரு. ஈ. வே. ராமசாமி நாயக்கர்.

(தொடரும்)

தமிழாக்கம்:

சீதா ரவி

ஸ்பாட் லைட்

மக்கள் தங்கள் பிரச்னைகள் தீர்க்கப் படுவதற்காக பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள். அவர்கள் தங்கள் பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக எந்த காரியத்தையும் செய்ய அஞ்சுகிறார்கள்.

— இந்தியன் வங்கியின் தலைவர் எம். ஜி. கே நாயர் (தினமணி).

காலத்தை சற்று கடன் வாங்கி இந்த உலகம் வாழ்ந்து வருகிறது. எவ்வளவு காலம் இது உயிர் தப்பி வாழும் என்று யாருக்கும் தெரியாது.

— பாதுகாப்பு அமைச்சர் பி. வி. நரசிம்மராவ்

தார் பாலைவனம் சுருங்கி வருகிறது. பாலை வனப் பண்ணைய முறைக்கு நன்றி.

— சி. ஏ. இஸட். ஆர். ஐ. டைரக்டர் கே. ஏ. சங்கர நாராயணன் (இண்டியன் நேஷன்)

கணவன், மனைவி கன்னத்தில் அறைவது கொடூரமானது. தற்கொலை செய்து கொள்ளப் போகிறேன் என்று அடிக்கடி அவன் சொல்வதும் கொடுமையானது.

— ம. பி. ஹைகோர்ட்டில் ஒரு நீதிபதி (இண்டியன் எக்ஸ்பிரஸ்)

குடும்பத்தில் ஒரு திருவிழா மாதிரி எல்லோரும் ஒன்று சேர்கிறோம். பழையவர்களில் சிலபேர் காணோம். பகீரென்கிறது. அவர்கள் சாகவில்லை. அவர்களுக்கு வயதாகி விடவில்லை. ஆனால் யுத்தம் அவர்களை விழுங்கி விட்டது.

— சோவியத் எழுத்தாளர் ஸ்டெட்கானு அலெக்ஸியேவிச் (டெக்கான் ஹெரால்ட்)






நேரம் நல்ல நேரம்

கேள்வி (49): உங்கள் டைரக்ஷனில் ஒரே படத்தில் நடித்த மறைந்த நடிகை ஷோபா பற்றி... (கலாமூர்த்தி, சென்னை—95).

கே. பாலசந்தர்: நான் சந்தித்த ஷோபா— (படம்: நிழல் நிஜமாகிறது) — ஒரு பச்சை மரம். எதைச் சொல்லிக் கொடுத்தாலும் பசுமரத்தாணிதான். நான் படப்பிடிப்பு ஆரம்பித்த ஒன்றிரண்டு தினங்களிலேயே ஷோபாவின் திறமையைக் கண்டு வியந்து, அதை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்கிற மாதிரி அந்தக் கதாபாத்திரத்தையே உடனடியாக மாற்றி அமைத்துக் கொண்டேன். அது தான் அவர் செய்த முதல் தமிழ்ப் படம். அவரது ஹாஸ்ய உணர்ச்சியையும், ஹாஸ்ய நடிப்பில் அவர் காட்டின அபரிமிதமான ஆர்வத்தையும் பயன்படுத்திக் கொள்கிறாற் போல, கதாபாத்திரத்தையே மாற்றி அமைத்து வெற்றி கண்டேன்.

கேள்வி (50): தங்களைக் கவர்ந்த தமிழ் எழுத்தாளர் யார்? (என். ரங்கராஜன், தஞ்சாவூர்)

கே. பாலசந்தர்: தி. ஜானகிராமன் — எளிய நடைக்கும், மண் வாசனைக்கும், அழுத்தமான குணச்சித்திரத்துக்கும் உங்கள் பெயர்க்காரர் — ரங்கராஜன் — சுஜாதா 'மாடர்ன்' தன்மைக்கு.

கேள்வி (51): நீங்கள் எதிர்பார்க்கிற மாதிரி நடிகரோ, நடிகையோ ஒரு காட்சியில் நடிக்கவில்லையெனில் எப்படி இருக்கும் உங்கள் மனநிலை? (வி. வித்யாசாகர், பொள்ளாச்சி).

கே. பாலசந்தர்: கஷ்டமாகத்தான் இருக்கும். கடைசி வரைக்கும் விட மாட்டேன் என்பது திரையுலகப் பிரசித்தம். ஆனால் கோபம் வருவதென்னவோ உண்மைதான். சில சமயங்களில் கடைசி வரை முயற்சி செய்து பார்த்துவிட்டு, சரி இந்தக் காட்சியின் தலை எழுத்து இவ்வளவுதான்னு சமாதானப்படுத்திப்பேன்.

கேள்வி (52): அரசுப் பணியிலிருந்து திரைத்துறைக்கு வந்தது பணத்துக்காகவா? புகழுக்காகவா? சாதனை புரியவா? விருது பெறவா? (சிதம்பர சூரிய நாராயணன், பெரியகுளம்).

கே. பாலசந்தர்: அத்தனைக்கும்தான். ஒரே வார்த்தையில் பதில் சொல்லும்படியான கேள்வி கேட்பவருக்குப் பரிசு என்றால் அது உங்களுக்குத்தான் சார்!

கேள்வி (53): உங்களைக் கண்டு நீங்களே பெருமைப்பட்ட, வெறுப்படைந்த நிகழ்ச்சிகளைச் சொல்லுங்களேன் (மிஸ். மீனு, திருச்சி—1).

கே. பாலசந்தர்: கமல் அகில இந்திய நட்சத்திரமாக 'ஏக் து ஜே கேலியே' படம் மூலம் உருவான போது; ரஜினிகாந்த் அகில இந்திய அளவில் சூப்பர் ஸ்டார் ஆக ஆகிக் கொண்டிருக்கிற இப்போது — இவை பெருமைப்படுகிற நிகழ்ச்சிகள். வெறுப்படைந்து, புழுங்கிப் போன நிகழ்ச்சி 'அவர்கள்' படம் தோல்வியைத் தழுவிய போது.

கேள்வி (54): தங்கள் படம் ரிலீஸாகும் போது, ரசிகர்களுடன் உட்கார்ந்து படம் பார்த்த அனுபவம் உண்டா? (எல். வத்ஸலா, திருவாரூர்)

கே. பாலசந்தர்: 12 வருடங்களுக்கு முன்பு உண்டு. அப்படிப்பட்ட டென்ஷனைத் தாங்கிக்கிற சக்தி எனக்கு இப்ப இல்லே. அதாவது ஒரு குறிப்பிட்ட வசனம் எடுபட வேண்டுமே, ஒரு குறிப்பிட்ட காட்சியின் அர்த்தம்

"நான் ஹிப்போக்ரீட் அல்ல!"



கே. பாலசந்தர்

புரிய வேண்டுமே கைதட்டல் பெற வேண்டுமே, பாடல் காட்சியின் போது யாரும் எழுந்து போகாமல் இருக்க வேண்டுமே எட்செட்ரா... எட்செட்ரா... இப்படிப் பல விதமான டென்ஷன்கள். 'ஸீட்'ல் உட்கார்ந்திருக்கவே முடியாது. குண்டூசி மேல உட்கார்ந்திருக்கற மாதிரி இருக்கும். யாருக்கும் தெரியாம, ரசிகர்களோட உட்கார்ந்து படம் பார்க்கிற போது ஏற்படுகிற 'த்ரில்' இரண்டு வகை. இரண்டுக்குமே நாம தயாரா இருக்கணும். படம் பிடிக்காம போயிட்டா, கெட்ட வார்த்தையெல்லாம்சொல்லித்திட்டுவாங்க. அதைக்கேட்டுக்கணும். ஒருகாட்சிரொம்பப் பிடிச்சுப் போச்சுன்னு, அப்பவும் கெட்ட வார்த்தைகள் சொல்லி அன்போட திட்டுவாங்க. திட்டும்போதும், பாராட்டும்போதும் 'ஒருமை'யிலே தான் செய்வாங்க; இந்த அனுபவங்கள் உண்டு.

கேள்வி (55): 'அச்சமில்லை' படம் எடுத்தீர்களே! கட்சி அமைப்போ, அரசியலோ நமக்குத் தேவை இல்லே என்கிறீரா? (ஜி. ஆனந்த், மானாமதுரை).

கே. பாலசந்தர்: ஐயா! ஒரு கொடுமைக்காரக் கணவனைப் பத்திப் படம் எடுத்தா, கணவனே கூடாதுன்னு அர்த்தமில்லே. அதே மாதிரி வரதட்சிணைக் கொடுமையைப் படத்தில் காட்டினா கல்யாணமே கூடாதுன்னு அர்த்தமில்லே. தவறுகளும், கொடுமைகளும் களையப்பட வேண்டும் என்பதுதான் அடிப்படை நோக்கம்.

கேள்வி (56): சினிமாவில் முதன் முதலில் அதிக 'செக்ஸ்' காட்சிகளை புகுத்தினது நீங்கள்தான் என்கிற குற்றச்சாட்டுக்கு உங்கள் பதில் என்ன? (வேதா, திருவாரூர்)

கே. பாலசந்தர்: இப்போது மலிந்து கிடக்கிற இரட்டை அர்த்த பாணி வசனமெல்லாம் எனக்குத் தெரியாது. ஆணித்தரமா நான் சொல்லணும்னு நினைச்சா, அதைச் சொல்வதில் நான் தயங்கறது கிடையாது. எந்தக் கதைக்கு எது தேவை என்பதை முடிவு செய்து கொண்டு அதன்படி எடுப்பதுதான் என் வழக்கம். குடும்பத்தில் கணவன் மனைவிக்கு இடையே கூட நான் விரசமான விஷயங்களைக் கொண்டு வருவதில்லே. அதற்காக ஒரு விலைமாதின் கதையைப் படமாக்கும் போது 'சைவமா' எல்லாம் நான் இருக்க மாட்டேன். கொஞ்சம் அசைவமாத்தான் இருக்க வேண்டி இருக்கும். என்கிட்ட 'ஹிப்பாக்ரஸி' எல்லாம் கிடையாது ஸார்!

கேள்வி (57): 'அவர்கள்' படத்தை அரைகுறையாய் முடித்தது ஏன்? (மாயா சேகர், பம்பாய்—62)

கே. பாலசந்தர்: அரைகுறைன்னு எதைச் சொல்றீங்கன்னே எனக்குப் புரியலே ஒரு வேளை முடிவைச் சொல்றீங்களா? அதாவது இரண்டு பேருக்கும் கல்யாணம் செஞ்சு வெச்சுட்டா உங்களுக்கு பூரண திருப்தியா இருந்திருக்குமோ என்னவோ? பெரும்பாலானவர்கள் ரசிக்கிற சில முடிவுகளைச் சிலர் ஒப்புக் கொள்வதில்லே. அந்த ஒரு சிலரில் நீங்களும் ஒருவர்னு இப்ப புரியுது. 'அவர்கள்' படத்தின் ஒரு கவிதை நயமுள்ள முடிவு என்பது என் கருத்து; எனது தீர்மானமும் கூட.

கேள்வி (58): பாமா விஜயம் படத்துக்குத் தூண்டுகோலாக உங்கள் வாழ்க்கையில் ஏதாவது சம்பவம் நிகழ்ந்துள்ளதா? (ஜெ. முருகவேல், விழுப்புரம்).

கே. பாலசந்தர்: ஏதோ உண்மை உங்களுக்குத் தெரிந்து விட்டிருப்பது போல இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கீங்க. அது மாதிரி ஒரு சம்பவம் வீட்டில் நடந்தது உண்மைதான். அதை 'இன்ஸ்பிரேஷனா' வெச்சுத்தான் பாமா விஜயம் எழுதினேன். அதாவது நான் பிரபலம் இல்லாத போது, எனது வீட்டுக்கு வர இருந்த ஒரு பிரபல நடிகை என் வீட்டாரிடத்தில் ஏற்படுத்திய சின்ன சலசலப்பை — ஒரு 'இம்பாக்டை' வைத்துக் கொண்டு, கண், காது, மூக்கு எல்லாம் வைத்து நகைச்சுவையாய் ஒரு திரைக்கதை அமைத்தேன்.

எஸ். வி. ரமணன்: அந்த பிரபல நடிகைக்குத் தெரியுமா, அவங்கதான் 'இன்ஸ்பிரேஷனா' இருந்தாங்கன்னு?

கே. பாலசந்தர்: அது அவங்களுக்குத் தெரியாது.

கேள்வி (59): கவிஞர் வாலி பற்றி சில வரிகள்... (என். ஸ்ரீதர், தஞ்சாவூர்).

கே. பாலசந்தர்: ஓர் இனிய நண்பர். எனது படத்திற்காக அவர் எழுதின எத்தனையோ பாடல்கள் படு 'ஹிட்' டாகி இருக்கின்றன. எளிய வார்த்தைகளில், இசைக்கேற்ப இதம் சேர்க்கும் சிரிப்பு மன்னன். அவரது சிரிப்பு சரித்திரப் புகழ் வாய்ந்தது. சட்டென உணர்ச்சிவசப்படக் கூடியவர். உணர்ச்சி வசப்படாதவர்கள் சிறந்த கலைஞர்களாக இருக்க முடியாது.

கேள்வி (60): உங்களிடம் உதவியாளராய்ச் சேர என்ன தகுதி தேவை (என். ராமகிருஷ்ணன், உறையூர்)

கே. பாலசந்தர்: சொல்லட்டுமா? கொஞ்சம் படிப்பு, கொஞ்சம் புத்திசாலித்தனம், கொஞ்சம் உழைப்பு, கொஞ்சம் ஈடுபாடு, கொஞ்சம் 'ஸின்ஸியரிடி', கொஞ்சம் கிரியேடிவிடி, கொஞ்சம் ஒபீடியன்ஸ், 'தான்' என்கிற கொஞ்சம் திமிர். கடைசித் தகுதி மட்டும் என்கிட்ட இருக்குன்னு சொல்லி, உடனே சென்னைக்கு வந்து என் முன்னே நிக்காதீங்க.

தொகுப்பு: மௌனஷ்மி

மேனேஜர்: அடப்பாவமே... வெய்யிலும் அதுவுமா இந்த அறையில் ஃபேன் கூட இல்லாம ஒரே புழுக்கமாயிருக்குமே... உன் சீட்டை என் A.C. ரூமுக்கு மாத்திட சொல்லவா?

— கிருஷ்ண குமார்





புகைப் படங்கள்: ஏ.வி.பாஸ்கர்.



வாஸந்தி

மௌனப் புயல்

7

ஏப்ரல் — மே '84.

"போலே ஸோ நிஹால்! ஸத் ஸ்ரீ அகால்!"

மஞ்சி ஸாஹேப் நிரம்பி வழிந்தது. கும்பலுக்குப் போதை ஏறியிருப்பது நன்றாகத் தெரிந்தது. இந்த மாதிரி ஒரு பாமரக் கூட்டத்தான் வேண்டும். எதைச் சொன்னாலும் கைத் தட்டுவார்கள். ஆமோதிப்பார்கள்.

ஸந்த் ஜர்னெய்ல்ஸிங் பிந்திரன்வாலேவுக்குத் தன் மீதே அசாத்திய நம்பிக்கையும் திருப்தியும் ஏற்பட்டன.

என்ன சொல்லவேண்டும் என்று சிந்திக்க வேண்டிய அவசியமே இல்லை. திரும்பத் திரும்ப ஒரே விஷயத்தைத்தான் சொல்ல வேண்டும். நம்பிக்கை இல்லாதவனுக்குக் கூட நம்பிக்கை ஏற்படுகிற வரை படித்தவர்கள் கூட வளைந்து வருகிற வரை. கூடவே இருக்கும் மூன்று மெய்க்காப்பாளர்கள் படித்தவர்கள். பக்கத்தில் பயபக்தியுடன் நிற்கும் குர்தேஜ்ஸிங் ஐ. ஏ. எஸ். பதவியைத் துறந்து விட்டு என்னிடம் வந்து சேர்ந்திருப்பவன்.

தீர்க்கமாகக் கூட்டத்தைப் பார்வையால் துழாவுகையில், அடி வயிற்றில் எப்பவும் கனன்று கொண்டிருக்கும் கோபம் கண்களிலும் நாவிலும் படர்ந்தது. இந்தக் கோபத்திற்கு மூல காரணம் என்ன என்றெல்லாம் ஆராய்ந்ததே இல்லை. அநாசாரமாய்ப் போய் விடும் சீக்கியர்களை உண்மையான சீக்கியர்களாக்க இந்தக் கோபம் அவசியம். சீக்கியர்களின் எண்ணிக்கைக் குறைவு என்கிற திமிறினால் அவர்களை அடக்கி ஆளப் பார்க்கும் ஹிந்துக்களை ஒழித்துக்கட்ட இந்தக் கோபம் அவசியம்...

"என் பேச்சுக்கு உங்களிடையே மதிப்பு இருக்கிறதா, இல்லையா என்று உங்கள் நடத்தையில் எனக்குத் தெரியும். எல்லாருடைய நடவடிக்கைகளைப் பற்றியும் என்னிடம் தகவல் வந்து விடும். தில்லிக்காரர்கள் என்னைப் பற்றி என்ன சொல்கிறார்கள். இந்த அகாலிகளின் சூழ்ச்சிகள் என்ன, பேப்பர்க்காரன் என்னைப் பற்றி என்ன எழுதுகிறான் என்று எனக்குத் தெரியும்.

இவர்கள் எல்லாம் சீக்கிய விரோதிகள்! மத்திய அரசு எப்பவுமே சீக்கியனிடம் பட்சமாக நடந்து கொண்டிருக்கிறது. விரோதம் காண்பித்திருக்கிறது. ஹிந்துவும், சீக்கும் ஒன்று என்று பொய்யான மயக்கத்தை உருவாக்கப் பார்க்கிறது. நீங்களும் ஹிந்துவும் ஒன்றா? ஹிந்து கேசம் வளர்த்துக் கொள்கிறானா? கிர்பான் வைத்துக் கொள்கிறானா? அவன் நம்மை அடக்குவதா? ஆளுவதா?

ஆயுதம் வைத்துக் கொள்வது ஒவ்வொரு சீக்கியனுடைய பிறப்புரிமை. வைத்துக்கொள்ளாதே என்று என்னைச் சொல்ல இவர்களுக்கு என்ன தைரியம் இருக்கிறது? இந்த ஆயுதம் என்னைக் காப்பாற்றிக் கொள்ள மட்டுமில்லை. என் மதத்தையும் காப்பாற்ற. குரு கோவிந்த் என்ன சொன்னார்?

"என் மதத்தைக் காப்பதற்காகச் சாகும் சாவுதான் மேலான சாவு!"

கூட்டம் கண்ணை மூடிக் கொண்டு எழுந்து நின்றது.

"போலே ஸோ நிஹால்! ஸத் ஸ்ரீ அகால்!"

பிந்திரன்வாலேயை நேரில் பார்த்து விட வேண்டும் என்கிற தீர்மானத்துடன் வந்திருந்த மன்மோஹன் ஸிங் திகைப்புடன் பக்கத்தில் இருந்த குருசரன் ஸிங்கைப் பார்த்தான்.

குருசரன் ஸிங்கின் பழுப்பு நிறக் கண்கள் கோபத்தில் சிவந்திருந்தன. சரேலென்று எழுந்து நின்று கையைத் தூக்கினார்.

"சீக்கிய மதத்தைக் காப்பதற்காக ஹிந்துக்களைக் கொலை செய்யச் சொன்னாரா குரு கோவிந்த் ஸிங்?"

பிந்திரன் வாலேயின் முகம் ஆத்திரத்தில் பளபளத்தது.

"ஹிந்துக்களை மட்டுமல்ல, சீக்கிய விரோதிகளாக இருக்கும் சீக்கியர்களைக் கொல்வதும் சீக்கிய தர்மம்! சீக்கியனாய்ப் பிறந்து நாஸ்திகம் பேசிக் கோவில் வாசலில் நாடகம் போடும் நீ கூட சீக்கிய விரோதி ஞாபகம் வைத்துக் கொள்!"

மன்மோஹன் ஸிங் கலவரத்துடன் எழுந்தான்.

"இவனோடு பேசிப் பிரயோஜனமில்லை. கிளம்புங்கள்!" என்று முணுமுணுத்தான்.

குருசரன் ஸிங் அதை லட்சியம் செய்யாமல் மீண்டும் உயர்ந்த குரலில் சொன்னார்.

"உங்களுடைய வார்த்தைகளைக் கண்டு எனக்குப் பயமில்லை ஸந்த் ஜர்னெய்ல்ஸிங்ஜி! மதப்பிரசாரம் என்று நீங்கள் துவேஷப் பிரசாரம் செய்வது பஞ்சாபுக்கு நல்லதில்லை.'

பிந்திரன் வாலேயுடன் ஒட்டினாற் போல் நின்றிருந்த அவருடைய வலது கை ஆள் அம்ரீக் ஸிங்கின் முகத்தில் கவலை தெரிந்தது.

அதை உணர்ந்து பிந்திரன்வாலே தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு கூட்டத்தைக் கேட்டார்.

"நான் ஆயுதம் வைத்துக் கொள்வதில் என்ன தவறு? முன்பெல்லாம் 'கிர்பான்' உபயோகித்தார்கள். இப்பொழுது மெஷின் கன் உபயோகிக்கிறோம். முன்பு உன் பாட்டன் மாட்டைக் கட்டி ஏர் உழுதான். இப்பொழுது நீ டிராக்டரால் உழவில்லையா?"

கூட்டம் பெரிய ஆரவாரத்துடன் ஆமோதித்தது. மன்மோஹனும் குருசரன் ஸிங்கும் ஆயாசத்துடன் எழுந்து செல்வதை பிந்திரன் வாலே திருப்தியுடன் பார்த்தார்.

அகால்தக்தை நோக்கி நடந்து செல்லும் போது அம்ரீக் ஸிங் நிழலைப் போல் வந்தான்.

"உனக்காகத்தான் அந்தக் கிழவன் பேச்சைச் சகித்துக் கொண்டிருக்கிறேன் அம்ரீக்" என்றார் குரலில் சீற்றம் தொனிக்க.

"நன்றி, ஸந்த்ஜீ" என்றான் அமரிக் அடக்கத்துடன். "எங்கள் கொள்கைகள் இப்பொழுது வேறாக இருக்கலாம். ஆனால் அவர் எனக்கு உபாத்தியாயராக இருந்தவர்".

"இந்த உன் விசுவாசத்திற்காகத்தான் கொல்லாமல் விட்டிருக்கிறேன். அவனுடன் கூட இருந்த பொடியன் யார்?"

"அவருடைய விசிறி. இன்னொரு லட்சியவாதி".

"நாஸ்திகனா?"

"இருக்கலாம். இடதுசாரி. டில்லி கல்லூரியில் லெக்சரர். பத்திரிகைகளில் அரசியல் கட்டுரைகள் எழுதுகிறான்".

"இந்த மாதிரி கூட்டம் வளருவதுதான் நம் மதத்தைப் பலவீனப்படுத்துகிறது. தோற்றத்தில் மாறுதல் ஏற்பட்டாலும் சிந்தனையில் மாறுதல் ஏற்பட்டாலும் நமக்கு ஆபத்து. குரு கோவிந்த் சொன்ன கட்டளைகளைக் காப்பாற்றாத சீக்கியன் சீக்கியனே இல்லை. அந்தப் பையன் பெயரென்ன?"

"எந்தப் பையன்?"

"சீக்கியனாய் பிறந்தும் தலைமுடியை வெட்டி தாடியை மழித்து 'ப்ரீத்லடி' (அன்புச் சங்கிலி) என்கிற பத்திரிகை நடத்தினானே?"

"ஸுமீத் ஸிங்".

"ஆ. அவன் புத்தி போன போக்கைப் பார்! தலைமுடியை வெட்டினதுமே அவன் பார்வை மாறிப் போச்சு. பாரம்பரியம் மறந்து போச்சு. என்னை தூஷித்து எழுதினான். பத்திரிகை நடத்தறவன் அநாசாரக் கொள்கைகள் பரப்பறதை சும்மா பார்த்துக் கொண்டு இருக்க முடியுமா? அவனைத் தீர்க்கும் படி ஆச்சு!"





"இளைஞன். கல்யாணமாகி ஒரு வருஷம் தான் ஆகியிருந்தது."

"ஆ! வேறு வழியில்லை. இந்த மதத்தைக் காக்கணுமானால் புல்லுருவிகளை அகற்றத் தான் வேணும். பத்திரிகைகள் ஒரு சக்தி வாய்ந்த சாதனம் அம்ரிக்! ஜகத் நாராயணனையும் அவன் பிள்ளை ரமேஷ் சந்தரையும் அகற்றின பிறகு எல்லாப் பத்திரிகை க்காரர்களும் வாயை மூடிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள் பயந்து".

"அம்ரிக் ஸிங் சிநேகிதமாகச் சிரித்தான். "பயப்படுவது அவர்கள் மட்டுமில்லை, ஸந்த்ஜீ! மத்திய அரசும் பஞ்சாப் அரசும் அகாலிகளும் பயப்படவில்லையா? கைது செய்ய எத்தனை முறை வாய்ப்பிருந்தும் காரணமிருந்தும் செய்தார்களா? உங்களைப் பெயருக்கு ஒரு முறை கைது செய்து விட்டு விட்டார்கள். என்னைத்தான் பிடித்து வைத்திருந்தார்கள் கொஞ்ச நாளைக்கு".

பிந்திரன்வாலே மௌனமாக நடந்தார். பயம் மட்டும் அதற்குக் காரணமில்லை, அரசியல் காரணமும் உண்டு' என்று தனக்குள் சொல்லிக் கொண்டார்.

"அகாலிகள் எல்லாம் மடையன்கள். தொடை நடுங்கிகள். இதுவரை எதையாவது சாதித்திருக்கிறான்களா? சீக்கியர்களுக்குப் பஞ்சாபில் தனிப்பட்ட சலுகைகள் வேண்டும் என்பான்கள். கூடவே ஹிந்து ஸிக் ஒற்றுமையைப் பற்றி பேசுவார்கள். இது இரண்டும் எப்படி சாத்தியம்? அவங்களுக்குள்ளே அபிப்ராய பேதங்கள் வேறு. ஆற்றிலே ஒரு கால், சேற்றிலே ஒரு கால் என்கிறவங்களோட கதி இதுதான். அவங்களே ஒரு நாளைக்கு என் வழிக்குத் தான் வரப் போறான்கள், நிச்சயம். இப்பவே பாரேன், அவங்களிலே ஒருத்தன் தோஹ்ரா என்கிட்டே சிநேகிதமா இருக்கப் பார்க்கறான். அவனோட உதவியினாலேதான் அகால்தக்துக்குள்ளே எனக்கு இடம் கிடைச்சது. அகால்தக்த் பிரதான பூசாரி கிர்பால்ஸிங், ஆயுதங்களை உள்ளே அனுமதிக்க முடியாதுன்னு பிகு பண்ணிக்கல்லே? தோஹ்ரா சிரோமணி குருத்வாரா கமிட்டி தலைவன் கிர்பால் ஸிங்குக்குப் படி அளப்பவன். அவன் சொன்ன பிறகு பூசாரி வாயைத் திறக்க முடியுமா?"

இருவரும் சுற்று முற்றும் பார்த்தபடி நடந்தார்கள். ஹிந்துக்கள் யாரையும் காணவில்லை. மெல்ல மெல்ல பஞ்சாப் முழுவதிலும் ஒரு ஹிந்துவும் இருக்கப் போவதில்லை. இப்பொழுது பரவ விட்டிருக்கும் பீதியில் ஹிந்துக்கள் தாமாக வெளியேறி விடுவார்கள். பிறகு சீக்கியர்களின் ஆட்சிதான் இருக்கும். சுத்தமான கால்சாவின் ராஜ்யம்தான். அந்த அகாலி மடையர்கள் சாதிக்காததை நான் சாதிக்கப் போகிறேன். தந்திரம் மிகுந்த மத்திய அரசையே கதிகலங்க வைத்து விட்டேன். பெரியபடிப்பாளிகள் எல்லாம் வாயை மூடிக் கொண்டு இருக்க வேண்டிய நிலைமையை ஏற்படுத்தியாகி விட்டது...

எழுத்தறிவில்லாதவன், மகா தரித்திரத்தில் பிறந்தவன் —

எனக்குள் எப்படி இப்படி ஒரு சக்தி வந்தது? குருமார்களின் ஆசி என்பதைத் தவிர இது வேறு என்ன?

அகால்தக்தை அடைந்து பேஸ்மென்டுக்குள் இறங்கும்போது ஒரு விசித்திரமான திருப்தி ஏற்பட்டது. அந்த ஷாபேக் ஸிங் எமகாதகன். அகால்தக்தையும் சுற்றிலுமிருந்த கட்டிடங்களையும் எப்படிப்பட்ட கோட்டைகளாக்கி விட்டான்! பங்களாதேஷ் போரில் முக்தி வாகினிக்குத் தலைமை வகித்தானும். போரை இந்தியாவுக்கு ஜயித்துக் கொடுத்தானும். நன்றி கெட்ட அரசு அவனை எந்த வகையிலோ அவமானப்படுத்தியதில் இங்கு வந்து சேர்ந்தான்...

லங்கரிலிருந்து அம்ரிக் ஸிங் கொண்டு வந்த சாப்பாட்டைச் சாப்பிடும் போது விட்டுப் போன சம்பாஷணையைத் தொடருவது போல பிந்தரன்வாலே சொன்னார்.

"இந்தியப் படையே என்னை எதிர்த்து வந்தாலும் இப்ப என்னை ஒண்ணும் செய்ய முடியாது!"

அந்த ஒல்லியான நெடிய உருவத்தையும் தீவிரமான கண்களையும் அம்ரிக் ஸிங் யோசனையுடன் பார்த்தான்.

"வருமா?"

"வரலாம்".

"வராது என்று அரசு சொல்லிக் கொண்டேயிருக்கிறது".

"ஆ. அதை நம்ப முடியாது" பிந்திரன்வாலே அவனை தீர்க்கமாகப் பார்த்தார். "நீ சொல்கிற மாதிரி, நான் இங்கே அடைக்கலம் அடைகிறவரை அது ஏன் சும்மா இருந்தது? ஏன் கைது செய்யவில்லை", காரணம் இருந்தும்? இதில் ஏதோ தந்திரம் இருக்க வேண்டும். அதற்கு ஹிந்துக்களின் ஓட்டு முக்கியம். என்னை வலிய வந்து சிநேகிதம் செய்து கொண்டார்கள். எதுக்கு? பஞ்சாபிலே அகாலிகள் பதவி வகிச்ச சமயம். என்னை அப்ப ஒருத்தருக்கும் தெரியாது. பஞ்சாபிலே திரும்பவும் தங்க கட்சிப் பதவிக்கு வரணும்னு ஒருமதத்தலைவனை உருவாக்கி அகாலிகளுக்கு எதிராகத் தங்களுக்காகப் பிரசாரம் செய்ய வைக்கணும் என்கிற தந்திரம் அது. என்னைப் பெரிய ஆளாக்க முனைஞ்சாங்கள். நான் கிராமத்தான். அவங்களுடைய தந்திரமும் தெரியாது அரசியலும் தெரியாது. ஜீப்பையும் காரையும் பணத்தையும் கொடுக்கிறாங்கள். எனக்கென்ன போச்சுன்னு தேர்தல் பிரசாரம் கூடப் பண்ணினேன். அவங்களுக்காக!".

அம்ரிக் ஸிங் பலமுறை கேட்ட விஷயமானாலும் புதிதாகக் கேட்பவனைப் போலச் சிரித்தான்.

"அவர்களுடைய கைபொம்மையா நீங்கள் இருப்பீர்கள்னு நினைத்தார்கள். உங்க மூலமா சீக்கியர்கள் எல்லாம் அவர்கள் பக்கம் திரும்பி அகாலிகளுடைய ஆனந்தபூர் தீர்மானங்களை மறந்து விடுவார்கள் என்று நினைத்தார்கள்!"


பிந்திரன்வாலே க்கு அடக்க முடியாமல் சிரிப்பு வந்தது.

"நான் வாஹெ குருவுக்குத்தான் கைப்பொம்மை. ஹிந்து அரசுக்கு நிச்சயம் இருக்க முடியாது. நான் பிறவி எடுத்தது என் இனத்துமான அவமானத்தைக் காக்கன்னு திடீர்னு புரிஞ்சுது. ஆறு வருஷத்துக்கு முந்தி ஒரு வைசாகி நாளன்று நிரங்காரிகளுக்கும் நமக்கும் ஒரு பெரிய சண்டை நடந்தது. நம்ம ஜனங்கள் பதினாறு பேர். இறந்து போனாங்களே அன்னிக்கு! என்னுடைய பாதை தனியானதுன்னு புரிந்து போச்சு. எனக்குள்ளே ஏற்பட்ட மாற்றம் அரசுக்குத் தெரியல்லே. அதுவும் எனக்கு உதவியாய்த்தான் இருந்தது. நிரங்காரி தலைவன் குர்பசன் ஸிங் கொலையிலே பிந்திரன்வாலே க்குச் சம்பந்தமில்லேன்னு உள்துறை மந்திரியே மக்கள் சபையிலே சொன்னார்! அவங்க கட்சிக்காரன் தர்பாரா ஸிங் இங்கே முதலமைச்சரா இருந்தப்ப எத்தனை முறை அரெஸ்ட் வாரன்ட் வந்தும் கைதாகாமே விடப்பட்டோம்! ஆனா அவங்களுக்கு மெள்ள மெள்ள எம்மேல நம்பிக்கை போயிட்டது எனக்குத் தெரியும்.

என்னைத் தந்திரமா ஒரு முறை தர்பாரா ஸிங் தொலைக்கப் பார்த்தான். போலீஸ் அவனுக்கு உள்கை. நான் உஷாரானேன். டி. ஐ. ஜி. அட்வால் மேல் குறி வெச்சேன். அவன் சீக்கியன் ஆனாலும் அரசின் ஆள்' என்று என் சந்தேகத்தை நம்ம பையன்களிடம் சொன்னேன். மறுநாள் காலை அட்வால் அர்தாஸிக்கு வந்து திரும்புகிற சமயத்தில் கோவில் வாசலில் அவனைச் சுட்டு விட்டுப் பையன்கள் கோவிலுக்குள் ஓடி விட்டார்கள். அந்தப் பையன்களைக் கூட அரசு பிடிக்கவில்லை"

படத்திலிருப்பவர் டஸ்ஸல் டார்பில் பணியாற்றும் ஒரு போலீஸ்காரர். 53 வயசான இவர்காயலான்கடைப்பொருள்களை உருக்கி வார்த்து அற்புதமான கலைப் படைப்புகளாக உருவாக்கும் கலைஞர். பூ விதைகளை ஒரு குண்டுக்குள் அமைத்து தரிசு நிலத்தில் தான் உருவாக்கிய இந்த பீரங்கியால் துளைத்து மலர்கள் பூத்துக் குலுங்க வைக்கும் இவர் பெயர் அன்டோல்.


நன்றி: ஸ்காலா



தொடர்:

மன்னிக்கப்படும் படுகொலைகள்

-திட்டமிடச் செய்யும் இதயங்கள்!



பிந்திரன்வாலே சிரித்தார். "உனக்குத் தெரியுமோ அம்ரிக்? அதற்கப்புறம் நான் எந்த நிமிஷம் வேணும்னாலும் கைதாக லாம்னு எதிர்பார்த்தேன். அப்ப இத்தனைக் கும் குருநானக் நிவாஸ்லே இருந்தேன். சீக் கிய ஜனங்கள் கூட ஆதரிச்சிருப்பார்கள். என் மேல் கோபமாய் இருந்தார்கள். அட் வால் நல்லவனும்! ஆனா நான் கைதாகல்லே ஏன்? எனக்கு இன்னும் புரியல்லே!"

இருவரும் சற்று நேரம் மௌனமாக அமர்ந்திருந்தார்கள். பிந்திரன்வாலே தீவிரத் துடன் சொன்னார்.

"அரசுடைய ஒவ்வொரு காரியத்துக்கும் காரணமில்லாம போகாது. ஆனா நானும் ஏமாளியில்லே. லண்டன்லேயும் கானடா விலேயும் உதவி செய்ய ஆள் இருக்கு. பணத் துக்கும் வெளி நாட்டு ஆயுதத்துக்கும் சாப் பாட்டுக்கும் பஞ்சமில்லே. ஆயிரம் கோதுமை மாவு மூட்டைகள் லங்கரில் ஸ்டாக் இருக்கு!

நாடாக் கட்டிலில் படுத்து அவர் கண் களை மூடிக் கொண்டார்.

"ஆனால் அகால்தக்தில் இப்படி சிறை பட்டுக் கிடப்பது எனக்கு அலுத்து விட்டது அம்ரிக்!" என்றார்.

நேற்று ஜலந்தருக்கு அருகில் இருபத்தி நான்கு பேர்கள் கொல்லப் பட்டிருக்கிறார் கள். அவர் சொல்லாமலே இப்பொழுதெல் லாம் கொலைகள் நடக்கின்றன. பஞ்சாப் முழுவதும் கொதிக்கும் பாண்டமாக ஆகி விட்டது. சீக்கியர்கள் தங்களை நிலை நாட்டிக் கொள்ள வேண்டிய தருணத்தை யாரால் தடுக்க முடியும்?

மூடிய கண்கள் காட்டிய அந்தகாரத்தில் மனசு நழுவி நித்திரையைப் பிடிக்க யத்தனிக் கையில் சிதறல்களாக நினைவுப் பெட்டகத் தில் நிழற்கோடுகள் பதிகின்றன. ஒரு ஏழ்மையான வீட்டில் கயிற்றுக் கட்டிலில் ஒரு கிழவர் உட்கார்ந்திருக்கிறார். அவர் மடியில் நான்கு வயதுச் சிறுவன்.

கிழவர் ஆக்ரோஷத்துடன் சொல்கிறார்:

"குரு கிரந்தத்தை இளப்ப மாகப் பேசுகிறான். குருமார்களைப் பரிகாசம் பண்ணுகிறான்!"

சிறுவனை சரேலென்று நிறுத்தித் தோளைக் குலுக்குகிறார்.

"அடேய்! இந்த ஹிந்துக்களைப் பூண்டோடு அழிக்கணும்!"

அடுத்த பத்தாம் நாள் அம்ரிக் ஸிங் வந்து சொன்னான்.

"ராணுவம் அமிருத்ஸரை நோக்கி வரு கிறது. இன்று மேஜர் ஜெனரல் பிராரை சாதாரண உடையில் கோவிலில் பார்த் தேன்".

சிறுவனுக்குள் கிழவர் புகுந்து கொண் டார். "வரட்டும்!" என்றார் பிந்திரன்வாலே ஆக்ரோஷத்துடன். "பூண்டோடு அழித்து விடுகிறேன்!"

(தொடரும்)

மைசூர் லாம்ப்ஸ்



முதல் பரிசு : ரூ. 50,000/-
பெறுமான தங்க நெக்லஸ்
(அல்லது ரூ. 50,000/-
ரொக்கம்)

இரண்டு வேறு பரிசுகள் :
ரூ. 10,000/- பெறுமான ஒரு
ஜோடி தங்க வளையல்கள்
(அல்லது ரூ. 10,000/- ரொக்கம்
ஒவ்வொன்றுக்கும்)

மூன்று வேறு பரிசுகள் :
ரூ. 8,000/- பெறுமான கலர் டி.வி
(அல்லது ரூ. 8,000/- ரொக்கம்
ஒவ்வொன்றுக்கும்)

நான்கு வேறு பரிசுகள் :
ரூ. 3,000/- பெறுமான கறுப்பு
வெள்ளை டி.வி (அல்லது
ரூ. 3,000 ரொக்கம்
ஒவ்வொன்றுக்கும்)

இருபத்தைந்து வேறு பரிசுகள் :
ரூ. 550/- பெறுமான மூன்று
பாண்ட் டிரான்சிஸ்டர் (அல்லது
ரூ. 550/- ரொக்கம்
ஒவ்வொன்றுக்கும்)

1000 ஆறுதல் பரிசுகள் :
'T' சட்டைகள்

**ஒவ்வொரு வாரமும்
50 முன்னோடி நுழைவுத்தாள்களுக்கு ரூ. 51/- பரிசாக
வழங்கப்படும்**

வழி காட்டும் ஒளி போட்டி:

வழிகாட்டும் ஐந்து விளக்குகளின் படங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன. அவைகள் மேஜை விளக்கு, தொங்கு விளக்கு, போக்குவரத்து விளக்கு, சிக்னல் (கைகாட்டி) விளக்கு மற்றும் கலங்கரை விளக்கு. அதற்கு கீழ் அந்தந்த விளக்குகளோடு சம்பந்தப்பட்ட மனிதர்கள்/பொருட்கள் கொடுக்கப்பட்டுள்ளன. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் அந்தந்த விளக்குகளோடு அதை உபயோகிப்பவர்களை இணைக்க வேண்டும். உதாரணமாக மாத்திரம் (c) தொங்கு விளக்குகளை அறுவை சிகிச்சைக்கு உபயோகிக்கிறார்கள். எனவே தொங்கு விளக்கின் கீழுள்ள கட்டத்தில் (c) என்று குறிப்பிட்டுள்ளது. இதைப் போலவே அந்தந்த விளக்குக்கு ஏற்றவாறு A, B, D மற்றும் E எழுத்துகளை எழுதுங்கள்.

வாக்கியத்தைப் பூர்த்தி செய்யவும் :

கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தில் கோடிட்ட இடத்தில் ஒரு வார்த்தையை எழுதி பூர்த்தி செய்யவும். "மைசூர் லாம்ப்ஸ் இது ஒரு ______ விளக்கு." உதாரணமாக ("மைசூர் லாம்ப்ஸ் இது ஒரு சிறந்த விளக்கு" என எழுதலாம். மற்றுமொரு தகுதியான வார்த்தையை தேர்ந்தெடுங்கள். தங்க புதையல் உங்களுக்காக காத்திருக்கிறது.

நீங்கள் எத்தனை நுழைவுத்தாள்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு நுழைவுத்தாளுடனும் மைசூர் லாம்ப்ஸ் பல்ப் உறையின் விலை விபரம் கொண்ட தாள் முழுமையாக இணைக்கப்பட வேண்டும். அது 25, 40, 60 அல்லது 100 வாட் பல்ப் இவைகளில் எது வேண்டுமானாலும் இருக்கலாம். ஒவ்வொரு தாளுடனும் ஒரு விலைப் பட்டியல் உறை இருத்தல் வேண்டும்.




கடைசி நாள் ஜூலை 31, 1985.

நுழைவுத் தாள்களை அனுப்பும் முகவரி:
*தி மைசூர் லாம்ப் ஒர்க்ஸ்
லிமிடெட்*
தபால் பெட்டி எண் 5572
மல்லேஸ்வரம் மேற்கு போஸ்ட்
பெங்களூர் 560055

நுழைவுத் தாள்

மேஜை விளக்கு	தொங்கு விளக்கு	போக்குவரத்து விளக்கு	சிக்னல் விளக்கு	கலங்கரை விளக்கு



ஒரு வார்த்தையை உபயோகித்து வாக்கியத்தை பூர்த்தி செய்யவும்.
மைசூர் லாம்ப்ஸ் இது ஒரு ______________________ விளக்கு.
பெயர்/விலாசம்

TN

மைசூர் லாம்ப்ஸ்— வழிகாட்டும் ஒளி

CLARION MLW 5540 Tam

சொர்க்கத்திற்கு ஏங்காதவர்



வங்காளி மூலம் - சுனில் கங்கோபாத்யாயா

குருக்ஷேத்திரத்தின் யுத்த களத்திலிருந்து ஒரு குரோச தூரம். ஒரு பரந்த ஏரி. அதைச் சுற்றிலும் பிரும்மாண்டமான மரங்கள்.

சூரியன் மேலை வாயிலில் மறையவிருக்கிறான். வானமெங்கும் அவனது செவ்வொளி.

ஒரு மரத்தடியில் அமர்ந்திருக்கிறார் ஒரு முனிவர். அடர்ந்த தாடியால் மறைக்கப்பட்டுள்ள அவரது முகத்தில் கண்கள் மட்டுமே புலப்படுகின்றன. ஆழ்ந்த பார்வையுடன் ஓலையில் ஏதோ மும்முரமாக எழுதிக்கொண்டிருக்கிறார் அவர்.

ஆம்! அவர்தான் சத்தியவதி புதல்வர், கிருஷ்ண த்வைபாயனர், வேத வியாசர்.

அப்போது அங்கு ஓடோடி வந்தான் ஒரு வீரன். அவன் அணிந்திருந்த அரச உடை கிழிந்து அலங்கோலமாயிருந்தது. அவனது தலையில் மகுடமில்லை. அவனது அங்கமெல்லாம் காயங்களும் இரத்தக் கறையும். அவனது கையில் கதை.

ஆம், அவன்தான் துரியோதனன்.

வியாசரைக் கண்டதும் தன் கதையின் மேல் சாய்ந்தவாறு நின்று கொண்டான் அரவக்கொடியோன். எழுத்தில் முழுக் கவனத்துடன் ஈடுபட்டிருந்த முனிவர் அவனைக் கவனிக்கவில்லை. அவன் அவரது கவனத்தை ஈர்க்கத் தன் தொண்டையைக் கனைத்துக் கொண்டான்.

வியாசர் தலை நிமிர்ந்து பார்த்தார். துரியோதனனைக் கண்டு திடுக்கிட்டார்.

துரியோதனன் கேலியாகக் கேட்டான்: "முனி சிரேஷ்டரே, என்னைத் தெரிகிறதா?"

"ஓ, துரியோதனா? யுத்தகளத்திலிருந்து ஓடி வந்து விட்டாயா?... குரு வம்சத்தையே பூண்டோடு அழிப்பதற்காக இந்த வேள்வியைத் தொடங்கிய நீ கடைசியில் புறமுதுகு காட்டி ஓடி வந்து விட்டாயா? உன்னைப் பற்றி யார் என்ன குற்றம் சொன்னாலும் நீ கோழையல்லவே! உன் உறவினர் எல்லோரும் அழிந்த பிறகும் நிலைத்திருக்க ஆசையா உனக்கு?"

"உங்கள் கேள்விகளுக்குப் பதில் அப்புறம் சொல்கிறேன். முதலில் நீங்கள் சொல்லுங்கள் — என்னை எப்படி அடையாளங் கண்டு கொண்டீர்கள்? நாமிருவரும் ஒருபோதும் சந்தித்ததில்லையே?"

"என்ன சொல்கிறாய் துரியோதனா? யுத்தம் செய்த களைப்பில் உனக்குப் புத்தி பிசகி விட்டதா...? நான் எப்போதும் உன்னைத் தானே நினைத்துக் கொண்டிருக்கிறேன்! நான் படைத்துக்கொண்டிருக்கும் இந்த மகாபாரதக் கதையின் நாயகனே நீதானே! உன் பொறாமையும், கர்வமும், வீரமுந்தானே என் காவியத்தின் உயிர்! உன்னை அடையாளங் கண்டு கொள்ள முடியாதா' என்றால்? நான் உன் பாட்டனல்லவா?"

கோபத்தால் கண்கள் சுழல துரியோதனன் சொன்னான், "இரத்த உறவால் நீங்கள் என் பாட்டனென்பது எனக்குத் தெரியும். ஆனால் நான் இதுவரை உங்களுடன் ஒரு வார்த்தை கூடப் பேசியதில்லை. நான் சிறு குழந்தையாயிருந்த போது கூட நீங்கள் ஒருமுறையேனும் என்னை அன்போடு உச்சி முகர்ந்ததில்லை, ஏன், என்னைப் பார்த்தது கூட இல்லை. 'கௌரவரும் பாண்டவரும் எனக்கு இரு கண் போன்றவர்கள்' என்று நீங்கள் அடிக்கடி சொல்வீர்களாம். ஆனால், நீங்கள் பாண்டவருக்குக் குறைந்தது எட்டு முறைகள் தரிசனம் அளித்து அவர்களுக்கு உபதேசம் செய்திருக்கிறீர்கள். எங்களை ஒருதடவை கூடச் சந்தித்ததில்லை நீங்கள்!"

"நீ கணக்கில் மிகவும் கெட்டிக்காரனாயிருக்கிறாயே, அப்பா...! ஆனால் இந்தக் கடைசி காலத்தில் இதைப் பற்றியெல்லாம் பேசிப் பயனென்ன?... கௌரவர், பாண்டவர் இரு தரப்பினருமே என் பேரப் பிள்ளைகள்தாம். ஆனால், பாண்டவர்கள் உங்களை விட துரதிர்ஷ்டசாலிகள், உங்களால் கொடுமைப் படுத்தப்பட்டவர்கள். பெற்றோர் தம் எல்லாக் குழந்தைகளையும் நேசித்தாலும் பலங்குறைந்த குழந்தைகளிடம் அவர்களுக்குப் பரிவு அதிகந் தானே இருக்கும்? என்ன விசேஷம்?"

"உங்களைச் சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன்... பாண்டவர்கள் எங்களை விட அதிகம் கஷ்டத்துக்குள்ளானார்கள் என்பதற்காக அவர்களிடம் அதிகப் பரிவு காட்டினீர்கள், அது சரிதான். ஆனால் எங்கள் தாய் காந்தாரி உங்களுக்கு என்ன தீங்கு செய்தான்?"

"உன் தாய் பெரும் புண்ணியவதி. அவளுக்கென்ன?"

"அப்படியானால் ஏன் அவளிடம் இவ்வளவு இரக்கமின்றி நடந்து கொண்டீர்கள்...? அவள் யாரிடமும் எதையும் யாசித்ததில்லை. நீங்கள் வலியச் சென்று அவளுக்கு ஒரு வரமளிக்க முன் வந்தீர்கள். முனிவரே வரும் போது மறுப்பது உசிதமில்லை என்று என் தாய் நற்குணங்கள் பொருந்திய புதல்வனை உங்களிடம் யாசித்தான். என்ன கொடுத்

தமிழாக்கம்-
சு. கிருஷ்ணமூர்த்தி



தீர்கள்?'' என்று துரியோதனன் பொருமினான். வியாசர் சாந்தமாகச் சொன்னார்.

''துரியோதனா. உனக்கு அந்த நிகழ்ச்சி பற்றிச் சரியாகத் தெரியவில்லை. உன் தாய் வேண்டியது நூறு புதல்வர்களை. நானும் அவ் வரமளித்தேன். ஆனால் குந்திக்கு யுதிஷ்டிரன் பிறந்த செய்தி கேட்ட பின் உன் தாய்க்குத் தன் கர்ப்பத்தைத் தாங்கிக் கொண்டிருக்கப் பொறுமையில்லை. அவள் உரிய காலத்துக்கு முன் தன் கர்ப்பத்தை வெளியில் விட்டுவிட்டாள். அதனால்தான்...''

''என்னைச் சற்றுப் பேச விடுங்கள், பிதாமகரே! என் தாய் நூறு புத்திரரை வேண்டியது உண்மைதான். ஆனால் அதற்காகத் தன் வயிற்றில் அவ்வளவு பெரிய மாமிசப் பிண்டத்தைத் தாங்கிக் கொள்வது எத்தகைய நரக வேதனை! என் சிற்றன்னை குந்திக்கு முன்பே சூல்கொண்டவள் என் தாய். ஆகவே இயற்கை நியதிப்படி அவள்தான் என்னை யுதிஷ்டிரன் பிறக்குமுன் பெற்றிருக்க வேண்டும். அப்போது நான் யுதிஷ்டிரனின் அண்ணனாயிருப்பேன். அந்த உரிமையை நான் இழந்தது உங்களால்தானே?''

புன்சிரிப்புடன் பதிலளித்தார் வியாசர், ''அதற்கும் ஒரு காரணம் உண்டு. அதுதான் என் கற்பனைத் திறன். வால்மீகி போன்ற கவிகள் இத்தகைய அபூர்வமான நிகழ்ச்சியைக் கற்பனை செய்திருக்க முடியாது. நான் ஓர் அமர காவியம் படைப்பதற்காக உங்களுடைய பிறப்பை இவ்வாறு தீர்மானித்தேன்.''

அருள் வாக்கு

சாஸ்திரப்படி விலக்க வேண்டியவற்றில் மற்ற ஆஹார வகைகள் நாளாவட்டத்தில் தான் சித்தத்தைக் கெடுக்கின்றனவென்றால், குடியோ உடனேயே ஒருத்தனின் புத்தியைக் கெடுத்துக் கேவலப்படுத்துவதைப் பார்க்கிறோம். அதனால் இதை முதலில் விட்டுத் தொலைக்க வேண்டும்.

இப்படி ஒரு வஸ்து உள்ளே போவதால் உடனே சித்தம் கெட்டுப் போவதாலேயே, விலக்க வேண்டிய மற்ற வஸ்துக்களும் கொஞ்சம் கொஞ்சமாக உள்ளே போய்க் காலக்கிரமத்தில் சித்தத்தைப் பாதிக்கும் என்பதையும் ஒப்புக் கொள்ள வேண்டியதாகிறது. அதாவது சாஸ்திரம் சொல்கிறபடி ஆஹாரத்துக்கும் மனஸுக்கும் சம்பந்தமுண்டு என்று நிச்சயமாகிறது.

குடி கூடாது. அது புத்தியைக் கெடுக்கும். குடியையும் கெடுக்கும். முற்காலத்தில் குடிப்பதற்கு அனுமதி பெற்ற ஜாதியாரும் இப்போதைய 'ஸெட் அப்'பில் அந்தப் பழக்கத்தை விடுவதுதான் நல்லதாகிறது. இதனால் காந்தியவாதிகள் சொல்கிற மது விலக்கை ஆதரித்து ஸ்ரீ மட தர்மத் தொண்டு ஸபையும் அறிக்கை கூட விட்டிருக்கிறது.

நாம் வேதத்தையும் அதை அநுசரித்து ஏற்பட்டுள்ள தெய்வ வழிபாட்டு நூல்களான ஆகமத்தையும்பின்பற்றுகிறதமிழ் மதஸ்தர்கள். இந்த வேதம், ஆகமம் இரண்டுமே மது விலக்கை விதித்திருக்கின்றன. ஆதலால் மதரீதிப்படி நாம் குடிக்காமலிருக்கவே கடமைப்பட்டிருக்கிறோம். ஸமூகப் பிரச்னையாகவும் பொருளாதாரப் பிரச்னையாகவும் குடும்ப வாழ்க்கை விஷயமாகவும் காந்தியவாதிகள் மதுவிலக்குக்குச் சொல்லும் அந்தக் காரணங்களை ஒப்புக் கொள்வதோடு மத உணர்ச்சியையும் முக்கியமாக வைத்து இன்னம் weight கொடுத்துச் சொல்கிறேன்.

ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்



''அமர காவியம் படைக்கவா?''

''ஆமாம். மனிதன் சாகப் பிறந்தவன். நீயும் உன் போன்ற மாவீரர்களுங்கூட என்றாவது ஒருநாள் மடிந்து மண்ணோடு மண்ணாகிப் போவது திண்ணம்.... ஆனால் நான் உங்கள் வாழ்க்கையை ஓர் அபூர்வ இதிகாசத்தின் கருப்பொருளாக அமைத்து விட்டேன்..., பாண்டவருக்குத் தெய்வ அனுக்கிரகம் இருந்தது. ஆகையால் அவர்களது பிறப்பு விஷயத்தில் தலையிட எனக்கு வாய்ப்பில்லை. அவர்களுடைய எதிரிகள் என்ற முறையில் உங்கள் வாழ்க்கையைச் சமைக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது... கவிகள் படைப்பாளிகள்... ஊனும் உதிரமும் பொருந்திய உங்களை நான் படைத்தேன்...''

''புரியவில்லை எனக்கு.''

''உனக்குப் புரியாது. ஆனால் வருங்காலம் இதைப் புரிந்து கொள்ளும்.''

''எங்கள் தாய் நற்குணம் வாய்ந்த புத்திரரைத்தானே யாசித்தாள்? புண்ணியவதியான அவளுக்கு நீங்கள் அளித்த பரிசு என்ன?'' துரியோதனன் மடக்கினான்.

''குருசிரேஷ்டனே! உன் தாய் பெருமை வாய்ந்தவள். அவளுக்குப் பெருமையளிப்பது என்ன தெரியுமா? அவள் அனுபவிக்க நேர்ந்த மகத்தான துன்பந்தான். அந்திப் பொழுதாகி விட்டது. துரியோதனா, பறவைகள் தங்கள் கூடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றன, சுவர்க்கத்துக்குத் திரும்பிச் செல்லும் ஜீவன்கள் போல..நீயும் உன் துன்பங்களை மறந்து சுவர்க்கம் செல்ல உன்னைத் தயார் செய்து கொள்.''

''எனக்குச் சுவர்க்கம் அவசரமொன்றுமில்லை.''

''நன்றாயிருக்கிறது நீ சொல்வது! நீ இறக்காவிட்டால் யுதிஷ்டிரன் அரியணையேறுவது எப்படி? நீ எங்கிருந்தாலும் பாண்டவர் உன்னைக் கண்டுபிடித்து விடுவது திண்ணம். உன் பதினொரு அட்சௌகிணி சேனையும் நிர்மூலமாகி விட்டது. உன் கட்சியில் அசுவத்தாமா, கிருபன், கிருதவர்மா, சஞ்சயன் ஆகியோரைத் தவிர மற்ற எல்லோருமே மடிந்து விட்டார்கள். நீ இன்னும் எந்த நம்பிக்கையில் உயிர் வாழ நினைக்கிறாய்?''

''பிதாமகரே, துரியோதனனின் முழு வீரத்தையும் பாண்டவர் இன்னும் புரிந்து கொள்ளவில்லை. சூதில் வல்ல கண்ணன் போல் எனக்கும் சூது தெரியும். நான் இந்த ஏரியின் நீரை ஸ்தம்பிக்கச் செய்து அதனடியில் வாழ்ந்தால் பாண்டவரால் என்னைக் கண்டுபிடிக்க முடியாது. சிறிதுகாலம் ஓய்வெடுத்துக் கொண்டபின் வேற்று நாடுகளுக்குச் சென்று படை திரட்டிக் கொண்டு மறுபடியும் போரிட வருவேன் நான். இறுதி வெற்றி எனக்குத்தான்!''

''இல்லையில்லை குருராஜனே! நான் படைத்து வரும் காவியத்தில் உன் முடிவை அசாதாரண வேதனை நிறைந்த ஒரு மகத்தான நிகழ்ச்சியாகச் சித்திரித்திருக்கிறேன் நான். உன் உயிர் பிரியும் போது வானவர் உன் மேல் மலர்மாரி பொழிவர். உன் கதையைப்

படிப்பவர்களின் கண்களில் நீர் பெருகும்''

''அப்படியானால் நான் உங்கள் கைப்பாவையா?... இல்லை... பார்க்கப் போனால் நீங்கள்தான் என்னைக் கண்டு பயப்படுகிறீர்கள். அதனால்தான் நீங்கள் ஒருபோதும் என் முன் வந்ததில்லை... ஒரே ஒருமுறை நீங்கள் என் முன் வரவிருந்தீர்கள். ஆனால் கடைசி நேரத்தில் நழுவி விட்டீர்கள்...''

சுவடிகளைச் சுருட்டி எடுத்துக் கொண்டு எழுந்தார் வியாசர். ''எனக்கு நேரமாகி விட்டது. உனக்கும் அந்திம காலம் நெருங்கிவிட்டது. உன் கேள்விக்குச் சுருக்கமாக விடையளிக்கிறேன். உன் அகம்பாவம் காரணமாக பாரதத்தில் ஒரு மாபெரும் போர் நிகழ வேண்டும்; அதை நான் ஒரு மாபெருங்காவியமாக வடிக்க வேண்டும் — இந்த இலட்சியத்துடன் தான் நான் உங்கள் வாழ்க்கையை இந்த முடிவை நோக்கி இயக்கி வந்தேன்... எவ்வளவு பிரும்மாண்டமான, பிரளயத்துக் கொப்பான யுத்தம் நிகழ்ந்தது பார்த்தாயா, துரியோதனா!... உலகில் க்ஷத்திரிய குலமே அநேகமாகப் பூண்டற்றுப் போய் விட்டது...!''

''ஆகா! இத்தகைய முடிவு குறித்து எவ்வளவு ஆனந்தம் உங்களுக்கு? நீங்களும் பரசுராமர் போன்றவரா?''

''சீ,சீ... அத்தகைய நோக்கம் எதுவுமில்லை எனக்கு. மனிதனின் ஆயுளை நிர்ணயிப்பது காலந்தான். நீ, யுதிஷ்டிரன், பார்த்தன், கர்ணன் எல்லோருமே காலகதியின் நியதிக்குட்பட்டவர்கள்தாம். நான் காவியகர்த்தா என்ற முறையில் நிகழ்ச்சிகளை மாத்திரம் என் இஷ்டப்படி அமைத்திருக்கிறேன். அவ்வளவுதான்... உம், நான் திரௌபதிக்கு இம்மாதிரி திருமணத்தை அமைக்காதிருந்தால்...!''

''ஆமாம், நீங்கள் ஏன் இந்த விஷயத்தில் இவ்வளவு 'உற்சாகங் காட்டினீர்கள்? ஒரு பெண்ணுக்கு ஐந்து கணவர்கள்! வேத விதிகளுக்கு மாறான இந்த ஏற்பாட்டை நீங்கள் பலவந்தமாகப் பாண்டவர்கள் மேல் திணித்தீர்களே, ஏன்?''

''உனக்கு இதெல்லாம் புரியாது. நான் திரௌபதிக்கு ஐந்து கணவர்களை அளித்த கணம் முதல் அவள் பாரதத்தின் சரித்திரத்திலேயே ஓர் ஒப்பற்ற இடத்தைப் பெற்றுவிட்டாள்.

ஆனால் சூதாட்டத்தில் தோல்வி நேர்ந்தபின் ராஜசபையில் தன் ஐந்து கணவர்கள் முன்னிலையில் சீறியெழுந்தாளே அதுபோன்ற நிகழ்ச்சி வேறெங்காவது, எப்போதாவது நடந்திருக்கிறதா?

சூதாட்டத்தில்பஞ்ச பாண்டவர்கள்உன் அடிமைகளானார்கள். அவர்கள் விடுதலை பெறக் காரணம் அந்தப் பெண்மணிதான். பெண்மையின் ஜ்வாலை அவள். அவளது ஒவ்வொரு சொல்லும் நெருப்பு ஜ்வாலை. அவளுடன் ஒப்பிட்டால் மற்ற பெண்கள் வெறும் குரங்குகள், அத்தகைய அசாதாரணமான பாத்திரம் ஒரே ஒருவனுக்கு உடைமையாக இருக்க முடியுமா?

யாரோ வரும் அரவம் கேட்கிறது; பாண்டவர்கள்தாம் உன்னைத் தேடி வருகிறார்களோ என்னவோ...?''

தன் கதையை எடுத்துச் சுழற்றினான் துரியோதனன். ''உம், உங்கள் காவியத்தின் தேவைக்காக எங்கள் வாழ்க்கையில் விளையாடினீர்களா? உங்கள் விளையாட்டின் பலனை இப்போது அனுபவியுங்கள்...! இதோ இந்தக் கதையால் உங்கள் மண்டையைப் பிளந்து விடப் போகிறேன் நான்! என் எஞ்சிய வாழ்க்கையை உங்கள் தலையீடின்றி என் இஷ்டப்படி வாழப் போகிறேன்!''

வியாசர் தம் கைகளிரண்டையும் தூக்கிக் கொண்டு கூவினார், ''மூடா! நான் சிரஞ்சீவி என்பது உனக்குத் தெரியாதா? நீ ஆயிரங் கதைகள் கொண்டுதாக்கினாலும்நான் இறக்க மாட்டேன். அசுவத்தாமா, மகாபலி, அனுமான், விபீஷணன், இவர்களைப் போல் நானும் அழிவற்றவன்.

''ஆமாம், மறந்துவிட்டேன்... நீங்கள் சிரஞ்சீவி...அப்படியானால்உங்களிஷ்டப்படி தான் நான் சாக வேண்டுமா?''

பரிவுடன் கூறினார் வியாசர், ''குழந்தாய், எவ்விதத் தயக்கமுமின்றி இந்த வாழ்க்கை நாடகத்தில்உன் பாத்திரத்தை நடித்துவிட்டுப் போ... ஒன்று மட்டும் நினைவு வைத்துக் கொள்... நான் உனக்கு அநீதி இழைக்கவில்லை. வெகுவிரைவில் நீ சுவர்க்க இன்பத்தைச் சுவைப்பாய். யுத்தத்தில் வெற்றி பெற்ற பாண்டவரோ மயானமாகிவிட்ட பூமியை ஆளும் பெயரில் நாளும் பச்சாதாபத்தில் வெந்து தவிப்பார்கள்.

''அவர்களது பெருமை கொஞ்சங் கொஞ்சமாகக் குன்றிப் போகும். அவர்கள் நோயாலும் மூப்பாலும் வலுவிழந்த உடல்களுடன் வாழ்க்கைச் சுமையைச் சுமக்கும் போது நீ ஆனந்தமாக சுவர்க்க சுகத்தில் திளைத்துக் கொண்டிருப்பாய். இங்கு பாண்டவரின் உற்றார் உறவினர் யாரும் இல்லை. நீயோ உன் உறவினரும் நண்பரும் புடைசூழச் சுவர்க்கத்தில் வீற்றிருப்பாய்... உயிர் மீதுபாசத்தைவிட்டுமரணத்தைஎதிர்கொள், போ...''

''அப்படியே ஆகட்டும்... ஆனால் நீங்கள் எப்போதும் இந்த உலகத்திலேயே கிடந்து உழல வேண்டியதுதான்! பேராசைக்காரப் பிராமணரே, நீர் அழிவற்றவர். ஆதலால் சுவர்க்கம் உமக்கில்லை.''

சிரித்துக் கொண்டு சொன்னார் வியாசர், ''நான் சுவர்க்கத்துக்கு ஏங்கவில்லை, துரியோதனா. நான் படைத்துள்ள இந்தக் காவியம் யுகத்துக்கு யுகம், தலைமுறைக்குத் தலைமுறை மனிதர்களை எப்படி ஆள்கிறது என்பதைப் பார்த்துக் கொண்டு எப்போதும் பூமியிலேயே வாழ்ந்திருக்கத்தான் எனக்கு ஆசை, பேராசை. வேறெந்தக் கவிக்கு இத்தகைய பேறு கிடைத்திருக்கிறது, சொல்!''

வீர சொர்க்கத்தை எதிர்நோக்கித் துரியோதனன் யுத்த பூமிக்கு நடந்தான்.

டி.வி.ஆர்

ஆகாச கங்கை

20

ஒவ்வொரு இரவும் மாயா இருந்த அறைக்கு வந்து அவள் படுத்த கட்டிலில் உட்கார்ந்து உள்ளுறப் புலம்புவது, தாரக்ராமின் வழக்கமாகி விட்டது.

இன்றோடு இரண்டு மாசமே ஆறது! தமக்குத்தாமே அவர் பேசிக்கொண்டார். நினைக்க நினைக்க உயிரோடு கண்காணாத இடத்தில் இருக்கிற பெண்ணும், என்றோ எங்கோ தொலைதூரத்தில், உயிரை விட்ட மனைவி கோமளியும் அவர் கண்முன் வந்தார்கள்.

அரவிந்தன் விதித்த நிபந்தனை முகத்தில் அறைந்தாற்போல நினைவுக்கு வந்தது. நேரில் வரக் கூடாது; கடிதம் மூலமும் தொடர்பு வைத்துக்கொள்ளக் கூடாது. என்ன கொடூரமான, இரக்கமற்ற நிபந்தனை?

ஆனால் அவர் அரவிந்தனைக் குற்றம் சொல்லுவானேன்? தம்முடைய காலம் முடிவதற்குள் தம் பெண்ணை ஒரு நல்லவன் கையில் ஒப்படைக்க வேண்டும் என்று அவர் தானே தீர்மானம் செய்தார். அந்த நல்லவன் அரவிந்தன் என்று அவர் தானே பொறுக்கி எடுத்தார்? அவன் இரண்டு நிபந்தனைகளை மெல்லிய குரலில், முகம் சுளிக்காமல், வெறுப்பு தொனிக்காமல் விதித்த போது அவர், அவற்றை அப்போது கடுமை எனக் கருதாமல் ஒப்புக் கொண்டாரே!

அதனுடைய பலனை இப்போது அனுபவிக்கும் போது பாசம் மனத்தை ரத்தக் களறியாக்கியது.

எப்படி அவர் தம் பெண்ணைப் போய் பார்ப்பார்? அரவிந்தன் நாள் முழுதும் வீட்டிலேயே இருக்கிறானே!

சிந்தனையினூடே அவர் ஹாலுக்கு வந்தார்.

ராஜம்மா நின்று கொண்டிருந்தாள்.

"கொறிக்கறதுக்கு ஏதானும் தாருங்கோ, ராஜம்மா".

ஒரு நாளைப் போல தெனமும் ராத்திரியானா குடிக்கிறது ஒடம்புக்கு நல்லது இல்லே".

"கொறிக்கறதுக்கு ஒண்ணுமில்லேன்னா சரி....

"என் ஒடம்பு எப்படியோ நாசமாப் போகட்டும்..."

"அதனாலே யாருக்கு என்ன லாபம்? கலியாணமானப்புறம் சீதை பிறந்த வீட்டுக்குப் போய் இருந்ததாக ராமாயணத்தில் இல்லே. ஆனா மாயா அப்படி இல்லே. ஒரு நாள் இந்த ஜனகன் வீட்டுக்கு வருவாள்!"

"அது வரையில் குடிக்கிறேன்"

"ஆனா அதுக்குள்ளே உடம்பு தாங்கிண்டு நிக்கணுமே. இப்பவே கண்ணுக்குக் கீழே பை கட்டி நிக்கறது".

"நான்தான் நான் பெத்த பெண்ணைப் பார்க்கக் கூடாது. நீங்களும் கூடப் பார்க்கக் கூடாதா? ஒரு நடை மெட்ராஸ் போயிட்டு வாங்களேன்..."

"அவசியம் இல்லே... ஒரு தடவை மாயாவைப் பார்த்துட்டா இப்ப இருக்கிற ஏக்கம் குறைஞ்சுடாது... திரும்பி வந்தப்புறம் மறுபடியும் ஏங்க ஆரம்பிச்சுடும்" என்றாள் ராஜம்மா.

"போக மாட்டேளா?"

"அவசியம் இல்லே. அரவிந்தன்ட்டேந்து எப்ப ஒரு தகவலும் வரலையோ அப்பவே, மாயா சௌக்யமா இருக்கான்னு தான் நான் நினைக்கிறேன்."

"அவளோட உடம்பு சௌக்கியம் மட்டுமா இப்ப முக்கியம்? அவன் சரியானபடி மருந்து மாத்திரை எல்லாம் கொடுத்து வர்றானோ தெரியலே..."

"நாம நினைச்சுண்டிருக்கோம் நாம கொடுக்கிற மருந்தாலே தான் எல்லாருமே சௌக்கியமா இருக்கோம்னு. மாயாவுக்கு மருந்து தேவையே இல்லே... பயமில்லாத சூழ்நிலையும், சரியான அடைக்கலமும்தான் அவளுக்கு வேண்டும்!"

தாரக்ராமுக்கு கோபம் வந்தது. இவளுக்கு என்ன தெரியும், மாயாவுக்கு எது தேவை, எது தேவை இல்லை என்று.

"எப்படிச் சொல்றேள்?"

"நீங்க அடிக்கடி வெளிநாடுகள் போறேள். டில்லி, கல்கத்தான்னு பறக்கிறேள். அப்பவெல்லாம் இந்த வீட்லே மாயாவும் நானும் தான். அப்ப ஒரு வாட்டி கூட நான் அவளுக்கு ஒரு மாத்திரை கூட கொடுத்ததில்லே. ஆனால் ஒழுங்கா கொடுத்து விட்டதா உங்க கிட்ட பொய் சொல்லியிருக்கேன்!"

''அதை ஏன் இப்பச் சொல்லணுமாம்?''

''நீங்க இதுக்கெல்லாம் அனாவசியமா விசாரப்பட வேண்டாம்னு''

''எனக்கு என் பெண்ணைப் பார்க்கணும்''.

''உங்க இஷ்டம்''.

''அப்படீன்னா...?''

''அவ மெட்ராஸ் போய் இப்பத்தான் ரெண்டு மாசமாறது. அதுக்குள்ளே அவன் போட்ட கண்டிஷனை மீறணுமா?''

''நீங்கதானே அன்னிக்குச் சொன்னேள், அவன் ஒண்ணும் என்னை மிரட்டறதுக்காகக் கண்டிஷன் போடலைன்னு?''

''இப்பவும் அதையேதான் சொல்றேன். இப்ப நீங்க போய் அங்கே நின்னா, மாப்பிள்ளையை அடக்கி ஆள, 'நினைக்கிற மாமனார்'னு அவன் நினைப்பான். ஏன் இதுக்கு இடம் கொடுக்கணும்?''

''நான் குடிக்கப் போறேன்'' என்ற தாரக்ராம் நகர்ந்தார். பிறகு, ''நாளைக்கு நான் மெட்ராஸ் போறேன்!'' என்றார்.

ராஜம்மா பதில் பேசவில்லை. வாதத்துக்கு மருந்து தேடலாம். பிடிவாதத்துக்கு ஏது மருந்து?

* * * * *

டாஜ் ஓட்டல் அறைக்குள் பிரவேசித்த பிறகுதான் ஆராமுதனிடம் முதன் முதலாகத் தம் பெண்ணைப் பற்றி தாரக்ராம் விசாரித்தார்.

''ரெண்டு மூணு தடவை போன் கூடப் பண்ணினேன் சார்! அனாவசியமா தொந்தரவு செய்ய வேண்டாம்னு அர்விந்த் சொன்னார்''

''என் பெண் எப்படி இருக்கா?''

''ஏன் உங்களுக்கு லெட்டர் கூட எழுதறதில்லையா? நீங்க போன்லே பேசலையா?''

''என்னை நீங்க கேள்வி கேட்டு மடக்காதீங்க, ஆராமுதன். என் பெண்ணை, என் ஒரே பெண்ணை ஏன் இந்த அரவிந்தனுக்குக் கொடுத்தேன்னு உமக்குத் தெரியுமா?''

''தெரியாது''.

''ஏன் பொய் சொல்றேள்?''

''சத்தியமா தெரியாது. அரவிந்தன் எப்படி உங்க பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ளச் சம்மதிச்சான்னும் தெரியாது!''

''ஏன், என் பெண்ணுக்கு என்ன குத்தம்?''



''அர்விந்த் வசுமதிங்கற பெண்ணோட பழகிண்டிருந்தது எனக்குத் தெரியும். உங்க பெண்ணும் மாப்பிள்ளையும் வீட்டுக்கு வந்த போது, செம்மண் இட்டுக் கோலம் போட்டிருந்தாள் அந்தப் பெண். ஏன் ஆரத்தி எடுக்கலைன்னு கூட எனக்குப் பட்டது''

''என் பெண்ணுக்கு மனசு கொஞ்சம் பலவீனம்னு உங்களுக்குத் தெரியுமா ஆராமுதன்?''

''தெரியாது'' வாயாரப் பொய் சொன்னார். சென்ட்ரல் ஸ்டேஷனில் மாயா ரயிலிலிருந்து பிளாட்பாரத்தில் குதித்ததும், அவள் சிரித்த சிரிப்பும், ஒரு கைக் குழந்தையைப் பார்த்து ஆரவாரம் செய்ததையும் நேரிலே பார்த்தவர் அவர். அப்போதே ஒரு சந்தேகம் உதித்திருந்தது. அவர் வீட்டுக்கு மனைவியுடன் விருந்து சாப்பிட வராமல், அரவிந்தன் விருந்தைத் தன் வீட்டுக்கே வரவழைத்துக் கொண்டான். ஏன்? மாயாதானே காரணமாக இருக்க வேண்டும்?

இந்த எண்ணங்களெல்லாம் அன்றே அவருடைய நெஞ்சில் உதித்தன.

''அந்தப் பெண் பெயர் என்னன்னு சொன்னீர் ஆராமுதன்? மறந்துட்டேன்''

''வசுமதி''

''ஹங்... வசுமதி. அட்வகேட் கேஜிகேயிட்ட ஜூனியர்... நான் அவளைப் பார்க்க வேண்டும்''

''இப்ப ஹைகோர்ட்டில் இருப்பாள். ஏன் உங்க பெண் வீட்டுக்குப் போகலியா?''

''இல்லை''.

''சரி''.

''ஏன்னு கேட்காதீங்கோ.''

''கேட்கலை''.

''நான் கேட்ட ஒரு கேள்விக்கு நீங்க இன்னும் பதில் சொல்லலை''

''மன்னிச்சுடுங்கோ... நடு நடுவே மத்த பேச்சு எழுந்ததாலே கேள்வியை மறந்துட்டேன்''

''ஒரு பெரிய கம்பெனியின் முதலாளி நான். எனக்கு இருக்கிறது ஒரே பெண். என் சொத்தெல்லாம் ஒரு நாள் அவளுக்குத்தான் போகப் போறது. நிலைமை இப்படி இருக்கறப்ப நான் ஏன் அரவிந்தனைத் தேர்ந்தெடுத்தேன்?''

''அவனோட அப்பா ரங்கராஜன் என்கிறவர் உங்க சிநேகிதர்''

''அது ஒரு சின்னக் காரணம். அதை நான் என்னுடைய காரிய வெற்றிக்கு ஆயுதமா உபயோகிச்சுட்டேன்...என் பெண் மாயாவை இன்னொருத்தனுக்குக் கலியாணம் பண்ணி வைச்சிருந்தா அவன் நான் கண் மூடற வரை காத்திருந்து விட்டு, என் பெண்ணை அசைலத்தில சேர்த்துடுவான்''


''அரவிந்தன் அது மாதிரி செய்ய மாட்டார்னு நீங்க நம்பிட்டேன்னு தெரியறது''.

''நம்பிக்கை இருக்கு. ஆனா நீங்க இப்ப இந்தப் பெண்ணைப் பத்திப் பேசறதைப் பார்த்தா பயமும் சந்தேகமும் உண்டாறது.''

''யாரு வசுமதியைச் சொல்றேளா?''

''ஓய், நீர் ஒரு முட்டாள் மானேஜர். எத்தனை பெண்களைப் பற்றி நாம இப்ப டிஸ்கஸ் பண்றோம்?''

''வசுமதி ஒருத்தி தான்''



''பின் ஏன் அபத்தமாப் பேசறீர்... என் பெண்ணின் கழுத்திலே தாலியைக் கட்டிட்டு இன்னொரு பெண்ணோட கட்டில்லே புரள்ற மாப்பிள்ளேன்னு எனக்குப் பட்டா, நான் அரவிந்தனை என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது''

''என்னை என்ன செய்யச் சொல்றேளோ அதைச் செய்ய நான் கடமைப் பட்டிருக்கேன்''.

''நான் மொதல்ல இந்தப் பெண்ணைப் பார்த்துப் பேசறேன். 'க்ளையண்ட் மாதிரி ஆரம்பிச்சு மெதுவா அரவிந்தன்—மாயாவுக்கு வரேன். நீர் என்ன செய்யறீர்!''

''சொல்லுங்கோ'' ஆராமுதன் குழைந்தார்.

''ராமநாதன்னு ஒரு சூப்பிரண்டண்ட் ஆஃப் போலீஸ்-ரிடையரானப்புறம் பிரைவேட் டிட்டெக்டிவ் ஏஜன்ஸி வைச்சு நடத்தறார். அவரை எங்கேஜ் பண்ணி என் மாப்பிள்ளையையும், இந்தப் பெண்ணையும் கவனிக்கச் சொல்லும்''.

''என்னைக்கேட்டா...'' ஆராமுதன் இழுத்தார்.

''எங்காத்திலே இந்தத் தமிழ் மாசம் பூரா வெள்ளிக்கிழமை வெள்ளிக்கிழமை வெல்லக் கொழுக்கட்டை பண்ணி ஏழு சுமங்கலிகளுக்கு வெத்திலே பாக்கு மஞ்சளோட கொடுக்கறு. நாளைக்கு மாயாவுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யறேன்!''

''ஓய், உமக்கு எது இருக்கோ இல்லியோ நல்ல குயுக்தி இருக்கு ஓய்... இதைவிட பெரிய பிரைவேட் டிட்டெக்டிவ் ஏஜன்ஸி இருக்க முடியாதுன்னு சொல்லாம சொல்றீர்!''

''என்னாலான சின்ன உபயம்!''

''ஓம்ம ஆத்துக்காரிட்டே என் பொண் மாயா ஒரு மெண்ட்டலி வீக் கேர்ள்னு சொல்லித் தொலைக்காதீங்கோ...''

''சத்தியமா என் வாயாலே சொல்ல மாட்டேன். ஆனு அவ என்னை மாதிரி இல்லே. கெட்டிக்காரி. அவளே புரிஞ்சுக்குவா'',

''சரி நான் இப்ப ஹைகோர்ட்டுக்குப் புறப்படறேன்''.

''கார் ரெடியா இருக்கு''.

''நான் இங்கே வந்திருக்கிற விஷயம் என் மாப்பிள்ளைக்குத் தெரிய வேண்டாம்''.

''அந்தப் பொண் சொல்லுமே!''

''அவளை நான் கவனிச்சுக்கறேன்''.

''அப்புறம் நான் உங்களை எப்ப மீட் பண்ணணும்?''

''நாளைக்குச் சாயங்காலம்...அதுக்குள்ளே உம்ம ஆத்துக்காரியோட ரிபோர்ட் வந்துடாதா?

''இன்னிக்கு வெள்ளிக்கிழமையா இல்லாமப் போச்சேன்னு என் மனசு அடிச்சுக்கறது என்றுர் ஆராமுதன்.''

தாரக்ராம் எழுந்தார்.

* * * * *

கேஜிகேயின் ஹைகோர்ட் சேம்பரில் இரண்டு பேர் டைப் அடித்துக் கொண்டிருந்தார்கள்.

''மிஸ்டர் கேஜிகே இல்லியா?''

''ஸெவன்த் கோர்ட்லே இருக்கார். நீங்க யாரு?'' என்றுன் ஒருவன்.

தாரக்ராம், ''ஜூனியர்லாயர்வசுமதியைப் பார்க்கணும்!'' என்றுர்.

''உங்க உறவா?'' என்று இன்னொருவன் கேட்டான்.

''உறவா இருந்தாத்தான் பதில் சொல்லுவியா?''

தாரக்ராம் கேட்ட தோரணையில் அவன் சற்றே திகைத்து ஏறிட்டுப் பார்த்தான்.

''யார்ட்டே எப்படிப் பேசணும்னு உங்க ரெண்டு பேருக்கும் தெரியலேன்னு, கேஜிகேயிட்டே சொல்லி என் கம்பெனிக்கு அனுப்பி வைக்கச் சொல்றேன்... மொதல்லே மிஸ் வசுமதியை வரவழைக்க ஏற்பாடு செய்!''

அவன் புறப்பட்டு வெளியேறுவதற்கும், வசுமதி கையில் கேஸ்கட்டும் கறுப்பு கவுனுமாக நுழைவதற்கும் சரியாக இருந்தது.

''இதோ ஜூனியரே வந்து விட்டார் சார்!'' என்றுன் ஒருவன்

''குட்மார்னிங் மாடம். ஐ'ம் யுவர் க்ளையண்ட்... மை நேம் இஸ் தாரக்ராம். ஃப்ரம் பாம்பே!''

ஒரு சில நொடிகள் வசுமதி ஆடிப் போனுள்.

ஒரு புகைப்படத்தில் அவரைப் பார்த்திருந்தாலும் சட்டென்று அதையும் அவரையும் இணைத்துக் கோக்க முடியவில்லை.

''உள்ளே வாங்க'' என்றுள் அவள்.

''மொதல்லே இந்த இரண்டு பசங்களையும் கொஞ்சம் வெளியே போகச் சொல்லுங்க. மேட்டர் கான்ஃபிடன்ஷியல்'' என்றுர்.

வசுமதி அவரை ஏற இறங்கப் பார்த்தாள்.

''ஸாரி... சார்! அவங்க வேலே செய்யறுங்க!'' என்றுள்.

இப்போது தாரக்ராமுக்கு வசுமதி எப்படிப் பட்டவள் என்று லேசாகப் புரிந்தது.


(தொடரும்)


''மாமனுர்கிட்ட அதிகமா வரதட்சணை கேட்டது தப்பாப் போச்சு!''

''ஏன்?''

''போலீஸ் ஸ்டேஷன்லேர்ந்து கோர்ட் வரை மாப்பிள்ளை ஊர்வலம் வைச்சுட்டார்!''

— எஸ். மஞ்களா.





அறிமுகப்படுத்துகிறோம்!

புதிய ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர்

அது வேர்க்குருவிற்கு விரைவாக நிவாரணமளிப்பது மட்டுமல்ல, உண்மையிலேயே அதைத் தடுத்திட உதவுகிறது.

நீங்கள் வேர்க்குருவைத் தடுக்க முடியும்போது அது தாக்கும்வரை ஏன் காத்திருக்க வேண்டும்?

இப்போது, உங்கள் வேர்க்குரு பிரச்சினையைக் கட்டுப்படுத்த இன்னும் மிகத் தீவிரமான வழி—புதிய ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர். அது வேர்க்குருவிற்கு விரைவாக நிவாரண மளிப்பது மட்டுமல்ல உண்மையிலேயே அதை தடுத்திட உதவுகிறது.

புதிய ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் ஏன் மிகவும் தீவிரமானது?

உங்களுக்கு அதிகமாக வியர்த்து, அந்த வியர்வை உங்கள் சருமத்தில் அதிக நேரம் தங்கியிருக்கும்போது, வேர்க்குருவின் தாக்குதலுக்கு நீங்கள் ஆளாகிறீர்கள். அதற்காகத்தான் புதிய ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் மிகவும் தீவிரமானதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. வியர்வையை நன்றாகவும் விரைவாகவும் உறிஞ்சும் வண்ணம் விசேஷமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது அது—உங்கள் சருமத்தில் பாக்டீரியாக்கள் பெருகுவதைத் தடுக்கிறது—ஆகவே வேர்க்குரு இல்லை, எரிச்சல் இல்லை, கசகசப்பு இல்லை. அப்படி என்ன வேறுபாடு? அதற்குமேல் புதிய ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர், இப்போது மகிழ்ச்சிதரும் புதிய நறுமணமும்* கொண்டுள்ளது.

வரும் கோடையில் வேர்க்குரு தாக்கும் வரை காத்திருக்காதீர்கள். விரைந்து வாங்கிடுங்கள் ஒரு பேக் புதிய ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர். வேர்க்குருவை நீங்கள் தடுக்க முடியும்போது, வேர்க்குருவால் ஏன் சிரமப்பட வேண்டும்?



வியர்வையை நன்றாகவும் விரைவாகவும் உறிஞ்சுகிறது.







*சந்தன மணத்திலும் கிடைக்கிறது.

Johnson & Johnson

OBM-4181 TAM


முற்றும் புதிய கோலங்களில் என்றும் அழியாக் கலைவண்ணங்கள்!
லக்ஷ்மி சில்க்
மாடியில், பனகல் பார்க் எதிரில், தி. நகர், சென்னை 600 017.
உரிமையாளர் லக்ஷ்மி சில்க் ஹவுஸ் (சென்னை) & கோ.


லக்ஷ்மி சில்க் ஹவுஸுக்கு விஜயம்
செய்தாலன்றி உங்கள் பட்டுப்
புடவைகளின் தேர்வு நிறைவு
பெறுவதில்லை
வாருங்கள். 30,000க்கும் மேலான
அரிய படைப்புகளிலிருந்து
தேர்ந்தெடுங்கள்.
Lakshmi Silk
ஹ வு ஸ்




சந்தைக்கு வராத சந்தோஷங்கள்

வையவன்

இனிய ரோஜாக்களே,
எந்த நம்பிக்கையின்
தூதுவர்களாக
நீங்கள் மலர்கிறீர்கள்?

நட்சத்திரச் சுடர் அவிந்து
நெஞ்சின் ஒளி இருண்டு
முன் வனங்களான
இந்த பூமியில்
இன்னும் நம்பிக்கைகள்
மிச்சமுண்டு என்று
நிரூபிக்கவா?

அகம் களித்தால் ஆனந்தம்
என்று அறிவிக்கவா?
ஆடம்பரச் சந்தையில்
இதய நெகிழ்ச்சியை
பண்டமாற்று செய்து
கவலையைக் கொள்முதலாக்கிட
எங்களுக்கு
எளிமையின் உல்லாசத்தைப்
போதிக்கவா?


மண்வெளியில் செய்த
யுத்தங்கள் போதாதென்று
விண்வெளியில்
ஒத்திகை பார்க்கும்
எங்கள் உலோக இதயங்களில்
உங்கள் மென்மையைப்
பரிமாறவா?

எங்கள் சாலைக்கு
வராத சந்தோஷங்களை
மௌன ஒலிபரப்பில்
மறு அஞ்சல் செய்யவா?

மாலை வந்தால் மரணம்,
அட விட்டு உதறு கவலையை!
மலர்ந்து சிரி.
தீமையை, அச்சத்தை
சிறுமையைச் சோர்வை
பார்த்துப் பார்த்து
மாள்கின்றவரை சிரி
என்று வலியுறுத்தவா?

இனிய ரோஜாக்களே!
எங்கள் பெண்கள்
உங்களை மிகவும் நேசிக்கிறார்கள்
அவர்கள் நுட்பச் செவியில்
உன் மலர்ச்சியின்
சங்கு எப்படியோ
கேட்டிருக்கிறது!

இனிய ரோஜாக்களே!
பெண்மையை நாங்கள்
உபயோகப் பொருளாக்கி
ஒரு யுகம் முடியப் போகிறது.
மன்னிக்க முடியாத
அந்தப் புன்மையை
உங்கள் மென்மையால்
தண்டிக்கவா மலர்கிறீர்கள்?



வண்ணப்படம்: அமித்துண்டு

1984-ல் மருத்துவ சாதனைகள்

* ஆறு வயசான சிறுவன் க்ரௌன் செல்பிக்கோ. அவனுடைய ஐந்து வயசுத் தம்பி ஜேமீக்கோ. தங்கள் தோலின் மீது பெட்ரோலை ஊற்றிக் கொண்டு தீக்குச்சியைக் கிழித்தால் என்ன நடக்குமென்று அவ்வளவு 'சீரியஸாக'த் தெரியாது. ஆனால் பின் விளைவு விபரீதமாயிற்று.

  உடம்பில் பட்டிருந்த பெயின்டைத் தேய்த்து அகற்றுவதற்காக அமெரிக்காவில் வ்யோமிங் என்ற ஊரில் ஒரு தன்னந்தனி வீட்டில் பெட்ரோல் கலந்த ஒரு ஸால்வன்ட்டை ஊற்றித் தேய்த்தார்கள். ஒருவன் ஒரு தீக்குச்சியைக் கிழித்தான். விளைவு தீப்பிடித்து 97 சதவீதம் இருவருடைய தோலும் பொசுங்கி விட்டது.

  உடனடியாக டென்வரிலுள்ள குழந்தைகள் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டனர். உயிர் பிழைத்தார்கள். ஆனால் தோல் பொசுங்கி விட்டதே! ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான டாக்டர் ஹோவர்ட் க்ரீன் இயற்கையாகவே புதிய முறையில் தோல் செல்களை அமைக்கும் ஆராய்ச்சியில் வெற்றி கண்டிருந்தார். அவரது ஆராய்ச்சியின் உதவியுடன் நாலைந்து மாதங்களில் சிறுவர்கள் புதிய தோலுடன் மகிழ்ச்சியோடு பள்ளிக்கூடம் போகிறார்கள்.

* தோலின் செல்கள் பாதித்தால் மனோநிலை பாதிக்கப்பட்டு விரக்தியான சுபாவம் வளர்கிறது என்று வாஷிங்டனைச் சேர்ந்த நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் மென்டல் ஹெல்த் பேராசிரியர் டாக்டர் எலியட் கெர்ஷன் கண்டுபிடித்திருக்கிறார்.

* குழந்தைகளின் வயிற்றுப் போக்கிற்கு சர்க்கரை, உப்பு ஆகியவற்றைச் சம அளவில் கலந்து கொடுத்தால் மிக விரைவில் சுகமாகும் என்று கேள்விப்பட்டிருக்கலாம். இப்போது திரவமாக ஒரு ஊசி மருந்து தயாரித்துள்ளார் பின்லாந்தின் டாம்பியேர் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த

இனி எதுவும் தப்ப முடியாது



புதிதாக உற்பத்தி செய்யப்பட்ட தோல்.





செயற்கை இருதயம் பொருத்தப்பட்ட டாக்டர் வில்லியம் டிவ்ரீஸ். ஜாவிக்–7 — செயற்கை இருதயம்



செயற்கைத் தோல் நிபுணர்
டாக்டர். ஹோவார்ட் க்ரீன்

டாக்டர் டைமோ வெலிகாரி. இந்த ஊசி மருந்தை உடம்பில் குத்திச் செலுத்த வேண்டியதில்லை. குழந்தைகள் வாயில் பீய்ச்சினால் போதும். மருந்து வேலை செய்யத் தொடங்கிவிடும்.

டயபெடீஸுக்கு இன்சுலின் ஊசிதான் ஒரே விமோசனம் என்ற நிலைக்கு இப்போது அமெரிக்காவில் மாற்று கண்டுபிடித்தாகி விட்டது. மாற்றுச் சிறுநீரகச் சிகிச்சை போன்று மாற்றுக் கணையச் சிகிச்சையும் நடந்து ஒரு டயபெடீஸ் நோயாளிக்கு உறவினர் ஒருவரின் கணையம் மாற்றிப் பொருத்தப்பட்டது. அவருக்கு இப்போது இன்ஸுலின் ஊசி அவசியமில்லாமற் போய் விட்டது. மின்னசோட்டா பல்கலைக் கழகத்தின் ரணசிகிச்சைப் பேராசிரியர் டாக்டர் டேவிட் ஈ. சுதர்லேண்ட் 22 நோயாளிகளை சென்ற ஆண்டு குணப்படுத்தியிருக்கிறார்.

இவ்வாறு மருத்துவத்தில் நேர்ந்து வரும் புரட்சிகள் குறித்து எமோரி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டாக்டர் ரிச்சர்ட் எம். க்ராஸ் கூறுகிறார்.

"நாம் அறிந்த உயிரியல் இனி ஒருபோதும் அதே மாதிரி இருக்கப் போவதில்லை. இந்த உயிரியல் புரட்சியின் பாதிப்பிலிருந்து உயிருள்ள எந்த ஜீவனும் இனி தப்ப முடியாது."

நன்றி: 'வாய்ஸ்.'

புதுப்பிக்கப்படும் இருதயங்கள்

1984 அக்டோபரில் ஐந்து பவுண்டு எடையுள்ள பெண் குழந்தை ஒன்று இதயக் கோளாறுடன் பிறந்தது. அதற்கு வால்நட் பருப்பு அளவுள்ள ஏழு மாத பபூன் பெண் குரங்கின் இதயம் பொருத்தப்பட்டது.

மாற்று இதயத்தை உடல் சாதாரணமாக ஏற்பதில்லை. எதிர்க்கிறது. அந்த எதிர்ப்பை மாற்ற சைக்ளோஸ்போரின் என்ற ஊசி மருந்து செலுத்தப்பட்டது. வழக்கமாக இதயக் கோளாறுடன் பிறக்கும் குழந்தைகள் ஒரு வாரத்திற்கு மேல் உயிர் தரிக்காது. இந்த மருந்தினால் அந்தக் குழந்தை மூன்று வாரம் உயிரோடிருந்தது.

செயற்கை இதயம் 323 பவுண்டு எடையுள்ள நியூமாடிக் யூனிட்டால் செயல்படுகிறது. 11 பவுண்டு எடையுள்ள ஒரு போர்ட்டபிள் பவர் சிஸ்டம் இதயத்தை பம்ப் செய்கிறது. செயற்கை இதயம் அலுமினியத்தாலும் பாலியுரிதேனாலும் செய்யப்பட்டது.

ஆண்டிற்கு 200 மாற்று இதயச் சிகிச்சைகள் அமெரிக்காவில் செய்யப்படுகின்றன. மிருகங்களின் இதயத்தை மனிதர்களுக்கு மாற்றுவதும், செயற்கை இதயம் பொருத்துவதும் இனி சர்வசாதாரணமாய் விடும்.

ஸ்ரீ வேணுகோபாலன்

மோகினி திருக்கோலம்

32

திருக்கோலம் தெரியுமோ?

'திருவேங்கடவன் சொத்து என்று அடுக்கியிருக்கும் பொதிகளை.எல்லாம் காண்பிக்க,

வர்மன் கண்கள் விரிந்தவனாய், "அத்தனையும் பொன்னா?" என்று வினவினான்.

"பொன், வைரம், பவழம், நீலம், புஷ்பராகம், வெள்ளி" என்று பிரமிக்கத் தகும் வார்த்தைகளை சீனிவாசாச்சாரியார் அடுக்கிக் கொண்டே போனார்.

"எல்லாவற்றையும் விட" என்று குரலைத் தூக்கிக் கூறினார் அவர்: "இவை அத்தனையும் பகவான் மீது பக்தர்கள் வைத்திருக்கும் நம்பிக்கைகள்" என்றார்.

"வடக்கே துவாரகையிலிருந்து தெற்கே கன்னியாகுமரி வரை பக்த ஜன வெள்ளங்கள், தம் நம்பிக்கைக்காக வார்க்கும் பூவுலக உயர் பொருள்கள்..யார் யாருக்கு என்ன கஷ்டத்திற்கு நிவர்த்தி வேண்டுமோ, எந்த விருப்பம் பூர்த்தி ஆக வேண்டுமோ, எந்த நோய் நலிய வேண்டுமோ, எந்த மோட்சம் கிடைக்க வேண்டுமோ அத்தனைக்கும் சின்னங்கள் இங்கே விழுந்து குவிந்து கிடக்கின்றன," என்றார் அவர்.

"வருஷம் என்ன வருமானம் வருகிறது சுவாமி?" என்றான் வர்மன்.

"இரண்டு லட்சத்துக்கும் அதிகம்.* இன்னும் கூடிக் கொண்டே வருகிறது."

"பொருள்களை எல்லாம் இங்கே ஏன் இரட்டி வருகிறீர்கள்?"

"சமீப காலமாக இது நிகழ்ந்து வருகிறது. ராஜா யார், ராஜாங்கம் யாருடையது என்று தெரியாமல் கலக்கமாக இருப்பதால் இதை அவர்களுக்குத் தெரியாமல் இங்கே சேமித்து வைத்திருக்கிறோம்."

"யார் என்று நிச்சயமாகி விட்டால் கொடுத்து விடுவீர்களா?"

"அதற்கு என்ன தடை?"

"அப்படியானால் உடன்படிக்கைக் கூழ விடம் கொடுத்துவிடுவதுதானே?"

சிரித்தார் அவர். "அவர்களே முடிவு எடுத்து இன்னும் கேட்கவில்லையே! அதனால் வினையும் சாதக பாதகங்களைத் தாங்கிக் கொள்வார்களா என்றும் தெரியவில்லையே! எல்லாவற்றையும் விட கார்வேட் அரசரிடமிருந்து எமக்கு ஆணை வரவில்லையே!"

"அவர் ஆணையிட்டால்கொடுத்துவிடுவீர்களா?"

"ஆமாம் நிச்சயமாக! மறுபேச்சும் கிடையாது. பழைய யாதவராய வம்சம் ஆயிற்றே. அவர்கள் இந்தத் திருவேங்கட மலையைப் பாதுகாக்கிறவர்கள் ஆயிற்றே! வழியில் கண்டா மண்டபத்தைப் பார்க்கவில்லையோ!"

"பார்த்தேனே! பழசாகி மூளியாக நிற்கிறதே!"

"அது நிற்கும் இடத்தைக் கவனித்தாயா?"

"ஏன்?"

"மலையின் தென் விளிம்பில் நிற்கிறது. அந்த நாளில் அதில் ஒரு மணி தொங்கியது."

"அப்படியா?"

"ஆமாம்! அந்த மண்டபத்திற்குத் தெற்கே பள்ளத்தாக்கைத் தாண்டி சந்திரகிரி மலை தெரியுமே கவனித்தாயோ?"

"நன்றாகத் தெரிந்தது. அரண்மனையும் கோட்டையும் கூட ரொம்பச் சின்னதாகத் தெரிந்ததே!"

"சரி, அந்த அரண்மனையில்தான் முன்பு யாதவராய மன்னர்கள் வாழ்ந்து வந்தார்கள். இந்த கண்டா மண்டபத்தில் உள்ள மணி முழங்கினால் அங்கே அவர்கள் அரண்மனையில் அதன் ஒலி நன்றாகக் கேட்கும். இங்கே பகவானுக்குத் தளிகை நிவேதனம் ஆன பிறகு இந்தக் கண்டா மண்டபத்திலுள்ள மணியை முழங்குவார்கள். அது சந்திரகிரி அரண்மனையில் ரீங்காரம் செய்யும். அந்த ஒலி கேட்ட பிறகுதான் சந்திரகிரி மன்னர் உணவு அருந்த உட்காருவார்!"

வர்மன் ஆச்சரியத்துடன் தலைநிமிர்ந்தான்.

"அதற்காகவா இந்த மண்டபம் கட்டி இருக்கிறார்கள்?"

---

* கதை நடக்கிற காலத்தில் (1751) இரண்டு ரூபாய்க்கு ஒரு சாதாரண குடும்பம் ஒரு மாதம் முழுதும் வாழலாம் என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

''ஆமாம், பிள்ளாய், சந்திரகிரியின் யாதவராயர்கள் அவ்வளவு சிறந்த வைஷ்ணவ பக்தர்கள்! அவர்கள் வழியில் வந்து ராஜ்யத்தைச் சிறிது சிறிதாக இழந்து வெறும் ஜமீன்தார்களாகி நிற்பவர்கள் தான் இன்றைய இந்த கார்வேட் அரசர்கள். இவர்கள் தான் இந்தத் திருவேங்கடத் திருவைக் காப்பாற்றி வருகிறார்கள்! அவர் மட்டும் சொன்னால் போதும்.''

''அவர் சொல்லவில்லையா?''.

''சொல்லவில்லை; சஞ்சலப்படுகிறார். சஞ்சலத்திற்குக் காரணம் உண்டு. இன்று நாட்டில் ஒருவர்க்கொருவர் அடித்துக்கொள்பவர்கள். எல்லோருமே சபலம் உடையவர்கள்! இதனால் இவர்களிடையே வெற்றி தோல்வி அறுதியிட்டுக் கூறும் வண்ணம் நேர்ந்து விடாது! உடன்படிக்கைக் குழுவையே எடுத்துக் கொள்! இந்த நாட்டில் அடி வைத்திருக்கும் எல்லா அன்னியரையுமே அது ஒருத்தனாக இருந்து துரத்திவிட முடியாது! ஒருத்தரோடு கூட்டுச் சேர்ந்து மற்றொருத்தரை வீழ்த்தி, பிறகு வேறொருத்தரோடு சேர்ந்து, இன்னொருத்தரை வீழ்த்தி இப்படிக் குயுக்திகளினாலே தான் சர்வ வல்லமை பீடத்தை அடைய வேண்டும். இந்தக் குயுக்தியை அவர்கள் அறிந்திருந்தாலும் முதல் கூட்டு யாரோடு சேர்வது என்பதிலேயே குழம்பிக் கொண்டு இருக்கிறார்கள்.

இதில் சட்டென்று ஒரு முடிவை அவர்களால் எடுக்க முடியவில்லை.

சஞ்சலப்படுகிறார்கள்.

இந்த நிலையில்தான் கார்வேட் ராஜா சொன்னதன் பிரகாரம் திருவேங்கடவன் பொக்கிஷத்தை இங்கே சேர்த்து வருகிறோம்.

இப்போது கூட உன்னை கார்வேட் ராஜர் ஏன் திருமலைக்கு அனுப்பினார்?''

கேள்வியைத் தூக்கிச் சீனிவாசாச்சாரியார் நிறுத்தினார்.

''அவருக்கே குழப்பம் சுவாமி! திருவேங்கடவனிடமேபாரத்தைஒப்படைப்பதுஎன்று நினைக்கிறார். அவர் சொல்வண்ணமும், இந்தப் பொக்கிஷத்தை ஒப்படைப்பது என்று'' என்றான் வர்மன்.

''நல்லது சொன்னாய், பிள்ளாய்! கார்வேட் அரசரும் நன்றே சொல்லியிருக்கிறார். எல்லோருமே திருப்பதிப் பணத்தைக் கேட்கிறார்கள். கூர்ந்து பார்த்தால் அவரவர் கேட்பதற்குப் பின்னால் ஏதோ ஒரு நியாயப்படுத்தப்பட்ட காரணம் இருக்கிறது. இந்தப் பிரச்சினையைத் திருவேங்கடவனே தீர்த்துக் கொள்ளட்டும், நல்ல முடிவு!''

சீனிவாசாச்சாரியார் இடத்தை விட்டுக் கிளம்பினார்.



மீண்டும் படிகள்மீது ஏறிப் பொந்துவழி யாக வெளியே வந்து, கல் தடுப்பை எடுத்து வைத்தார்.

மூச்சு வாங்கியது.

"நல்லவேளை! என்னால் உனக்கு இந்த மறைவிடம் காட்ட முடிந்தது. எப்போதும் எனக்கு இதில் ஒரு கவலை உண்டு! பொக்கிஷம் இருக்குமிடம் யாருக்காவது தெரிய வேண்டும் என்று! கார்வேட் ராஜாவின் அந்தரங்கனாக இருக்கிறாய்! உனக்குத் தெரிந்தது நல்லதுதான் தம்பி! ஒரு சத்தியம் செய்! இந்த இடத்தை அன்னியர் யாருக்கும் காட்டிக் கொடுக்க மாட்டேன் என்று!"

வர்மன் சத்தியம் செய்தான்.

இருவரும் கண்டா மண்டபத்தின் பாரிசம் வழியாக வந்தார்கள். மண்டபத்தை இப்போது உணர்ச்சித் துளும்பலோடு பார்த்தான் வர்மன்.

கடைசியில் விடைபெறும் போது, "அப்பனே! கார்வேட் ராஜாவின் உடம்பு என்னமாக இருக்கிறது?" என்றார்.

"ஆயாசமாக இருக்கிறார்," என்றான் வர்மன்.

"பாவம்! அவருக்கும் கவலை இராதா? இருக்கும் ஒரு பெண்ணும் பணயமாகப் போயிருக்கிறாள். அந்தப் பெண்ணுக்குத்தான் எத்தனை கஷ்டங்கள் வருகின்றன?" என்றார்.

வர்மன் சட்டென்று திரும்பி, "இதற்கு முன் வேறு கஷ்டப்பட்டாளா சுவாமி?" என்றான்.

சீனிவாசாச்சாரியார் சோகமாக முகத்தைச் சுருக்கினார்.

"ஹூம்! அந்தப் பெண் சின்ன வயசில் மாங்கல்யத்தை இழந்தவளாயிற்றே! ஜமீன் அதைத் தெரியாது வளர்த்து வருகிறார்," என்றார் சீனிவாசாச்சாரியார்.

திடீரென்று அந்த ஏழுமலைகளும் அவன் பாதங்களை விட்டுக் கழன்று போனது போல் தோன்றியது.

இருகைகளாலும் இறுக்கத் தன் உத்தரீயத்தைப் பற்றினான்.

"சுவாமி! என்ன சொல்கிறீர்கள். அந்தப் பெண் ஒரு விதவையா?"

—ஆமாம்! ஆறு வயதுக்குள் எல்லாம் முடிந்து விட்டது. அதைத் தெரியாமல்தான் அவளை வளர்த்து வருகிறார். பிரபந்தங்களும் வியாக்கியானங்களும் அவளுக்கு நிறையப் பாடம். ஆண்டாளாகத் திகழ்வாள் என்று எல்லோருடைய அபிலாஷை!"

வர்மன் மௌனமடித்து நின்றான். பேசவில்லை. கண்கள் வெறித்து சூன்யமாகப் பார்த்தன. திடீரென்று உணர்வுகள் ஓடி விட்ட மாதிரி இருந்தது.

"நான் வரட்டுமாப்பா!" என்று சீனிவாசாச்சாரியார் சொன்னதும் தான் நினைவு பற்றியது.

"சரி, சுவாமி!" என்றான்.

காட்டு வழியில் அவர் புகுந்து சில விநாடிகளுக்குள் மறைந்து போனார்.

வர்மன் குனிந்த தலையோடு நடந்து போனான்.

நெஞ்சு பலமுறை விம்மியது.

கன்னத் தடத்தில் ஈரம் மெல்லிதாகப் படர்ந்தது.

"என்ன தம்பி நேரமாக்கிவிட்டாய்!" என்றார் வேல்லான்.

இருவரும் 'மூக்கு பாவி'க்குச் சென்றார்கள். வேல்லான் நீர் அருந்தினார்.

வர்மன் கைகால்களை மட்டும் கழுவிக் கொண்டான்.

இருவரும் பிறகு மலை ஏறினார்கள்.

* * * * *

புதுச்சேரியின் வெளிப்புறத்துப் பங்களாவில் கிளி கூவிய போது யாரோ வருகிறார்கள் என்று செஞ்சுகாவிற்குத் தெரியும்.

சன்னலோர மஞ்சத்திலிருந்து மெள்ளத் திரும்பினான்.

அவளது குறுகுறுக்கும் பார்வை பல இடங்கள் நோக்கித் துள்ளியது.

கடைசியில் வாசல் புறத்திலிருந்து அவளது தாதி பூவாத்தாள் வந்த போது, "என்ன பூ?" என்றாள்.

கையிலிருந்து கருளை எடுத்துக் கொடுத்தாள் பூ. "அந்த ராமய்யன் தெற்கிலிருந்து வந்திருக்கிறார். உங்களிடம் கொடுக்கச் சொன்னார்" என்றாள்.



"ஸ்வாமிஜீ... காப்பி கொண்டு வந்திருக்கேன்... சாப்பிடுங்க..."

"அடியேன் காப்பி அருந்துவதில்லை பக்தா..."

"போகட்டும்... பால் கொண்டு வரவா ஸ்வாமீ...?"

"பாலும் அருந்துவதில்லை பக்தா..."

"சரி... ஸ்காட்ச் விஸ்கி தண்ணி கலந்து கொண்டு வரவா ஸ்வாமீ?"

"தண்ணி கலக்க வேண்டாம் பக்தா..."



செவிடர்களும் சங்கீதம் கேட்கலாம்

டமார செவிடுகளும் சங்கீதம் கேட்கும் வண்ணம் கையடக்கமான ஒரு சின்னஞ்சிறு எலெக்ட்ரானிக் கருவி இப்போது மார்க்கெட்டுக்கு வந்திருக்கிறது. ரிஸ்ட் வாட்ச் மாதிரி இதைக் கையில் கட்டிக் கொள்ளலாம். ஸீமென்ஸ் நிறுவனம் வடிவமைத்துள்ள இதன் பெயர் மினி – போனேடர்.

நன்றி: ஸ்காலா.

ராமய்யன் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை திருச்செந்தூர் வரை யாத்திரை போய் வருவார்.

அங்கங்கே உறவுகள் சொந்தங்கள் உள்ளவர்கள் அவரிடம் லிகிதங்களைக் கொடுத்து அனுப்புவார்கள்.

அவரவரிடம் சேர்ப்பித்துவிட்டு அவரவர் தரும் மறு உத்தரத்தையும் வாங்கி வருவார்.

இதற்காக அவருக்குப் பலரும் வெகுமதி கொடுப்பார்கள்!

செஞ்சுகா ஆர்வமுடன் சுருளைப் பிரித்துப் பார்த்தாள்.

அருமைத் தங்கை செஞ்சுகாவை ஆசீர்வதித்து சிந்து அக்காள் எழுதியது:

மோகினித் திருக்கோலத்தைப் பற்றி இங்கே தீவிரமாகப் பேசிக் கொண்டு இருக்கிறார்கள்.

எப்போது விழா எடுப்பது என்பது சீக்கிரம் முடிவாகி விடும்.

அது நல்ல நாளாக இருக்கும் என்று நம்புகிறேன்.

அப்படி விழாவை நிச்சயித்தால் உன்னை உடனே சந்திக்க வருவேன்.

அப்பா சௌக்கியமாக இருக்கிறார் என்று அடிக்கடி யாராவது வந்து கூறுகிறார்கள்.

மீண்டும் அக்காள் சிந்துவின் ஆசீர்வாதம்.

இருமுறை படித்து சுருளைத் தன் சந்தனப் பெட்டியில் போட்டுக் கொண்டாள்.

மோகினித் திருக்கோலம்!

அவளுக்குச் சிரிப்பு வந்தது.

பாற்கடலில் கிடைத்த அமுதத்தை தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் பங்கிடும் போது, அசுரர்களை ஏமாற்ற வேண்டி விஷ்ணு தரித்துக் கொண்ட மோகினி உருவம்.

அசுரர்கள் அந்தக் கோலத்தைக் கண்டு மயங்கி அமுதத்தைக் கேட்பது கூட மறந்தார்கள்.

சிரித்தாள் செஞ்சுகா!

''பூ'' என்றாள்.

''என்னம்மா!'' என்றாள் பூ.

''மோகினித் திருக்கோலம் தெரியுமா?'' என்றாள்.

''ஓ! தெரியுமே! கோவில்லே சாமிக்கு வேஷம் போடுவாங்களே!''

செஞ்சுகாவிற்குப் புன்னகை சுழிந்து கொண்டு வந்தது.

'மோகினித் திருக்கோலம்' சங்கேதத்தில் என்ன இருக்கிறது என்று அவளுக்கு (செஞ்சுகா) தெரியும். அதற்குத்தான் அவள் காத்துக் கொண்டிருக்கிறாள்! அதற்குத்தான் எல்லோரும் பாடுபடுகிறார்கள்.

மனம் திடுக்கிட்டது. வர்மன் திடீரென்று நெஞ்சின் வளைவில் தோன்றிவிட்டான்.

குங்குமமாகக் குறுநகை குழம்பியது.

ஏனோ தெரியவில்லை!

இதற்கு முன்பு வரை தனிமை ஒரு வேதனையாக இருந்ததில்லை.

இப்போது அங்கங்கு கணங்கள் முன் முன்னாகக் கிளம்பிக் குத்துகின்றன.

நெஞ்சில் சுருக்கென்று ஆயிரம் பொத்தல்கள்.

''வீரரே! எல்லாம் என் திருமாலுக்கே என்று நேர்த்திப் பட்டிருந்தேன். இப்போது நீர் புகுந்து எடுத்துக் கொள்கிறீரே, நியாயமோ!

நிச்சயம் கேட்க வேண்டும்.

மனம் இந்த மானிடர்பால் எப்படிச் சென்றது?

'தெய்வம் மனுஷ்ய ரூபேண' என்பார்களே.

வர்மன் உருவத்தில் தெய்வம் வந்து விளையாடுகிறதோ!

அரூபமாய், அளவற்றதாய், பெயர், குணம் அற்றதான தெய்வத்தை அவள் அடைய முடியுமோ?

அரூபத்தை ரூபமாக்கி, அளவற்றதை அளவாக்கி, பெயர், குணம் இல்லாததற்கு பெயர் குணம் தந்து தனது சிற்றறிவுக்குள் சிக்கும் படி ஒரு மானிட உருக் கொடுத்தால்தானே அவள் அதை அடைய முடியும்!

வர்மன் தான் அந்த மானிட உருவோ?

எழுந்தாள். மஞ்சள் தடவிய ஓலையை எடுத்து வந்தாள். எழுத்தாணி சகிதம் எழுத ஆரம்பித்தாள்.

(தொடரும்)

நீரைக் கொதிக்க வைத்தல், பாட்டிலை கிருமி நீக்கம் செய்தல், வெப்பநிலை சோதனை செய்தல்—ஆகிய பிரச்சனைகள் இல்லை.



புதிதாகப் பிறந்த குழந்தை உணவைப் பெற்றிட எத்தகைய சுலபமான, வசதியான, இயல்பான வழி இருக்கிறது பார்த்தீர்களா?

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இயல்பாக நடந்த நீண்ட சோதனை கணிப்பின் மூலம் இயற்கை கண்டு கொண்டுள்ளது:

குழந்தைக்கான தாய்ப்பாலை உன்னத உணவாக்குபவை அதில் இயல்பாக சரிவிகிதமாகக் கலந்துள்ள உடல் வளர்ச்சிச் சத்துக்கள் (புரதம்), சக்தி தரும் சத்துக்கள் (கார்போ ஹைட்ரேட்டுகள், கொழுப்பு) ஆரோக்கியமான பாதுகாப்புச் சத்துக்கள் (வைட்டமின்கள்) ஆகும்.

தூய்மைக்கேடு பிரச்சினை இல்லை.

உங்கள் குழந்தை, முலையிலிருந்து பாலை நேரடியாக குடிப்பதால் தூய்மைக்கேடு ஏற்படும் அபாயம் அதில் இல்லை, தயாரிப்பு அல்லது பாலின் வெப்பநிலையை சோதித்தல் போன்ற பிரச்சினைகளும் அதில் இல்லை. அத்துடன் வயிற்றில் வாயுக்கோளாறுகள் மற்றும் இதர நோய்களிலிருந்து உங்கள் குழந்தையை பாதுகாத்திட தாய்ப்பாலில் நோய் எதிர்ப்புப் பொருள் இயல்பாகவே உள்ளது —இன்னும் இதர நன்மைகள்கூட அதிலே —உதாரணம் ஸ்கர்வியைத் தடுத்திட வைட்டமின் 'சி'. முலைப்பால் உண்ட குழந்தை பாதுகாப்பும் தன்னம்பிக்கையும் பெறுகிறது. காரணம் நீங்கள் குழந்தையை அரவணைத்து பாசத்தையும் சேர்த்தல்லவா பாலூட்டுகிறீர்கள்.

நாளும் பிரபலமடைகிறது

அதன் ஊட்டச்சத்து மற்றும் இதர நலன்கள் விரிவாகவும் அதிகமாகவும் உணரப்படுவதால் மேல் நாடுகளிலும்கூட முலைப்பால் கொடுத்தல் மிக அதிகமாக பிரபலமாகி வருகிறது.

உலகளாவிப் பிரபலமடைகிறது.

அதன் ஊட்டச்சத்து மற்றும் இதர நலன்கள் விரிவாகவும் அதிகமாகவும் உணரப்படுவதால் மேலை நாடுகளிலும் கூட முலைப்பால் கொடுத்தல் மிகவும் அதிகமாக பிரபலமாகி வருகிறது.

உங்கள் உடல் நல பாதிப்பு அல்லது பால் பற்றுக்குறை ஆகியவற்றால் நீங்கள் குழந்தைக்கு பால் கொடுக்கமுடியாமல் போனால் என்ன செய்வது?

உங்கள் குழந்தைக்கு நீங்கள் சிறந்த 'தாய்ப்பால் மாற்று' தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஸ்ப்ரே ட்ரை செய்யப்பட்ட அமுல்ஸ்ப்ரே

அமுல்ஸ்ப்ரே-நன்கு சமச்சீராக கலக்கப் பட்ட சத்துக்களுடன் கூடியது—பிரதம தரமுள்ள புரதம், ஜீரணிக்க எளிதான கொழுப்பு மற்றும் கார்போ ஹைட்ரேடுகள், சரியாகக் கலந்துள்ள வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள்.

ஏற்கனவே கொதிக்க வைத்த வெது வெதுப்பான நீரில் அதைக் கலப்பது எளிது, முன்னாலேயே அதை பசைபோல் தயாரிக்கவேண்டிய அவசியம் இல்லை.

சிக்கனமானது

டின்னில் அடைக்கப்பட்டுள்ள குழந்தை உணவுகளில் மிகவும் சிக்கனமானது, அமுல் ஸ்ப்ரே. காரணம், அது இந்தியாவின் 'வெண்மைப் புரட்சிக்கு' முன்னோடியான நவீன பால் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது.

ஆனால் கொதிக்க வைத்த நீர், சுகாதார முறையில் கிருமி நீக்கம் செய்யப்பட்ட பாத்திரங்கள் மற்றும் பால் புட்டிகள் உபயோகித்தலை உறுதி செய்து கொள்ளுங்கள். பால் கலக்கப்படும்போது அதிகம் நீராகி விடுவதை தவிர்ப்பதற்கும், போதுமான ஊட்டச் சத்துக்களை உறுதி செய்வதற்கும் டின்மீது குறிப்பிட்டுள்ள வழிமுறைகளை கவனமாக பின்பற்றுக.



அமுல்ஸ்ப்ரே

தாய்ப்பாலுக்கு அடுத்ததுதான்.

இலவசம்! அமுல் வளர்ப்பு வழி—
இதில அடங்கியுள்ளவை: கருத்தரித்தல், பேறு காலத்திற்கு முன் கவனிப்பு, பிரசவம், தாய்ப்பால ஊட்டுதல், வெளியில் கிடைக்கும் உணவு வகைகள், லேசான தானிய உணவு தருதல், குழந்தையின் அன்றாட கடன்கள், குழந்தையின் வளர்ச்சி, நோய்த் தடுப்பு, முதலுதவி, பொதுவான நோய்கள், நோயுற்ற குழந்தையைப் பாதுகாத்தல். தமிழ், இந்தி, மராத்தி, குஜராத்தி, ஆங்கிலம், தெலுங்கு மற்றும் மலையாள மொழிகளில்.

உங்கள் பெயர் மற்றும் முகவரியுடன் ரூ. 1.25 தபால் தலை ஒட்டி எழுதுக இம் முகவரிக்கு: தபால் பெட்டி எண் 10124, பம்பாய் 400 001.

ASP/AS-TAM6/83

விற்பனைக்கு விடுப்போர்:
குஜராத் கோ-ஆப்பரேடிவ் மில்க் மார்க்கெட்டிங் ஃபெடரேஷன் லிமிடெட்,
தபால் பெட்டி எண் 10, ஆனந்த் 388 001, குஜராத் மாநிலம்.



மாலை மூன்று மணிவரை நல்லவிதமாக இருந்த ராமநாதன் மூன்றரைக்கு 'மூட்' அவுட் ஆனான். அந்தப் பழைய பெட்டியை பழைய சாமான் வாங்குபவனிடம் விலைக்குப் போட்ட பின்தான் அவன் மனநிலையில் அந்தக் குழப்பம்.

''ராமநாதா... நீ அவசரப்பட்டு விட்டாய். அந்தப் பெட்டியை அப்படியொன்றும் நீ பிரமாத விலைக்கு விற்று விடவில்லை. வெறும் நான்கு ரூபாய். இந்த நான்கு ரூபாயில் என்ன வந்துவிடும்?''

வளை நண்டு போல நெஞ்சின் ஆழத்தில் யாரோ அமர்ந்து கொண்டு கொஞ்சங் கொஞ்சமாய் வளை பறிக்கிற அவஸ்தை.

அவன் மனைவி மல்லிகாவும் கணவனின் போக்கில் ஏற்பட்ட மாறுதலைக் கவனிக்கத் தவறவில்லை.

''தலைவலியா...? ஏன் இந்த திடீர் மௌனம்?'' இதமாகக் கணவனின் நெற்றியை அழுந்தத் தடவியவாறே கேட்டுப் பார்த்தாள்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லே. நான் நல்லாத்தானே இருக்கேன்.'' அவன் மழுப்பலுக்கு மல்லிகாவும் போலியாய்ச் சிரித்து வைத்தாள்.

பெயருக்கு இரவுச் சாப்பாட்டை முடித்தான். சீக்கிரமே படுக்கையில் தஞ்சம் புகுந்தான். உறக்கம் வரவில்லை; மாறாக உளைச்சல்தான் அதிகமாயிற்று. 'எத்தனை பிரச்னை இல்லை? அடச்சீ போ' என்று மனத்தை அதட்டிப் பார்த்தான். உளைச்சல் ஓய்கிற பாடாய்க் காணோம்.

''அந்தப் பெட்டி... அந்தப் பெட்டி.. அதைப் பழைய சாமான் காரனுக்கு விற்றிருக்கக் கூடாது...'' வாய் முணுமுணுத்தது. புரண்டு புரண்டு படுத்தான்.

அப்படியொன்றும் பிரமாதமாய் வெள்ளியாலோ, வெண்கலத்தாலோ செய்யப்பட்ட பெட்டி அல்ல அது. தோல், ரெக்ஸின் வகை கூட இல்லை. மிகச் சாதாரண கெட்டி அட்டையால் செய்யப்பட்டது. மேலே பளபளப்புக்காக ரெக்ஸினால் 'கவர்' பண்ணியிருந்தார்கள். அவ்வளவுதான்!

அதை விட நவீன பெட்டிகள் ராமநாதன் வீட்டில் அநேகம் உண்டு. எனவே இந்தப் பெட்டி உபயோகம் குறைந்து போனதால் பரண் மேல் ஒரு ஓரத்தில் போட்டு வைத்து விட்டான். சில பழைய துணிகள், பழுப்பேறிய கதைப் புத்தகங்கள்... ஒன்றிரண்டு நைந்த சோளிகள்... இவைகளே அந்தப் பெட்டியில் இருந்தன.. அந்தப் பெட்டியைத் திறக்க வேண்டிய நிர்ப்பந்தம் யாருக்குமே வந்ததில்லை.

ஆறு ஆண்டுகளாகச் சீந்துவாரற்று அநாதையாகப் பரண் மேலேயே தூசி படிந்து கிடந்தது.

மாதக் கடைசி. அவன் கையில் சில்லறைச் செலவுகளுக்குக் கூட காசு கிடையாது.

பழைய புத்தகங்கள், செய்தித்தாள்கள் எல்லாவற்றையும் திரட்டி பழைய பேப்பர் காரனிடம் போட்டு காசாக்கினான். அப்பொழுது தான் இந்தப் பழைய நைந்து போன பெட்டியும் அவன் கண்களில் பட்டது. இதையும் சேர்த்துப் போட்டால் கூடுதலாகக் காசு கிடைக்குமே என்ற எண்ணத்தில் அதையும் விற்று விட்டான்.



முதுகு வளைந்து தொய்ந்து போன அந்தப் பெட்டியை எடுத்துத் தூசி தட்டும் போது ஈகப்பட்ட பாச்சை, அந்துப் பூச்சி, பல்லிக் குஞ்சுகள் எல்லாம் பொல பொலவென்று அங்கேயும் இங்கேயுமாக இடம் தேடி ஓடின. இனி அவைகள் வாசம் செய்ய புதிய இடம் தேட வேண்டும்.

பழையன கழிந்தால் தான் புதியன வர இயலும். ஆனாலும் அந்தப் பெட்டி...

ஆனால் அம்மா உகப்பி விட்டு விட்டாள்.

"ஏண்டா... ராமா... அந்தப் பெட்டியவா பழைய விலைக்குப் போட்டுட்டே! நான்தான் அது உங்க அப்பா ஞாபகமாயிருக்கட்டு மேன்னு பரண் மேலே... பத்திரப்படுத்தி வெச்சேன். சரி... பரவாயில்லே... அதனாலெ ஒண்ணும் நாம அவரை மறந்துடப் போற தில்லே..."

அம்மாவின் அந்த வார்த்தைகளுக்குப் பிறகுதான் அவனுக்குஇந்தஉளைச்சல்.அப்பா வின் நினைவுச் சின்னமாக, அவர் இறந்த பிறகு ஆறு ஆண்டுகளாக அம்மா போற்றி வந்ததை விற்று விட்டோமே என்று பதை பதைத்தான். அவன் நினைவுகள் பின்னோக்கி நெடுந்தூரம் சென்றன.

* * * * *

அப்பா—

கம்பீரமான அந்தக் காலத்து மனிதர். பெரிய தேசத்து ராஜா ஒருவர் மஃப்டியில் இருப்பதைப் போன்ற தோற்றம். அகன்ற நெற்றி. பெரிய தீட்சண்யம் மிக்க கண்கள். நெற்றியில் ஒரு பைசா அளவிலான சந்தனப் பொட்டு. அதன் நடுவே அவரே தயாரித்த வாசனை மிக்க குங்குமம். பெரிய முரட்டு மீசை; பஞ்சகச்சம்தான் கட்டுவார். விசிறி மடிப்புத் துண்டு. வெண்கலக் குரல். வயல் வெளியில் ஆளோடு ஆளாய், வெயில் மழை பாராது உழைக்கும் வலிமை.யாருக் கும் அஞ்சாத பாங்கு. உண்மைக்கு மட்டுமே தலைவணங்கி ஊரில் பல போலிப் பெரிய மனிதர்களின் எதிர்ப்பை நிறையவே சம்பா தித்துக் கொண்டார்.

"ஐயா, ராமநாதா... உனக்கு அவ்வளவு பண முடையா? உங்க அம்மா என்னமோ நெனச்சுப் பாதுகாத்து வந்த அந்தப் பழைய பெட்டியைக் கூட வித்துட்டியே!" ராமநாத னின் அப்பா அவன் மனக்கண்முன் வந்து நின்று கேட்டார்.

"ஐய்யோ... அப்பா... என்னை மன்னிச் சுடுங்க. தெரியாம சில்லறைத் தேவைகளுக் காக அந்தப் புனிதமான பெட்டியை விலைக்

குப் போட்டுட்டேன்!'' ராமநாதன் புலம்பினான்.

அப்பா சிரித்தார். கடகடவென சப்தம் போட்டுச் சிரித்தார்.

''அப்பா... அப்பா... அப்படிச் சிரிக்காதீங்க. எனக்குப் பயமாயிருக்கு... பயமாயிருக்கு,'' ராமநாதன் வாய்விட்டுக் கதறினான். முகம் வியர்த்து விட்டது.

''என்னங்க... இன்னும் நீங்க தூங்கலேயா? எதுவும் கனவு கண்டீங்களா?'' கனிவோடு கேட்டாள் மல்லிகா.

அவனுக்குக் குடிப்பதற்குத் தண்ணீர் கொடுத்தாள். முகத்து வியர்வையைப் புடவைத் தலைப்பால் துடைத்துவிட்டாள்.

எப்படியோ அசதியில் தூங்கியும் விட்டான்.

* * * * *

மறுநாள் காலை.

அலுவலகம் போவதற்குமுன், பழைய சாமான் விற்பவர்களின் இடம் நாடிச் சென்றான்.

ஒவ்வொரு கடையாக, கவனமாகப் பார்த்து வந்தான்.

அதோ—

அங்கே, அந்தக் கடையில் அதே பெட்டி. நடு முதுகு வளைந்த பெட்டி. அவன் அப்பா உபயோகித்த பெட்டி ஓரமாய்க் கவிழ்ந்து கிடந்தது!

கடைக்காரரிடம் அந்தப் பெட்டியின் விலையைக் கேட்டான்.

''அது மாதிரிப் பெட்டி இப்போ வர்றது கஷ்டங்க!'' சொல்லிக் கொண்டே தூசி தட்டிப் பெட்டியை அவனுக்குக் காட்டினார் வியாபாரி.

''நேற்று நான் ஒரு தெரு வியாபாரியிடம் விற்றதுதான்'' என்று ராமநாதன் சொல்ல நினைத்தான். ஆனால் சொல்லவில்லை.

''ஐயா... இது என்ன விலை...?''

''காலையிலே போணி பண்ணுங்க! விக்கிற விலை பதினைஞ்சு. ஒரே விலை. உங்களுக்காக வேணும்னு ரெண்டு ரூபா... குறைச்சுக்கலாம்!'' கடைக்காரர் கறாராய்ப் பேசினார்.

ராமநாதன் யோசிக்கவில்லை. சொன்ன ரூபாயைக் கொடுத்துவிட்டுப் பெட்டியைப் பெற்றுக் கொண்டான்.

பெட்டியைப் பார்த்ததும் அவன் அம்மாவுக்கு நிலை கொள்ளாத ஆனந்தம். இறந்து போன தன் கணவனே மீண்டும் உயிர் பெற்று வந்தது போல உணர்ந்தாள்!

''ஏங்க... அதே நாலு ரூபாய்க்குத்தானே வாங்கினீங்க...?''-என்று அவர் மனைவி மல்லிகா கேட்டாள்.

''ஆ...மாம்... அதேவிலைதான்,'' சொல்லி விட்டு அவன் அலுவலகம் சென்றுவிட்டான்.

* * * * *

மாலை அலுவலகம் முடிந்து வீடு திரும்பினான்.

வீட்டில் புதியவர் ஒருவர் 'ஈஸிசேரில்' சாய்ந்து வெற்றிலை பாக்கு போட்டுக்கொண்டிருந்தார்.

தூரத்து உறவு யார் என்று தெரியவில்லை. அம்மா அறிமுகப்படுத்தினாள்.

''அண்ணாச்சி... உங்களுக்கு இவனை அடையாளம் தெரியலேயா...?'' அம்மாதான் கேட்டாள்.

''ஏம்மா, நீ சொல்லியா தெரியணும். உன் பிள்ளைதான்! அப்படியே அப்பாவைக் கொண்டு இருக்கிறானே. அவரைப்போலவே அகன்ற நெற்றி, கூர்மையான பார்வை, அதே வெண்கலக் குரல், ஒரே ஒரு வித்தியாசம். அவர் பஞ்ச கச்சம். இவன் பேண்ட்,

ராமநாதனின் சிந்தனை வேறு திசையில் விரிந்தது.

அப்பாவின் நினைவு வெறும் ஜடப்பொருளான அந்த அட்டைப் பெட்டியில் இருப்பதாக நினைத்தது எவ்வளவு அறியாமை என்று மனத்திற்குள் கூசினான்.

நானே அப்பாவின் ஞாபகச் சின்னம் தானே!

இந்த உண்மை எனக்குத்தான் மறந்து போயிற்று. அம்மாவின் அனுபவம் கூட இதை உணர மறந்து விட்டதே.

என்னைவிட வேறு எந்தப் பொருளும் அப்பாவை அவ்வளவு நெருக்கமாக நினைவுக்குக் கொண்டு வர முடியாதே!

''என்னடா, ராமநாதா... திகைச்சுப்போயி நின்னுட்டே...'' அம்மா அவனை நினைவுலகிற்குக் கொண்டு வந்தாள்.

''கம்பீரமாக நிமிர்ந்து நிற்பதில் கூட அவன் அப்பாவைப் போலவேயிருக்கிறானே!'' வந்தவரின் திகைப்பு.

மல்லிகா கணவனுக்குக் காப்பி கொண்டு வந்தாள்.

ராமநாதன் பரண்மேல் இருந்த அந்தப் பெட்டியையே உற்றுப் பார்த்தான்.

''பதின்மூன்று ரூபாய் அதிகம்தான்!'' அவன் உள் மனம் சொல்லிற்று. அப்புறம் அவனே சமாதானப்படுத்திக் கொண்டான். 'மனிதனுக்குப் பொருள்கள் என்றால் எப்போதுமே ஒரு பைத்தியம்! என்ன தான் நான் அப்பாவின் அடையாளங்களைப் பெற்றிருந்தாலும் அப்பா புழங்கிய பொருளுக்கு ஒரு மதிப்பு உண்டே! அந்த மதிப்பை நான் உணர்ந்து கொள்ள ஒரு ஞாபகத்தின் விலை அப்படி ஒன்றும் அதிகமில்லை.'

என் தலைமுடி
எப்படி உதிர்கிறது
என்பதைப் பார்க்க வேண்டாம்.
என் பேரனின்
தாடி
எப்படி முளைக்கிறது
என்று பாருங்கள்!

மூலம்: ஜப்பானியக் கவிதை
தமிழில்: சிங்கம்புணரி சே. கோவலன்





ஆரோக்கியமான பற்களுக்கும் ஈறுகளுக்கும் என்றுமே ஆதாரம்
நம்பகமான கிராம்புத் தைலம் அது தருமே பரிகாரம்

புதிய


இதோ

ப்ராமிஸ் டூத் பவுடர்

காலங்காலமாக பயன்பட்டு வரும் கிராம்புத் தைலம் கொண்டது.

கிராம்புத் தைலம் கொண்ட ப்ராமிஸ் டூத் பவுடர் அளிக்கும் நன்மையைப் பாருங்கள்.

- வாய்த் துர்நாற்றத்தையும் பற்சிதைவுக்குக் காரணமான கிருமிகளையும் அகற்றுகிறது.
- உங்கள் சுவாசத்திற்கு புத்துணர்ச்சியையும் தூய்மையையும் தருகிறது.
- உங்கள் ஈறுகளை இதமாகத் தேய்த்துக் கொடுத்து ஆரோக்கியத்தை உண்டாக்குகிறது.
- உங்கள் பற்களுக்கு பளிச்சிடும் வெண்மையைத் தருகிறது.
- பெப்பர்மிண்ட் மற்றும் கிராம்புத் தைலத்தின் இணையற்ற கலவை.



பல்சாரா

கிராம்புத் தைலம் கொண்ட புதிய இணையற்ற ப்ராமிஸ் டூத் பவுடர்

CHAITRA-BLS-436 TAM



ஏடு சேமித்தால் நெய்

தினமும் வாங்கும் பாலை நன்றாகக் காய்ச்சியானதும் கிடைக்கும் ஏட்டை ஒரு ஹார்லிக்ஸ் பாட்டிலில் சேகரித்து வையுங்கள். ஒரு வாரமானதும் அதைக் காய்ச்சி நெய்யாக்கினால் எவ்வளவோ பணம் மிச்சம். இது என் அநுபவம்.

பெங்களூர்—4, திருமதி. எஸ். தனலட்சுமி

நடடா ராஜா நடடா

மூன்று கிலோ மீட்டர் வரை எங்கே போக வேண்டுமானாலும் நடந்தே செல்லலாம். பஸ் செலவு மிச்சம். காத்திருக்கும் காலம் மிச்சம்; உடலுக்கும் ஆரோக்கியம்.

சென்னை—20, கே. இளமாறன்.



கொஞ்சம் நாளாகட்டுமே!

சினிமாவிற்குக் கட்டாயம் போய்த்தான் தீர வேண்டும் என்றால் படம் வெளியான பின் சிலநாட்கள் கழித்துச் சென்றால் குறைந்த கட்டண டிக்கெட் கிடைக்கும். பிளாக் மார்க்கெட்டில் வாங்குவது, உயர்ந்த வகுப்பு டிக்கெட் வாங்குவது ஆகியவற்றிலிருந்து தவிர்ந்து, பணம் மிச்சம் பிடிக்கலாம்.

பெங்களூர்—8, திருமதி எஸ். சுசீலா.

சிக்கன



விலை மலிந்தால் வாங்கலாம்

சீஸனுக்குச் சீஸன் சில பொருள்கள் விலை மலியும். இப்போது புளி. சமயங்களில் சில வற்றல் போடக் கூடிய காய்கறிகள். இவற்றை மொத்தமாக வாங்கி வைத்துக் கொண்டால் விலை ஏறுகிற போது நாம் சிரமப்பட வேண்டாம். சிக்கனமாய் நாலு காசு சேர்க்கலாம்.

சென்னை—80, டி. மைதிலி.

வாழ்த்துக்கள் தந்தியில் அடங்கும்

கல்யாணம், வளைகாப்பு, சீமந்தம், நாமகரணம், கிரஹப் பிரவேசம், சஷ்டியப்த பூர்த்தி இப்படி எத்தனை நிகழ்ச்சிகள்? எல்லா

வற்றுக்கும் நேரில் போய் ஒரு பரிசுப் பொருளுடன் அலைந்து திரிவானேன்? எத்தனை வீண் செலவு? ஒரே ஒரு வாழ்த்துத் தந்தி உங்கள் பணத்தைச் சிக்கனப்படுத்தும்.

சிதம்பரம்—1. ஏ. சாந்தி.



வேலைக்காரியே கொஞ்சம் நில்

இந்நாளில் வேலைக்காரி கிடைப்பது குதிரைக் கொம்பு. அப்படியே கிடைத்தாலும் அவளுக்கு காப்பி, சாப்பாடு, புடவை, சம்பளம் என்று 'எத்தனையோ செய்ய' வேண்டும். விட்டுச் சொல்லும் வெளியே போகும். வீட்டிலுள்ளவர்கள் ஆளுக்கொரு வேலை எனப் பகிர்ந்து கொண்டால் எல்லாம் மிச்சம். உருப்படியாய் ஏதோ செய்த திருப்தி.

திருவையாறு. சரோஜா ராவ்.

ஒரே குளிர், ஜலதோஷம் டாக்டர்

சாதாரண ஜலதோஷம், இருமலுக்கெல்லாம் டாக்டரிடம் போவதைத் தவிர்த்து வீட்டு வைத்தியம் செய்து கொள்ளலாம். அனுபவஸ்தர்களைக் கேட்டு அறியலாம். டாக்டருக்கு ஆகும் செலவு சிக்கனமாகும்.

சென்னை—15. சுசிலா முத்துக்குமரன்.



வளர்ந்தால் பார்த்துக் கொள்ளலாம்

ஒரு வயசு முதல் மூன்று வயசு வரை குழந்தைகள் வேகமாக வளரும் பருவம்.

யோசனை

அதனால் அந்த வயசில் விலையுயர்ந்த துணிகளை வாங்குவது ஆடம்பரம். எளிய பருத்தி ஆடைகளே போதும்.

வேலூர் (சேலம்) பி. ஆர். சீனிவாசன்.



பாத்திரம் தேய்ப்பது எப்படி?

பாத்திர வாஷிங் பவுடர் விலை அதிகம். சாம்பலில் சிறிது சோப் பவுடர், வாஷிங் சோடா, சீயக்காய்த்தூள் கலந்து பாத்திரம் தேய்க்கப் பயன்படுத்தலாம். செலவு மிச்சம்.

மைசூர் எஸ். சுந்தரி.

வாசகர் பங்கு

ஹலோ அண்டை வீட்டுக்காரரே!

அண்டை வீட்டில் வைத்திருப்பதெல்லாம் நமக்கும் வேண்டும் என்ற மனப் பிரமை தவிர்ந்தால் எவ்வளவோ வீண் செலவு மிச்சம். ஒற்றைக்கு இரட்டையாய் பொருளைப் போட்டிக்கு வாங்கி பூச்சி பறக்க விடுவது, பார்த்த சினிமாவையே பக்கத்து வீட்டாரோடு போட்டிக்காகப் பார்ப்பது. இது நீங்கினால் செலவு சிக்கனமாகும்.

சிறுமுகை ஜி. கோகிலா.

தீயை மூட்டுவதற்கு முன்

சமையல் செய்வதற்கு முன்பே தேவையான எல்லாப்பொருள்களையும்தயார்செய்த பிறகு தான் காஸ் ஸ்டவ்வைப் பற்ற வைப்பேன். காஸ் எவ்வளவோ மிச்சமாகும்.

ஸ்ரீ ஹரிகோட்டா, கீதா கிருஷ்ண மூர்த்தி

செலவிடாமல் இருந்தால் சிக்கனம்

இந்தச் செலவின்றி சமாளிக்க முடியாதா என்று உங்களைக் கேட்டுக் கொண்டு பின்னர் செலவழிக்கத் தொடங்கினால் சிக்கனம் தானாக வரும் என்பார் என் தந்தை. இது அனுபவத்தில் எனக்கு மிகவும் சிக்கனமாயிருக்கக் கற்றுத் தந்திருக்கிறது.

சென்னை—83, டி. என். வெங்கடேஷ்.

வாகனம் வைத்திருப்போர் கவனிக்கவும்

ஸ்கூட்டரோ, காரோ, மோட்டார் பைக்கோ வைத்திருப்பவர் அது வைத்திருக்கிற கௌரவத்திற்காக எங்கே போகவும் அதைப் பயன்படுத்தினால் பெட்ரோல் செலவு, பராமரிப்புச் செலவும் அதிகமாகும். நடக்க வேண்டிய இடத்திற்கு வாகன கௌரவம் பார்க்காமல் நடப்பது சிக்கன வழி.

வேலூர்—12, பி. எஸ். பகவந்தம் குப்தா

சோப்பைப் போய் வாங்கலாமோ?

குளிக்கவும், துணி துவைக்கவும் சோப் வாங்கிக் கட்டுப்படியாகவில்லை. எளிய முறையில் வீட்டிலேயே சோப் தயாரித்துப் பயன்படுத்தலாம். சொல்லித் தர எத்தனையோ மாதர் சங்கங்களும், பத்திரிகைகளும் உள்ளன. பணம் மிச்சமாகும்.

மதுரை—20, வே. கோமதி.

சுயமாகத் தைக்கிறோம்

நான்கைந்து சகோதரிகளும் உள்ள எங்கள் குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் ஒரு செட் டிரஸ் தைக்க நாற்பது ஐம்பது செலவாகும். அதற்காகத்தையல் கற்றுக் கொண்டு, ஒரு மெஷின் வாங்கி எங்கள் துணிகளை நாங்களே தைத்து நிறையப் பணம் மிச்சம் பிடிக்கிறோம்.

ஓசர் டவுன் ஷிப், எஸ். லக்ஷ்மி.

காய்கறி வேண்டுமா?

நம் வீட்டுத் தோட்டத்தில் நாமே காய்கறி, பூஞ்செடி கொடிகளைப் பயிரிட்டால் சிக்கனத்துக்குச் சிக்கனம். பொழுது போக்குக்குப் பொழுது போக்கு. மிகுதியாய் விளைந்த அந்தக் காய்கறியை விற்றால் காசும் கிடைக்கும்.

மேட்டூர்—2, எஸ். பத்மா.

ராகமாலிகா வழங்கும்
பட்டுப் புடவையை

குலுக்கல் முறையில்
பரிசாகப் பெறும்

அதிர்ஷ்டசாலி:

பி. ஆர். ஸ்ரீனிவாசன்,
1/17 F, பைபாஸ் ரோடு,
வேலூர் (சேலம்) 638 182.



குழந்தை நடிகை:
"அம்மா... என்னை புக் பண்ண யாராவது படத்தயாரிப்பாளர்கள் வந்தா, நான் குடும்பப்பாங்கான பாத்திரங்களில் மட்டும் தான் நடிப்பேன்னு சொல்லு..."

கொடுமைகளோடு சமரசம்...?

என் இனிய நண்பனே!

என்றேனும் ஒரு நாள் உன்னை நீ உள் நோக்கிப் பார்த்திருக்கிறாயா?

இளமையின் குணம் உனக்குள் இருக்கிறதா?

இளமையிருக்கிறதே! அது அருவி மாதிரி.

தரையில் விழுந்தவுடன் அருவிக்கு வயதாகி, பிறகு அது நிதான கதியில் செல்லும் நதியாகி விடுகிறது.

இந்த வயதில் நீ அருவி மாதிரி இருக்கிறாயா அல்லது நதியாக நகர்ந்து கொண்டிருக்கிறாயா?

சிறுமை கண்டு பொங்கும் சிந்தை இருக்கிறதே! அது இளமையின் கம்பீரமான அடையாளம்.

ஆனால், இங்கே பழகிப் போன சிறுமைகளைக் கண்டு விலகிப் போகும் மனோபாவம்தான் அதிகமாய் வளர்ந்திருப்பதாய் அஞ்சுகிறேன்.

கண்களைச் சுற்றி நடக்கும் சின்னச் சின்ன அநீதிகள், அத்துமீறல்கள், கண்களைக் கசக்கும் காட்சிகள் இவைகளையெல்லாம் பார்த்து, அதர்மத்தின் சட்டையைப் பிடித்து உலுக்க வேண்டிய இளைஞர்கள், இவைகளையெல்லாம் பார்க்கும் போது தம் கண்களை முதுகில் வைத்துக் கொள்கிறார்களே! அவர்கள் இளமையின் அச்சுப் பிழைகள்.

'துஷ்டரைக் கண்டால் தூர விலகு,' என்பது வாழ்க்கையை விட்டு வெளியே போனவர்களின் வேதாந்தம்.

பாதகம் செய்பவனைக் கண்டால் பயம் கொள்ளலாகாது; மோதி மிதித்து முகத்தில் உமிழ்ந்து விடு என்பதுதான் வாழ்க்கையோடு இருப்பவனின் வாசகம்.

அழகாகச் சொன்னான் பாரதி!

சிறுமை கண்டு பொங்குவதொன்றும் வன்முறையன்று; அது ஒரு ஜீவகுணம்.

தன் குஞ்சினைக் கொத்திச் செல்ல வருகிற பருந்தை எதிர்த்துப் பறந்து போரிடும் கோழியை இ. பி. கோ. வின்படி காவலில் வைப்பீர்கள்?

காலமாற்றத்தால்—

கொடுமைகளோடு சமரசம் செய்து செய்து இளைஞன் கோழையாகிவிடக்கூடாது.

தற்காப்புக்காக மனிதன் இனிமேல் தனக்கு மட்டும் சுவரெழுப்பிக் கொள்ள முடியாது.

வேரில் புழு விழுந்தால் தளிர் சௌக்கியமாக இருக்க முடியுமா?

எனவே இன்னொருவனுக்கு நேரும் பாதிப்பில் தனக்கும் பங்கு இருக்கிறது என்று புரிந்து கொள்வதே புத்திசாலித்தனம்.

தனக்கு ஏன் வம்பு என்று ஒதுங்குகிறவன் தன்னில் பாதியைத் தொலைத்துவிடுகிறான்.

அகிம்சையின் அர்த்தத்தைக் கூட நாம் இன்னும் அகலப்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இன்னோர் உயிருக்குத் தீங்கிழைக்காமல் இருப்பது மாத்திரம் அல்ல அகிம்சை.

இன்னோர் உயிருக்குத் தீங்கு வரும் நேரத்தில் அந்த இம்சையைச் சகிக்காமல் பொங்கி எழுவதும் கூட அகிம்சைதான்.

இயேசு பெருமான் கூட ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைக்காட்டு என்றுதான் சொன்னார். மூன்றாவது முறை அடித்தால் முதுகைக் காட்டு என்று சொல்லவில்லை.

எனவே, சிறுமை கண்டு பொங்குவது என்பது ஒரு தேசிய குணமாக வேண்டும்.

அசுத்தங்களை அழிப்பதற்கு அக்கினி நிறையத் தேவைப்படுகிறது.

கவிஞர் வைரமுத்து

வாரம் ஒரு கடிதம்



புகைப்படம்: யோகா



இவர்தான் காமராஜ்

* எஸ். பிரபா, காரைக்குடி.

? அரசியலில் தங்களைக் கவர்ந்தவர் ராமகிருஷ்ண ஹெக்டேவா? ராமாராவா?

! ராஜதந்திரத்தில் ஹெக்டே. துணிச்சலில் ராமாராவ்.

* எச். கே. நாசர், தோப்புத்துறை.

? கி. வீரமணியை அடித்துக் காயப்படுத்தியதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! கொள்கை வேறுபாடு இருக்கலாம். மனித பலவீனத்தால் துவேஷத்தைக் கைவிட முடியாமலும் போகலாம். அதற்காக, ஒரு தனி நபர் மீது வன்முறையாகத் தாக்குதல் செய்வதின் விளைவு நலமாயிருக்காது. வன்முறையை நம்பி நடத்தப்படும் எந்த அரசியலும் மறைமுகமாக ஒப்புக் கொள்ளப்பட்ட தோல்வியே!

* ஜி. குமரேசன், பாண்டமங்கலம்.

? காங்கிரஸ் நூற்றாண்டு விழாக் கமிட்டி ஆல்பத்தில் பட்டாபி சீதாராமய்யாவின் படத்தைக் காமராஜ் படமென்று பிரகரித்துவிட்டதைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

! இதற்கு வாசக அன்பர் கொடுமுடி கணேசனின் கேள்வியையே பதிலாகத் தருகிறேன்:

"பெரிதுபடுத்தக் கூடாத விஷயம் எது?"

* குரு வைத்தியநாதன், கோவிந்த புத்தூர்.

? எளிமைக்கு உதாரணமாகத் திகழும் ஒருவரை அடையாளம் காட்டுங்களேன்!

! குடிசையில் வாசம் செய்பவர் எளிமை ஒரு நிலைமை. அதில் பெருமை இல்லை. மாளிகையில் வாசம் செய்யும் நிலைமை இருந்தும் எளிமையைக் கடைப்பிடிப்பது தான் பெருமை. இந்தக் காலத்தில் அப்படி ஒருவரை நான் இன்னும் தேடுகிறேன்.

* இரா. சுவாமிநாதன், தென்பாதி.

? நம்மை விடப் பெரியவர்களைச் சந்திக்கும் போது நமஸ்காரம் சொல்ல வயதில் குறைந்த நம்மைப் பார்த்து அவர்களும் நமஸ்காரம் சொல்கிறார்களே. இது முறைதானா?

! நமஸ்கரிப்பவரை பதிலுக்கு நமஸ்கரிப்பது பண்பாடு. இங்கே வயது ஒரு பிரச்னையல்ல. மூத்தோர் நம்மை நமஸ்கரிப்பது நமது ஆசீர்வாதத்தை வேண்டுவதாக அர்த்தமில்லை. அவர்கள் நமஸ்காரம், வயதில் இளையோரின் நமஸ்காரத்துக்கு வழங்கப்படும் வெகுமதி.

* எம். ஏ. பாஷா, சின்னசேலம்.

? கருணாநிதி இலங்கைத் தமிழர் விவகாரப் போராட்டத்தின் மூலம் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்கிறாரா?

! கருணாநிதிக்கு இனி விளம்பரம் அவசியமில்லை. ஈழத்தமிழர் நிலையில் தமிழ் மக்களுக்கு இருக்கும் வேதனையை அவர் தம் வழியில் பிரதிபலிக்கிறார்! அவ்வளவுதான்.

* ஆர். பாஸ்கரன், குடந்தை

? சினிமாக்காரர்களின் அரசியல் தலையீட்டால் யாருக்கு ஆதாயம்? சினிமாவுக்கா? அரசியல் வாதிகளுக்கா? தனிப்பட்ட கட்சிக்கா?

! யாருக்கு ஆதாயமோ நாட்டுக்கு இல்லை. இது பொதுப்படையான தங்கள் கேள்விக்கான எனது பொதுப்படையான பதில்.

* பி. எல். பரமசிவம், மதுரை—1.

? தாய்க்குப் பின் தாரம். இந்த விஷயத்தில் நீங்கள் எப்படி?

! தாய் ஒப்பற்றவள். தாரம் நிகரற்றவள். தாய்க்குப் பின் தாரமா? கொஞ்சம் இருங்கள். தலையைச் சொறிந்து கொள்கிறேன். வந்து ... வந்து. தாய்க்குப்பின் தானே தாரம்? தாய் இருந்து தாரத்தைச் சொன்னால் கோபம்? தாரத்தை ஒதுக்கி தாயின் ஸ்தானத்தை உயர்த்தி வைத்தாலும் திண்டாட்டம். ஏன் சார் இப்படி சிண்டு முடிகிறீர்கள்?

எம்.ஜி.ஆர். பேசஎமல்

நீங்கள்கேட்டவை –தராசு

* டாக்டர் நாவலர்தாசன், சென்னை—56.

? எம். ஜி. ஆர். பேசாமலேயே முதல்வராக எத்தனை காலத்துக்கு இருக்க முடியும்?

! ஒரு முதலமைச்சர் பேசித்தான் ஆக வேண்டுமென்று யார் சொன்னது? எந்த அரசியல்சட்டமும்அப்படிச்சொல்லவில்லை. அவர் பேசாவிட்டால் பரவாயில்லை. அவர் செயல்கள் பேசுவதைத்தான் மக்கள் எதிர் பார்க்கிறார்கள்.

* அ. செல்வராஜ், கரூர்—1.

? காங்கிரஸ் நூற்றாண்டு விழாவில் ஒரே ஒருவர் தான் காந்திக்குல்லாய் அணிந்திருந் தாராமே!

! அந்த ஒரே ஒரு காந்திக் குல்லாயாவது காந்தீயத்தை அங்கே எல்லோருக்கும் நினை வூட்டியிருக்குமானால் சந்தோஷம்.

* க. குமரேசன், திருவாரூர்.

? நலம் தரும் சொல் ஒன்று சொல்லுங்கள்!

! நாராயணா.

* பட்டாபிராமன், குணங்குடி.

? ஜீவிதா நடிப்பதில் முன்னேறியிருக் கிறாரா?

! உறவைக்காத்தகிளியில்நூல்கட்டப்பட்ட பொம்மை. ராஜேந்தர் விரல் அசைவுக்கு இந்த பொம்மை அசைந்தது. ஆடியது. அப் புறம் பெயர் சொல்கிற மாதிரி ஒரு சுகமான ராகங்கள். அந்தக் கண்ணாடி, அந்த நரை, அந்தத்திரை, கூடவே/கொஞ்சம்பாவங்கள்— "அட, பொம்மை ஜீவிதாவா இது? பரவா யில்லையே!" என்று முணுமுணுக்க வைத் திருக்கிறார். ஜீவிதாவுக்கு ஸ்ட்ராங்கான பேஸ். முன்னேறுகிறார்.

$ ரூ 10 பரிசு பெறுபவர்:

அ. செல்வராஜ்,
ஆசிரியர் காலனி,
சி. ஆ. கோயில் சாலை,
கரூர்—639 001.


இவர்தான் பட்டாபி


ராஜசுந்திரம்


பேசாவிட்டால் என்ன?


துணிச்சல்


தாக்கப்பட்டவர்


முன்னேறுகிறார்

இருக்கிறாரே!



நீங்கள் ஒரு



தொட்டால் சுருங்கியா?

எதற்கெடுத்தாலும் முகம் சிணுங்கி மனசு வாடிப் போகும் மனோ நிலை ஆரோக்கியமானதல்ல. உரசல்களும், மோதல்களும் உள்ள நவீன வாழ்க்கையில் அந்த மனோ நிலை உதவாது. உங்களை அறியாமல் நீங்கள் ஒரு தொட்டாற் சுருங்கியாயிருக்கலாம். ஒரு சின்ன டெஸ்ட்.

(1) பிறர் உங்களை ஏற்க வேண்டும். விரும்ப வேண்டும் என்று எப்போதும் விரும்புகிறீர்களா?
ஆம்/இல்லை

(2) உங்களை யாராவது பாராட்டாவிட்டால், இனம் காணா விட்டால் வருந்துவதுண்டா?
ஆம்/இல்லை

(3) கடுகடுப்பாகவும் சிநேக பாவமின்றியும் பழகுகிறவர்களை நீங்கள் தவிர்க்க விரும்புகிறீர்களா?
ஆம்/இல்லை

(4) உங்கள் முதுகின் பின்னே பிறர் எப்போதும் உங்கள் நடத்தையை விமர்சிப்பதாகக் கருதுகிறீர்களா?
ஆம்/இல்லை

(5) உங்கள் பாதையில் வரும் தோல்விகளை ஏற்றுக் கொள்கிறீர்களா?
ஆம்/இல்லை

(6) பொது இடங்களில் முட்டாள்தனமாக நடந்துக் கொள்ள நேரிட்டால் மிகவும் மனம் பாதித்து விடுவீர்களா?
ஆம்/இல்லை

(7) பிறர் முன்னிலையில் எவரேனும் உங்களுக்கு உத்திரவிடுவதை நீங்கள் விரும்ப மாட்டீர்களா?
ஆம்/இல்லை

(8) நீங்கள் ஒரு தவறு செய்துவிட்டால் உடனே மன்னிப்பு கேட்பீர்களா?
ஆம்/இல்லை

(9) உங்களுடன் கலந்து பழக பிறருக்கு சகஜமாக இடமளிப்பீர்களா?
ஆம்/இல்லை

(10) 'ஆமாம்' போடுகிறவர்களையும் தலையாட்டுகிறவர்களையும் தான் உங்களுக்குப் பிடிக்குமா?
ஆம்/இல்லை

1, 2, 3, 4, 6, 7 ,10 ஆகிய கேள்விகளுக்கு ஒவ்வொரு இல்லைக்கும் 5 மார்க் போட்டுக் கொள்ளுங்கள். 5, 8, 9, ஆகிய கேள்விகளுக்கு ஒவ்வொரு ஆமாமுக்கு 5 மார்க். உங்கள் மார்க்குகள் 75 — 100க்குள் என்றால் நீங்கள் ஓ. கே. 50 — 75க்குள் என்றால் பரவாயில்லை. 35 — 50 என்றால் உங்கள் மன நிலையை சரி செய்ய முயற்சியுங்கள்.

ஆதாரம்: ப்ரண்ட்ஸ் மாத இதழ்

அட்டைப்பட விளக்கம்

அட்டையில் இருக்கிற சுமதி 9-ம் வகுப்பு பரீட்சை எழுதியிருக்கிறார். இவருடைய அப்பா, ஸ்வாமி மத்திய அரசின் பார்டர் ரோடு ஆர்கனைசேஷனில் இஞ்சினியர். எல்லைப்புற மாகாணங்களில் தான் எப்போதும் இருக்க வேண்டும். அப்பாவுடன் நாகாலாந்தில் இரண்டு வருடம் தங்கி, ஸ்கூலில் படித்தார் சுமதி.

"நான் பரதநாட்டியம் நன்றாகக் கற்க வேண்டும் என்று ஆசை. ஆனால் நாகாலாந்தில் பரதம் கற்றுக் கொள்ள வழியில்லை. எனவே நானும் என் அம்மாவுமாக மெட்ராஸ் வந்து விட்டோம். அரங்கேற்றம் முடிந்து விட்டது. குரு பெயர் அரவிந்தன்" என்றார்.

தகவல்: மதுமிதா.





சாகுமுன் சிறிது குங்குமம்

"முருகேசு... டேய், டேய்... உன்னைக் கையெடுத்துக் கும்பிடறேண்டா. என்னைக் கொன்னுடாதேடா... என்னை வுட்டுடுடா... முருகே... சு... முரு... கே... ஏ... ஏ..."

...ச்சீ... அந்த மரண ஓலம்... இன்னும் மறக்க முடியவில்லையே சனியன். அந்த விழிகளின் மிரட்சி... குரலின் நடுக்கம்... முருகேசு என்று அலறியபடி கடைசி மூச்சை விட்ட அவலம்... சண்முகத்தின் கதை முடிந்து விட்டது என்பதைத் தெள்ளென உணர்ந்தும் அவன் கழுத்தைச் சுற்றிய கரங்களை விலக்காமல் இன்னும் அழுத்திக் கொண்டிருந்த கொடூரமான வெறி...

பழி தீர்ந்து விட்டது. வஞ்சம் ஓய்ந்து விட்டது. ஆனால் நெஞ்சம் ஓய மாட்டேன் என்கிறதே... ஓயாமல் புலம்பிக் கொண்டிருக்கிறதே...

'...என்னைக் கொன்னுடாதேடா... முருகேசு... முரு... கே...'

நினைவுக் கரங்களின் நெரிப்பில் திணறியபடி புரண்டு கொண்டிருந்த முருகேசன் சிறைக் கதவின் பூட்டு திறக்கப்படும் சத்தம் கேட்டு எழுந்து உட்கார்ந்தான்.

டி.சாந்தாதத்

ஜெயிலர்...

கையில் இளஞ்சிவப்பு நிறக் காகிதம்...

''கடவுள் உன் பக்கம் இல்லே முருகேசா. நீ போட்ட கருணை மனு நிராகரிக்கப்பட்டு விட்டது. வருகிறஇருபத்தேழாந்தேதிஉனக்கு தூக்கு தண்டனை நிறைவேற்ற ஆர்டர் வந்திருக்கு. ஐயாம் ஸாரி முருகேசா...'' நறுக்கென்று சொல்லிவிட்டுக் கடமை முடிந்த மாதிரி போய்விட்டார். எத்தனை தூக்கு தண்டனைகளைப் பார்த்தவர்...! இதயம் இரும்பாகியிருக்கும். இல்லாவிட்டால் இந்த வேலைக்குத் தாங்குமா? அந்த 'ஸாரி' கூட ஒரு சம்பிரதாயமோ?

முருகேசனிடம் எந்தச் சலனமுமில்லை... பதற்றமில்லை... துக்கமில்லை. மரண பயமில்லை. மாறாக இதழோரம் விரக்திச் சிரிப்பு. எதிர்பார்த்ததுதான்... முன்பின் யோசிக்காமல் கண்மண் தெரியாத ஆத்திரத்தில் செய்த காரியம்... அவனுக்கு வேண்டியதுதான் இந்த மரண தண்டனை.

ஆனால்... 'வருகிற இருபத்தேழாந்தேதி' என்கிற இந்தக் கெடு சங்கதி... அதுதான் தாங்கவில்லை. இன்று என்ன தேதி...? யாருக்குத்தெரியும்...சிறையின் அறைக்குள் காலண்டரா மாட்டி வைப்பார்கள்... இன்று தேதி..., தேதி... ஆ... முந்தாநாள் சுதந்திரதினம் என்று ஸ்வீட் கொடுத்தார்களே... அப்படியென்றால்இன்றுபதினேழு. இந்தக்கணக்குப் பிரகாரம் இன்னும் பத்து நாள்தான் இருக்கிறது.

ஐயோ... மரணத்தை விடக் கொடுமையாக இதென்ன தண்டனை...! முன்பின் அறிவிப்பின்றி கழுத்தில் ஓங்கி ஒரு வெட்டு வெட்டி அல்லது துப்பாக்கியால் துளைத்து திடீரென்று அவனைக் கொன்றிருக்கக் கூடாதா? அவன் சண்முகத்தைத் தீர்த்துக் கட்டியது போல். இப்போது இந்தப் பத்து நாட்களும் ராத்திரி பகலாக அதை எதிர் பார்த்து... சாவு வராமலே செத்துக் கொண்டு... ரத்தத்தைச் சில்லிட வைக்கும் அந்த நினைவின் கொடூரம் எத்தனை பெரிய தண்டனை? ஐயோ... எப்படித் தள்ளப் போகிறேம் இந்தப் பத்து நாட்களை... 'ஓ'வென வாய்விட்டுக் கதறியபடி தலையில் அறைந்து கொண்டான் முருகேசன்.

மூன்று நாள் மெதுமெதுவாக, சித்திர வதையின் கணுக் கணுவாக நகர்ந்தன. நான்காவது நாள் அவனைப் பார்க்க அம்மா வந்தாள்.

''ஐயோ... நான் என்ன பண்ணுவேன் முருகேசு... என் ராசாவே... என்னை உட்டுட்டுப் போறியேடா... உன்னைக் காப்பாத்த யாருமே இல்லையா... என் மவனே...'' — கேவலம் ஒரு நிலத்தகராறு பெரிதாகி பழி முற்றி ஆத்திரம் கண்ணை மறைக்க அநியாயமாக சண்முகத்தின் உயிரைப் பறித்துவிட்டவன் இவன் என்று நினைத்தும் பாராமல் நியாயம் நினையாமல் பெற்ற நெஞ்சம் என் பதற்கிணங்கப் பரிதவித்து தலையைக் கம்பிகளில் மோதிக் கொண்டு பெருங்குரலெடுத்து அழுதாள். மகனின் கரங்களைப் பற்றி முகத்தில் அழுத்திக் கொண்டு ஓலமிட்டாள்.

''அம்மா... அழாதேம்மா... அப்பாவைப் பத்திரமா பார்த்துக்கம்மா... நீதாம்மா அவருக்குத்தைரியம் சொல்லணும்...''

அவனும் அழ ஆரம்பிக்கிறான். இருவர் அழுகையும்கலந்துசோககீதமாக...நேரமாகி விட்டதென்று 'சென்ட்ரி' கெடுபிடி செய்ய அம்மா பலவந்தமாக வெளியேற்றப்பட்டாள்.

அந்த வயதான அம்மாவையும் பாரிச வாயு தாக்கி கைகால்கள் செயலிழந்து படுக்கையில் கிடக்கும் அப்பாவையும் தம்பி தங்கைகளையும் நினைத்து — நல்ல காலம், அவன் கழுத்தில்தான் கயிறு ஏறப் போகிறதே தவிர அவன் ஒரு பெண்ணின் கழுத்தில் மஞ்சள் கயிறு கட்டும் வாய்ப்பு ஏற்படவில்லை — அவர்களின் எதிர்காலம் குறித்து நினைத்து... அவர்களுடன் தனக்குள்ள பந்தம் அறுபடப் போவதை நினைத்து ஓயாமல் அழுதான்.

ஐயோ... இன்னும் ஆறே நாட்கள்...!

இதயத்தைப் பிராண்டும் வேதனையில் மார்பைப் பிசைந்து கொண்டவன் பார்வையில் சட்டென்று புலப்பட்டது அந்தக் குங்குமக் கறை. செக்கச் செவேலென்று அவன் அம்மாவின் நெற்றிக் குங்குமம். அவன் கரங்களை அவன் முகத்தில் அழுத்திக் கொண்டு

நாட்டில் பொருளாதார நிலைமை ரொம்ப மோசமா போயிடுச்சு அண்ணே

''எப்படிச் சொல்றே?''

''இன்னைக்கு பத்து பர்ஸ் அடிச்சேன். மொத்தத்திலேயும் சேர்த்து 5 ரூபாய்தான் இருந்ததுன்னு பார்த்துக்கயேன்''

— ஏ. சுகுமார்,



அழுதானே. அப்போது ஒட்டிக் 'கொண்டிருக்க வேண்டும். அதைப் பார்த்த போது அன்னையைப் பார்ப்பது போலிருந்தது. அந்தச் சிகப்பு வட்டம் அவள் நெற்றியை விட்டு ஒருகணம் கூட அகலாது. அது இல்லாமல் அவன் அவளைப் பார்த்ததே கிடையாது. குளித்துவிட்டு வரும்போதுகூட அவள் நெற்றி மூளியாக இருக்காது. குளியலறைப் பிறையிலேயே சின்னக் கண்ணாடியும் குங்குமச் சிமிழும் வைத்திருப்பாள். அந்தக் காலத்து அம்மா! — அவளுக்கு மஞ்சளும் குங்குமமும் போதும்...

அந்தச் சிகப்புத் திட்டையே வெறித்துப் பார்த்தவாறு அமர்ந்திருந்தான். திடீரென்று அவனுள் ஒரு சிலிர்ப்பு. அவனுள் ஒரு திடீர்சனமான உண்மை தெறித்தது. ஒருத்தியின் குங்குமத்திற்கு உலை வைத்தவன் அவன். சண்முகத்தின் மனைவியின் சௌபாக்கியத்தைப் பறித்துக் கொண்டவன் அவன்.

தனக்கு இன்னும் ஆறுநாள் இருக்கிறது.

அவள் குங்குமம் கலைய ஆறுநாள் இருக்கையில் அவள் என்ன நினைத்திருப்பாள்? அது அவனுக்குத் தெரிய வந்து இன்னும் ஆறு நாட்களில் மஞ்சளும் குங்குமமும், மலர்களும், மாங்கல்யமும் இழந்து சௌபாக்கியத்தைப் பறி கொடுக்கப் போகிறோம் என்றநினைவுஎவ்வளவுபெரியவேதனையைக் கொடுத்திருக்கும், என்ன கொடுமை? 'அடி பெண்ணே...! இன்னும் ஆறு நாள்லே உன் சுமங்கலித் தனத்தை இழக்கப் போறே' என்ற உதிரத்தை நீராக்கும் பயமுறுத்தலை விட அவனுடைய பயம் அப்படி ஒன்றும் பெரிதல்ல. 'அந்தப் பத்து நாள்' கெடுவை நினைக்கும்போது இவனுடைய 'கெடு பயம்' ஒன்றுமே இல்லை. இவனாவது பரவாயில்லை. ஒரேயடியாகப் போய்விடப் போகிறான். அவள் புருஷனை இழந்து நடைப் பிணமாய் ஜீவித்து...

இருபத்தாறும் தேதி இரவு எட்டு மணி... சிறைக் கதவைத் திறந்து கொண்டு ஜெயிலர் உள்ளே நுழைய... வெறித்த பார்வையுடன் அமர்ந்திருந்தவன் எழுந்து நின்றான்.

"முருகேசா... நாளை காலை ஐந்து மணிக்கு உனக்கு தண்டனை நிறைவேற்றப் போகிறோம். ஏதாவது கடைசி விருப்பம் இருந்தால்..."

சிறிதும் யோசிக்காமல் சொன்னான்: "தண்டனை நிறைவேத்த தூக்கு மேடைக்கு அழைத்துப் போறப்ப என் நெத்தியிலே குங்குமம் இடணும்..."

அவனை விசித்திரமாகப் பார்த்தார் ஜெயிலர். இதென்ன கோரிக்கை...? அவருக்குப் புரியவில்லை. அவனுக்கே புரியவில்லை ஏன் அப்படிக் கேட்டோம்; அதனால் ஆகப் போவது என்ன என்று. அவன் நினைவு முழுக்க ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது குங்குமம்... சட்டெனச் சொல்லி விட்டான். ஜெயிலர் அவனைத் தீர்க்கமாக ஒரு முறை பார்த்து விட்டுச் சரேலென்று முகத்தைத் திருப்பிக் கொண்டு விரைந்து விட்டார்.



கூட்டத்தில் கேட்டது

போட்டி: 4

அரசியல் கூட்டம் இலக்கியக் கூட்டம், புராணச் சொற்பொழிவு வரவேற்பு, பாராட்டு, வழியனுப்பு விழா என்று எத்தனையோ நிகழ்ச்சிகளில் நீங்கள் கலந்திருப்பீர்கள். வாய்விட்டு சிரிக்கும்படியாகவும் மனதில் தைக்கும்படியாகவும் ஒரு பேச்சாளர் பேசியது உங்கள் நினைவில் பசுமையாக நின்றிருக்கும். சுருக்கமாகக் கீழுள்ள வெற்றிடத்தில் அதை எழுதி இந்த அரைப்பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். பிரசுரிக்கப்படுவனவற்றிற்குப் பரிசு. தவிர ஒருவருக்கு குலுக்கல் முறையில் ஒரு ஸூட் கேஸ். உறையின் மேல் "கூட்டத்தில் கேட்டது" என்று குறிப்பிடவும்.

முடிவு தேதி: 10.6.85

இன்னும் 49 விலையுயர்ந்த ஸூட் கேஸ்களைப் பரிசாக அடைய வாய்ப்புண்டு. வாரம் தவறாது போட்டியில் பங்கு பெறவும்.

வி.ஐ.பி ஸூட்கேஸ் பரிசுத்திட்டம்

என் பெயர்: ....

விலாசம்: ....

....


ANSWERS
UMA FEATURES

மரணம்... மறுநாள் காலை ஐந்து மணிக்கு...

இன்னும் ஒன்பது மணி நேரம்... அவனுடைய அந்திம யாத்திரை அருகே மிக அருகே நெருங்கிக் கொண்டிருக்கிறது. மரணத்தின் காலடியோசை அடி அடியாகக் கேட்கிறது. பீதியால் நாக்கு உலர்ந்து போக... ரோமங்கள் சிலிர்த்து நிலைகுத்தி நின்றன. உடல் முழுவதும் வியர்த்துக் கொட்ட ஆரம்பித்தது. ஒன்பது மணிநேரம் கழித்துப் பலவந்தமாக நிறுத்தப்படப் போகும் இதயத் துடிப்பு அப்போதே நின்றுவிடப்போவதுபோல்படுவேகமாக அடித்துக் கொண்டது. மரணம் என்றால்... அது எப்படி இருக்கும்... ஆயிரக் கணக்கில் ராட்சசர்களும் பேய் பிசாசுகளும் ஒருசேர அவன் மீது பாய்ந்து நீண்ட கூரிய நகங்களால் அவன் குரல் வளையை இறுக்குவது போலா... ஒரே இருள். இருளுக்கு அப்புறம் என்ன? மூடியிருக்கும் கதவுக்கு அப்புறம் நிற்பது என்ன?

தலையை அழுந்தப் பிடித்துக் கொண்டான்... இன்னும் ஒன்பதே மணிகள்... அவன் வாழ்க்கைப் பயணத்தின் கடைசி இரவு அது... இன்னும் ஒன்...ப...

திடீரென்று ஒரு சன்தர்க்குதலுக்கு ஆளானான். ஒளிரிடும் வட்டவடிவமான குங்குமப் பொட்டு பளிரிடும் ஒரு முகம் அவனைப் பார்த்துச் சோகமாய்ச் சிரிக்கத் தொடங்க... அவன் பார்த்துக் கொண்டிருந்த போதே அந்த முகத்தின் கண், காது, மூக்கு, வாய், கன்னம் அத்தனையும் மறைந்து அந்தக் குங்குமப் பொட்டு மட்டும் பெரிதாகி... இன்னும் பெரிதாகி... நாகம் உமிழ்ந்த மாணிக்கமாக அக்கினித் துண்டமாக ஜொலித்துக் கொண்டு அவனை எரிக்க வருவது போல்...

சட்டென்று கண்களை இறுக மூடிக் கொண்டான்.

வேண்டியதுதான்... தனக்கு வேண்டியதுதான்... இந்த மரண பயம் வேண்டியதுதான். மரணத்தைக் காட்டிலும் கொடியதான இந்த 'கெடு' ஏற்படுத்தும் பயங்கரமான வேதனை வேண்டியதுதான்.

அத்தனை பீதியினிடையேயும் மனநிறைவுடன் சிரித்துக் கொண்டான்.

இன்னும் எட்டே மணி... மணல் கடிகாரத்தில் துளித்துளியாக மணல் உருளுவதைப் பார்க்கிற விநோதமான ஒரு சோகம்.

ஆறு... ஐந்து... நாலு... மூன்று...

உலகில் அவன் சுவாசிப்பதற்கு விடப்பட்டிருந்த காலக்கெடு குறையக் குறைய முருகேசனுக்குப் பீதி அடங்கி விட்டது. ஒரு அபூர்வமான சாந்தி வந்து விட்டது. இது எப்படி நேர்ந்தது?

தூக்கு மேடைக்கு அழைத்துச் செல்லப்படும் போது அவன் நெற்றியில் முருகேசனின் கடைசி விருப்பப்படி குங்குமம் வைக்கப்பட்டது. அவன் மரணத்தை எதிர்கொள்ள நிதானமாக முன்னேறிக் கொண்டிருந்தான். அவன் நெற்றியில் வைத்த குங்குமம் மரணத்தின் வெற்றித்திலகம்போல் மிளிர்ந்தது.

"கேள்விகள் அருமை! பதில்கள் புதுமை!"

சுட்டிப் பையன்

'அம்மா, அம்மா, சுட்டிப் பையன் படத்துக்குப் போலாம்மா'

'போகலாம் குழந்தே! நீ மிருகக்காட்சி சாலையில் என்னென்ன பார்த்திருக்கே?

'துதிக்கையை நீட்டும் யானே, காண்டாமிருகம், மான்கள் எல்லாம் பார்த்தேன்'

அதேதான் சுட்டிப் பையனிலும் ஒரு சில முழுக்க காட்டுகிறார்கள். அப்புறம் மீன் காட்சியகத்தில் என்ன பார்த்திருக்கே?'

'விதவிதமான மீன்கள், ஃபைட்டர், கோல்ட் ஃபிஷ், கடல் குதிரை ஆகியவை பார்த்திருக்கேன்'.

'சுட்டிப் பையனிலும் சுகாசினி 'கமெண்ட்' களுடன் இதையெல்லாம் காட்டறாங்க! அப்புறம் நரக லோகம் எப்படி இருக்கும் குழந்தே?'

'இதிலே காட்டறாங்களாம்மா?'

'ஆமா, எண்ணெயில் பொரியும் ஆள், தலையை வாளால் அறுக்கும் கொம்பு முளைத்த ஆசாமிகள்னு காட்டறாங்க. சுட்டிப் பையன் கனவில் பார்க்கிற விஷயம் இது'.

'அப்படின்னு பயம்மா இருக்குமே அம்மா!'

'அதான் இல்லே. எறும்புக் கூடு நகர்ந்து சிரிக்கறது எல்லாம் பொம்மலாட்டம் பார்க்கிற மாதிரி இருக்கு'.

'கதையாவது இருக்காம்மா?'

'கதையா? கண்டைக்காய் சைஸுக்கு ஒரு கதை. சுட்டிப் பையன்தான் சுகாசினியின் பையன். அவனுக்கு ஏதோ ஒரு பயங்கரமான நோய். இன்னும் சில நாட்கள்தான் உயிர் வாழ்வான் என்றெல்லாம் சொல்லி சுட்டிப் பையன் மேல் அனுதாபம் வந்துவிடும் என்று எதிர்பார்க்கிறார்கள். சுட்டிப் பையனே சிரத்தையுடன் நடிக்கலியே'

'கடைசியில் சுட்டிப் பையன் பிழைக்கிறானா?'

'பின்னே? ஒரு பயங்கரமான ரவுடி, சுகாசினி அவனிடம் மாட்டுகிறாள். சுட்டிப் பையன் சாகசங்கள் செய்து அம்மாவைக் காப்பாற்றிவிட்டு மூர்ச்சை நிலையோட ஆஸ்பத்திரியில் சேர்றான். கடைசியில் சுபம்'

'அப்படியானால் போலாமே அம்மா, யானை, மீனெல்லாம் பக்கத்தில் பார்க்கிற மாதிரி இருக்காதா?'

'நீ பார்க்காத யானையா? மீனா? எலியா?'

'3-Dயில் பார்க்கலாமே'

'இந்தப் பைத்தியம்தான் ரொம்பப் பேரை பிடித்து ஆட்டுது. நான் சொன்னா எங்கே கேட்கப் போறே? வா, 3-Dக்காக வேணும்னா போலாம்'.



மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி



மேல்மருவத்தூர் வேப்பமரம், அப்புறம் பாம்பு, அப்புறம் சுயம்புலிங்கம் என்று ஸ்தலபுராணத்தை பெயர் காட்டுவதற்கு முன்பே காட்டிவிடுவதால் நல்ல வேளை படம் ஸ்தலபுராணத்தைப் பற்றி இல்லை என்று ஒரு ஆறுதல் கிடைத்து விடுகிறது.

அப்புறம் தாய்மார்களுக்காக என்று பின்னிப் புனையப்பட்ட ஒரு கதை.

அந்தக் கதையில்—

லாரிடிரைவர்ராஜேஷ்,பராசக்திபக்தைசரிதாவைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு, வதந்திகளை நம்பி, தன் மனைவி கெட்டு விட்டவள் என்று ஒதுக்கி வைக்கிறார்.

செந்தாமரை கடத்தல், கற்பழிப்பு என்று ஆட்டம் போட்டு, முனைவி பராசக்தி பக்தையான கே. ஆர். விஜயாவை ஹிம்ஸிக்கிறார்.

பராசக்தி பக்தை நளினி திடீரென்று பாட்டுப் பாடி கதையில் அறிமுகமாகி கே. ஆர். விஜயாவிற்கு துணை புரிகிறார்.

வதந்திகளைப் பரப்பும் தே. சீனிவாசன் கடைசியில் குருடராகிறார் என்று அடுக்கடுக்காக பஞ்ச தந்திரக் கதை வரிசையில் சேர்க்கத் தகுதியுள்ள ஒரு கதை.

கே. வி. மகாதேவன் மெட்டமைத்திருக்கிறார். மாரி திரிசூலி பாட்டு ஊர் ஊராக அம்மன் திருவிழாக் களிலே லவுட் ஸ்பீக்கரில் அலறப் போகிறது. நெற்றி நிறைய பெரிய குங்குமப் பொட்டுடன் அம்மன் கோலத்தில் கே. ஆர். விஜயா செந்தாமரையை பய முறுத்தும் போது நமக்கும் பயமாக இருக்கிறது.

செந்திலும், வெண்ணிற ஆடை மூர்த்தியும் சிரிக்க வைக்க முயன்று லேசாக ஜெயித்திருக்கிறார்கள்.

அங்கே ராஜேஷ் தூக்கு மேடையில் நிற்கிறார். இங்கே செந்தாமரையை புலி துரத்துகிறது. ராஜேஷ் எப்படி தூக்கிலிருந்து தப்பப் போகிறார், செந்தாமரை எப்படி புலியிடம் மாட்டப் போகிறார் என்று 'லாஜிக்' எதிர்பார்ப்புகளுடன் காத்திருந்தால்—

கடைசியில் அம்மன்தான் வந்து அத்தனை திரு விளையாடலும் செய்தது என்று ஒரு போடு போடு கிறார்களே — அபாரம் (!)

அதுதான் முன்னாலேயே சொல்லிவிட்டோமே, கதை யாருக்காகப் புனையப்பட்டது என்று!

ஜெய்மன்மகன்

என்ன இருந்தாலும் முதலாளி...


திருப்பூர் அலோ

'சனியன் பிடிச்சவனே... இத மொதல்லயே சொல்லித் தொலைக்கறதுக்கு என்னடா...! ஒரு அரை மணி நேரம் கடையைப் பார்த்துக்க சொல்லிட்டு முன்னாடியே வந்ததுக்குள்ள இப்படிப் பண்ணித் தொலைச்சுருக்கியேடா... இன்னும் நாலஞ்சு நாள் கடைய உன்கிட்ட ஒப்படைச்சிட்டுப் போனா இன்னும் என்னென்ன பண்ணித் தொலைப்பியோ...!''

கடைப் பையன் தலையைத் தொங்கப் போட்டான். மெதுவாய் பார்வையை உயர்த்தினான். ''மொதலாளி... வந்து... ஞாபக மறதியா...''

அவன் கை தானாகத் தலையைச் சொறிந்தது.

''சொறியாதே... சகிக்கலே... அப்படியென்ன ஞாபக மறதின்னுதா கேக்கறேன்... ஆள் மட்டும் வளர்ந்து என்ன பண்ணறது... அந்த அளவுக்கு அறிவு வேணும்... முழிக்க



மட்டும் தெரியறது ஆந்தையாட்டம்!''

''நா வேணு மறுபடியும் கடைக்குப் போயி...''

''ஆமா... மறுபடியும் கடைக்குப் போயி... இப்ப கதவை மறந்து திறந்து போட்டுட்டு வந்துடு! போடாங்... கரண்ட் பில் ஒங்கப்பனுடா கட்டறது...? கொஞ்சங்கூட அறிவில்லாம லைட் ஸ்விட்சை அணைக்காம பூட்டிட்டு வந்துட்டு... இப்ப மறந்துட்டேன் முதலாளின்னு தலையைச் சொறியறியே... வெக்கமா இல்ல...''

''மன்னிச்சுக்குங்க... மொதலாளி... கடையப் பூட்டறப்ப கரண்ட் ஆப்பாயிருந்ததால.. மறந்து போச்சுங்க...!''

''மறுபடி மறுபடியும் அதையே சொல்லி எரிச்சலைக் கிளப்பாதே... போ... போ... போயிட்டு கார்த்தால நேரமே கடைக்கு வந்து சேரு. இனிமே இந்த மாதிரி 'கேனத்தனமான' வேலையெல்லாம் செஞ்சியோ... வீட்டுக்குப் போயிட வேண்டியதுதான்!''

கடைப் பையன் முதலாளியை மனத்திற்குள் சபித்துக் கொண்டு நகர்ந்தான்.

*   *   *   *   *

வங்காள விரிகுடாக் கடலிலிருந்து சூரியன் பிதுங்க ஆரம்பித்த நேரம்.

கடையிலிருந்த வீதியின் முனையில் சைக்கிளைத் திருப்பிய போதே அந்த முதலாளி திகைத்தார்.

வீதியைக் கூட்டம் மொய்த்துக் கொண்டிருந்தது.

வீதியோரத்தில் போலீஸ் ஜீப் காத்திருந்தது.

''வாய்யா... கோவாலு... நீ அதிர்ஷ்டக் காரன்யா!'' — பக்கத்துக் கடைக்காரர்.

''என்னய்யா ஆச்சு... காலங்கார்த்தால போலீசு... கூட்டம்!''

''அதை ஏய்யா கேக்கறே... உன் மளிகைக் கடைக்குப் பக்கத்திலிருக்கற முருகேசு கடைல ராத்திரி திருடனுக பூந்து எல்லா சாமானத்தையும் சுருட்டிட்டுப் போயிட்டானுக!''

'கோவாலு'க்குத் திக்கென்றது.

''பயப்படாதே... கோவாலு ராத்திரிப் பூரா உன் கடைக்குள்ளார லைட் எரிஞ்சிட்டிருந்ததால...கடைக்குள்ளே ஆள் இருக்காங்கன்னு உன் கடையை உட்டுட்டானுக... இல்லன்னா உன் கடைக்குள்ளதா பூந்திருப்பானுக...! முருகேசு கடைய விட உன் கடைதானே பெரிசு!''

கடைப் பையனை இரவு ராவித் தள்ளியது ஞாபகம் வந்தது. மனசு எங்கோ வலித்தது.

எதிரில் கடைப்பையன் வந்து நின்றான். ஆனாலும் அதைக் காட்டிக் கொள்ள முடியுமா? என்ன இருந்தாலும் அவர் முதலாளியாயிற்றே!


''ஒருவன் தினமும், இராமாயணம், கேட்டு வந்தான். குருவும், அவனுடைய ஆர்வத்தை மெச்சி, அவனுக்கு நன்கு, இராமாயணத்தை சொல்லி வந்தார். ஒரு நாள் அவன், ''குருஜி எனக்கொரு சந்தேகம்'' என்றான். குருவும், ''கேள்'' — என்று மகிழ்ச்சியுடன் சொன்னார். அவன் கேட்டான். ''இது வரைக்கும் எனக்கு இராமாயணம் சொன்னீங்க. நானும், அதை நல்லா கேட்டு வந்தேன். அதுல, இராமன், இலட்சுமணன், இராட்சசன் என்று சில வார்த்தைகளை அடிக்கடி சொன்னீங்க. எனக்கு என்ன சந்தேகமுன்னு கேட்டா, இராமன் இராட்சசனா, இலக்குவன் இராட்சசனா?''

குரு அமைதியாக பதில் சொன்னார்: ''ரெண்டு பேருமே இல்லே. நான்தான் இராட்சசன்''.

— ஆர். வசந்தகுமார்.

(சுவாமி தயானந்த சரஸ்வதியின் சொற்பொழிவிலிருந்து).






விஞ்ஞான மேதை ஐன்ஸ்டீன் ஒரு சமயம் ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அப்போது அவருக்கு பசி எடுத்தது. எனவே ரயில் நின்றதும் சிற்றுண்டி கடைக்குச் சென்று அங்கே என்ன இருக்கிறது என்று அங்குள்ள வேலையாளிடம் வினவினார்.


வேலையாள் ஐன்ஸ்டீனிடம் தின்பண்டங்களின் பட்டியலை நீட்டினான். அவர் அதை தெரிந்துக் கொள்ள மூக்கு கண்ணாடியை தேடினார். ஆனால் அதை காணவில்லை. எங்கேயோ தவற விட்டிருக்கிறார். பட்டியலை அந்த வேலையாளிடமே கொடுத்து ''நீயே படித்துக்காட்டு'' என்று கூறினார்.

ஐன்ஸ்டீன் ஒரு தற்குறி என்று நினைத்து அந்த வேலையாள் அவரிடம், ''நானும் உங்களைப் போல் படிப்பில்லாதவன்'' என்று கூறினான்.

ஐன்ஸ்டீன் புன்னகையோடு 'அப்படியா?' என்று கேட்டுக் கொண்டார்.

தகவல்: எஸ். முகம்மது யூசுப்.


பயங்கரவாதிகள்
பயங்கரவாத தடைச் சட்டம்
வீரப்பன்
ஜெயலலிதா பற்றி பேச எம்.ஜி.ஆர் தடை



கல்கி

1985 மே 26

மலர் 43 இதழ் 43

குரோதன வைகாசி 13



அமெரிக்காவுக்கு நன்றி!

அப்பப்பா எத்தகைய சூழ்ச்சி! எப்பேற்பட்ட படுபாதகச் செயல்! நினைத்தாலே நெஞ்சு கொதிக்கிறது! கோபத்தில் உடல் பதறுகிறது! ஹரியானா முதல்வரை மட்டுமின்றி பாரதப் பிரதமரையே கூடக் கொலை பண்ணி விட நடந்த பயங்கரச் சதித் திட்டத்தைத் தக்க சமயத்தில் கண்டுபிடித்துச் சதிகாரர்கள் பலரைக் கைதும் செய்துள்ள அமெரிக்க எஃப். பி. ஐ. நிறுவனத்துக்கு நமது நன்றி உரியதாகிறது. இதைத் தொடர்ந்து இந்தியாவைத் துண்டாடவோ கலிஸ்தான் என்ற தனி நாடு அமைக்கவோ நடக்கும் முயற்சிகளுக்கு அமெரிக்கா ஒருநாளும் உடந்தையாயிராது. அத்தகைய முயற்சிகளை முறியடிக்கத் தன்னாலான அனைத்தையும் செய்யும் என்று சந்தேகத்துக்கிடமின்றி தெளிவாக அமெரிக்க அரசு அறிக்கை விட்டிருக்கிறது. இதற்காகவும் அமெரிக்க அதிபருக்கும் மக்களுக்கும் அமெரிக்க ஜனநாயகத்துக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பிரதமரையும் பஜன்லாலையும் கொல்வதற்கான சதி, ஒரு பிரும்மாண்டமான ,,ரகசிய சதித் திட்டத்தின் சிறு பகுதிதான் என்பதை அறியும் போது மேலும் மனம் பதைக்கிறோம். அணுமின் நிலையங்கள் உள்பட பல மின் நிலையங்கள், பாலங்கள், அரசாங்கக் கட்டிடங்கள், ஹோட்டல்கள் முதலியவற்றை வெடிகுண்டு வைத்துத் தகர்க்கும் பயங்கரச் சதித் திட்டத்தைச் சீக்கியத் தீவிரவாதிகள் வகுத்திருக்கிறார்கள் என்பது அம்பலமாகியுள்ளது.

பஞ்சாப் பிரச்னையைத் தீர்க்கும் ஆர்வத்துடன் பிரதமர் நல்லெண்ணம் பிரதிபலிக்கும் விதமாகப் பல காரியங்களைச் செய்தார். சிறையிலிருந்த பலரை விடுவித்தார். பல சலுகைகளை அறிவித்தார். பேச்சு வார்த்தைகளுக்கு அழைப்பு விடுத்தார். ஆனால் வெண்ணெய் திரளும் சமயம் தாழி உடைந்த கதையாக மறுபடி வன்முறையும் சதிச் செயல்களும் தலைதூக்கியுள்ளன. டில்லியில் மட்டுமின்றி நாட்டின் வேறு பல பாகங்களிலும் சதிகாரர்கள் வைத்த குண்டுகள் வெடித்ததில் ஒரு பாவமுமறியாத பொது மக்கள் பலர் மடிந்தனர்.

வன்முறையில் நம்பிக்கை கொண்ட பித்திரன்வாலேயின் தகப்பனார் தலைமையில் தீவிரவாதிகள் அணி திரண்டிருப்பதானது அமைதியாகவும், சுமுகமாகவும் பஞ்சாப் பிரச்னை தீர்வதற்கு 'முட்டுக்கட்டையாக' விளங்குகிறது. இதற்கு மறுபுறமாகப் பேச்சு வார்த்தைகளில் நம்பிக்கை கொண்ட மிதவாதிகளான லோங்கோவால் பிரிவும் உள்ளது.

மிதவாதிகளின் கரத்தை நாம் பலப்படுத்த வேண்டும் என்று பிரதமர் கூறியது சரியே. பேச்சு வார்த்தைகளுக்கு முயல்வது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் வன்முறையாளரையும் பயங்கரவாதிகளையும் கட்டுப்படுத்துவது என்ற பிரதமரின் கருத்தும் நியாயமானதே.

மூன்றாவதாக ஓர் அம்சமும் இருப்பதை நினைவூட்ட விரும்புகிறோம். அது பஞ்சாபில் வாழும் சராசரி சீக்கிய மக்கள். அவர்கள்தாம் உண்மையான எஜமானர்கள். அவர்கள் பிரிவினையை விரும்பவில்லை; வன்முறையையும் நாடவில்லை. அவர்களிடையே மத்திய அரசின், அகாலி மிதவாதிகளின் கூட்டுப் பிரசாரம் வலுக்க வேண்டும். மாநிலத்துக்குள்ள பிரச்னைகளைத் தீர்ப்பதில் பிரதமர் உண்மையான ஆர்வம் காட்டுவதாக அவர்கள் உணர வேண்டும். இதை வெற்றிகரமாகச் செய்தால் பயங்கரவாதிகள் இருக்குமிடம் தெரியாமல் போவார்கள்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா—பாரதியார்.

கலாநிதியின் பார்வையற்ற நிலையில் அவர் செய்திருக்கும் அருஞ்செயல் இளைஞர் ஆண்டில் இளைய தலைமுறைக்கு ஓர் உன்னதமான வழிகாட்டல்.

பட்டிவீரன்பட்டி. கப. மாரிமுத்து.

சென்ற இதழ் தலையங்கத்தில் சரியான நேரத்தில் மூதறிஞர் ராஜாஜி, கென்னடியை சந்தித்த போது "இப்படி செய்ய வல்லரசுகளுக்கு யார் அதிகாரம் அளித்தார்கள்?" என்று கேட்டதைச் சுட்டிக்காட்டியுள்ளீர்கள். தலையங்கத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து ஜனாதிபதி ரேகனுக்கு அனுப்பி மனித குலத்தின் குரல் என்ன என்று அறிவியுங்கள்.

சென்னை—56 டாக்டர் நாவலர்தாசன்.

* வயதான தந்தையர் புதல்வர்களால் எப்படி நடத்தப்படுகிறார்கள் என்பதற்கு பட்டுக் கோட்டை ராஜாவின் "ஒரு அஞ்சு ரூபா இருக்குமா?" உணர்ச்சி மிக்க படப்பிடிப்பாயிருந்தது.

மேலகிருஷ்ணன் புதூர். பிரபா லிங்கேஷ்.

* ராஜீவின் ஆட்சியில் அரசியல் தலைவர்கள் பேசிப் பேசியே பொழுதைக் கழிப்பதை உமாபதியின் கார்ட்டூன் அப்பட்டமாக விளக்கியது.

நீடாமங்கலம். ஜி. ராணி கோவிந்தகுமார்.

* வாசகர் பங்கில் நூலில் தொங்கும் சீப்பு பற்றி எழுதிய ஆண் வாசகரைப் பெண் வாசகராக மாற்றி வந்திருக்கிற கார்ட்டூனும், மறதியின் விளைவுகளில் ஒன்றோ?

சிதம்பரம். என். விக்னேஷ்.

* சினிமாச் சேற்றில் மூழ்கிவிட்டு, அதை விட்டு வெளி வர விரும்பாமல் பிறரை மட்டும், அட உன் சட்டையில் சேறு ஒட்டப் போகிறது, ஜாக்கிரதை என்று எச்சரிக்கிறீரே, வைரமுத்து!

நாகை. வி. சீனிவாசன்.

* பதினைந்து முறை படித்தேன் பொன்னியின் செல்வனை! அந்த ஈடுபாட்டில் அருள்மொழி வர்மன் என்று பெயர் வைக்க ஓர் ஆண்பிள்ளை வேண்டுமென ராகமாலிகா பட்டுப்புடவைப் போட்டிக்கு எழுதி பரிசாக ஒரு பட்டுப் புடவையும் பெற்றேன். 1.5.1985ல் என் எண்ணம் ஈடேறி எனக்கு ஆண் பிள்ளை பிறந்தது. அருள்மொழி வர்மன் என்று பெயர் சூட்டினேன்.

சிவகாசி. எஸ். எஸ். செண்பகராஜன்.

அரசு எந்தத் தவறும் செய்யாதா?



விட்ட மேகஜி

* மின்னல் சாதனைகள் பற்றிய கப்ரபாலனின் கட்டுரை சுவையாக இருந்தது.

வடசென்னிமலை. வி. ராதாகிருஷ்ணன்.

* பட்டுப்புடவைத் திட்டம் முடிந்து, சூட்கேஸ் திட்டம் உருவானது ஆசிரியர் 'கல்கி' காலத்திலிருந்தே கல்கி வாங்கும் பழம் பெரும் வாசகனுகிய எனக்கு மகிழ்ச்சியளித்தது. வாசகர் பங்கில் விடாமல் பங்கேற்று பிரசுரிக்கப்படாத தாபம் எரிச்சலின் சிகரத்தில் நிறுத்தியிருந்தது. பரவாயில்லை, அடுத்த போட்டியில் பார்ப்போம்.

திருவாடானை. எஸ். நாகசுந்தரம்.

* நாளை வரப்போகும் நகரம் கட்டுரையில் நாளைய நகரம் இன்றே படம்பிடித்துக் காட்டப்பட்டிருந்தது.

ஓட்டேரி. இரா. செல்வகுமார்.

* மறதியின் விளைவாக வாசகர்களுக்கு ஏற்பட்ட விபரீத அனுபவங்கள் நெஞ்சில் முள்ளாய்த் தைத்தன.

மதுரை—1. பி. எல். பரமசிவம்.

* எங்கள் பகுதியில் பகல் 12 மணி முதல் மாலை 4 மணி வரை மின்சார வெட்டு என்று உத்தியோக பூர்வமாய் அறிவித்துவிட்டு, மீதி நேரங்களிலும் மின்சாரம் வந்தால் சரி, இல்லாவிட்டால் கண்டு கொள்ளக் கூடாது என்று ஒரு நடைமுறை. நுகர்வோர் மின்சார இணைப்பு பெறும்போது மின்வாரியத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்கிறோம். அதன் விதிகளெல்லாம் மின்சாரம் நுகர்வோரைக் கட்டுப்படுத்துகிறதே ஒழிய மின்வாரியத்தைக் கட்டுப்படுத்தவில்லை. அரசன் எந்தத் தவறும் செய்ய மாட்டான் என்ற பழைய சர்வாதிகாரப் போக்குத்தானே ஜனநாயகத்திலும் தொடர்கிறது?

அனந்த நாடார்குடி. எம். ஜே. மார்ட்டின்.

(கடைசிக் கடிதம் பரிசு பெறுகிறது)

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032· (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani Editor: K. Rajendran

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka



GLC.203.12 Tam